www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 29-04-1994

உள்ளே...

1. தென்றலாக வீசிய புயல்
- லெப்.கேணல் நரேஸ்
2. இலட்சிய வாழ்வில் ஒரு துளி
3. டி.பி. தூர எறிந்த தூண்டிலை சுதந்திரக் கட்சி தூக்கிவிட்டது
4. தென் தமிழீழம் : ஒரு சிறைப்பட்ட வாழ்வு
5. சிறுகதை : ஒரு பாடல் அரங்கேறுகிறது
6. தமிழீழப் பெண்கள்
7. புலிகளின் சமாதான சமிக்கைக்கு சிங்கள அரசின் பதில் சமிக்கை என்ன?

# குடாநாட்டைச் சுற்றி படை குவிப்பு போர்முனைத் தீர்வு உறுதியாகிறது

## மட்டக்களப்பு - மன்னாரில் அச்சுறுத்தல் நடவடிக்கைகள்

சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. - விஜேயதுங்கா போர்முனைத் தீர்வுக்கான நடவடிக்கைகளிலும், அச்சுறுத்தல் செயல்களிலும் சிறீலங்காப் படைகளை ஈடுபடுத்தி வருகின்றார்.

அம்பாறை பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த சிறீலங்கா அதிரடிப்படையினரை மட்டக்களப்பில் குடிசனநெருக்கம் நிறைந்த பகுதிகளை நோக்கி நகர்த்தும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அம்பாறை பெரியநீலாவணை முதல் மட்டக்களப்பு ஆரையம்பதி வரை உள்ள பதினாறு மைல் நீளப்பிரதேசத்தில் சிறீலங்கா அரசாங்கத்தால் நிலை கொள்ள வைக்கப்பட்டிருந்த அதிரடிப்படையினரை, சிறீலங்கா அரசாங்கம் மட்டக்களப்பு மாவட்டம் நோக்கி நகர்த்துவதன் மூலம் தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

### பனிச்சங்கேணியில் அரச பயங்கரவாதம்

சிறீலங்கா அரசாங்கத்தின் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளின் வெளிப்பாடாக மட்டக்களப்பு வாகரைப் பகுதி பனிச்சங்கேணியில் சிறீலங்கா இராணுவத்தினர் நடாத்திய அரச பயங்கரவாதத்தால் முருகன் கோவிலடி பகுதியில் இருந்த அறுபது வீடுகளில் ஐம்பத்தைந்து வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் ஒரு முதியவர் உயிரிழந்து மற்றும் பலர் காயமடைந்துள்ளனர். இந்த இனஅழிப்பு நடவடிக்கைகளை தனது ஆயுதப்படைகளே செய்துள்ளன என்பதை சிறீலங்கா எவ்வித தயக்கமும் இன்றி ஏற்றுக்கொண்டுள்ளது. இதேவேளை, மட்டக்களப்பு பிரதேசத்தில் மண்டூர் பகுதியில் நடந்த குண்டுவெடிப்பு ஒன்றையடுத்து சிறீலங்கா அரசாங்கத்திற்கும் அதன் ஆயுதப்படைகளுக்கும் துணைப்படையாக இயங்கிவரும் ஈ. பி. ஆர். எல். - எவ். குழுவினர் சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு இராணுவ விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

### மன்னாரில் அச்சுறுத்தல் நடவடிக்கை

மன்னார் பண்டிவிரிச்சான் பகுதியில் சிறீலங்கா விமானப்படை

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# தமிழ்மக்களின் பல மரணங்களுக்கு சிறீலங்கா விமான - கடற்படையினரே காரணம்

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

"கண்மூடித்தனமானதும், அளவுக்கதியமான அளவிலும் படைப் பலத்தைப் பிரயோகித்ததன் மூலம், தமிழ் மக்களின் பல மரணங்களுக்கு சிறீலங்காக் கடற்படையும் விமானப்படையும் காரணமாக இருந்துள்ளன. படைகளின் இவ்வாறான தாக்குதல்களால் 250 க்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். இதில் கிளாலியில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான பொது மக்கள் பலியாகியுள்ளனர். அத்துடன், அக்டோபர், நவம்பர் மாதங்களில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுகள் அதிகரித்தமையால் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். சிறீலங்காவில் வெளிநாட்டு அகதிகளோ அல்லது இடம்பெயர்ந்தோர்களோ நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. ஆனால் 1993 இல் உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் தொகை 6 இலட்சத்து 20 ஆயிரம். கடந்த வருட ஆரம்பத்தில் 70 ஆயிரத்துக்கும் மேலான தமிழர்கள் தென்னிந்திய அகதி முகாம்களில் இருந்தனர். இவர்களில் ஏழாயிரம் பேர் கடந்த ஆண்டு தமிழக அரசால் சிறீலங்காவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். கடந்த பத்து வருடத்தில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் மேற்கு ஐரோப்பாவுக்கும் மற்றும் வட அமெரிக்காவுக்கும் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்."

இவ்வாறு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் 1993 இல் சிறீலங்கா மனித உரிமைகள் மீறல் தொடர்பாக விடுத்த அறிக்கை

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# கொழும்பு குண்டு வெடிப்புக்கு விடுதலைப் புலிகள் மேல் பழிபோட்டு சர்வதேச சிந்தனையை திசைதிருப்ப முயற்சி

சர்வதேச சமூகம், சிறீலங்காவில் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக கொடுத்துவரும் அழுத்தங்களை திசை திருப்பும் முயற்சியில் சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா கடுமையாக முயற்சித்து வருகிறார். இதனடிப்படையிலேயே கொழும்பு குண்டுவெடிப்புகளுக்கு விடுதலைப் புலிகள் மேல் பழி போட்டு தமிழீழ மக்களின் துன்பங்கள் குறித்த சர்வதேச சிந்தனையை மழுங்கடிக்க சிறீலங்கா முயற்சிக்கிறது.

இதுகுறித்து விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினரும் சர்வதேச பேச்சாளருமான திரு. லோரன்ஸ் திலகர், "சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளுக்கு உள்ள நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் சிறீலங்கா அரசாங்கம் திட்டமிட்டு விடுதலைப் புலிகள் மேல் இச்சம்பவத்துக்கான பழியைச் சுமத்துகிறது. வடக்கில் பாரிய தாக்குதலுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசாங்கம், தனது செயற்பாட்டுக்கு நியாயம் கற்பித்து சர்வதேச ரீதியாக ஏற்படக்கூடிய நெருக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கிலேயே இப்ப

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# சிறப்பு வைத்தியர்கள் புலம்பெயர்வு வடபகுதி நோயாளர் அவதி

வடபகுதியைச் சேர்ந்த சிறப்பு வைத்தியர்கள் தென் பகுதிக்கும், புலம்பெயர்ந்து வெளிநாட்டுக்கும் சென்றிருப்பதால் வடபகுதி நோயாளர்கள் சிறப்பான வைத்திய தேவையைப் பெறமுடியாமல் அவலப்படுகின்றனர் என்று, யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் சில நோய்களினால் கடுமையாகப் பாதிப்படைந்துள்ள தமிழ் நோயாளர்கள் பல சிரமத்தின் மத்தியில் தென் பகுதிக்கு சிகிச்சை பெறச் செல்ல வேண்டியுள்ளது. ஆனால், இங்குள்ள தமிழ் சிறப்பு வைத்தியர்கள் கொழும்பிலும் தென்பகுதியின் வேறு இடங்களிலும் வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

பல வைத்தியர்கள் வசதிக்காகவும் உல்லாசத்திற்காகவும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இதனால், நோயாளர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பல்வேறு நோய்களை கண்டறிந்து குணப்படுத்துவதற்கான வைத்தியர்கள் பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவுகிறது.

இங்கு வந்து சேவையாற்ற விரும்பும் சிறப்பு வைத்தியர்களை அனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் தயார் என்று சொல்கிறது. ஆனால், வைத்தியர்கள் தான் இங்கு வந்து சேவை புரிய தயங்குகிறார்கள் என்று அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சமீபத்தில் புற்றுநோய்க்கான

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# தமிழர் தாயகத்தை துண்டாடுவதில் விஜயதுங்கா பிடிவாதம்

## சர்வசன வாக்கெடுப்புக்கு திகதி அறிவிப்பு

தமிழர் தாயகத்தை துண்டாடுவதில், பௌத்த சிங்கள பேரினவாத வெறியிலுருவான சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா பிடிவாதமாக உள்ளார். பங்குனி 31ம் திகதி வடக்கிலும் வைகாசி 19 இல் கிழக்கிலும் சர்வசன வாக்கெடுப்பை நடாத்தப் போவதாக சிறீலங்கா ஜனாதிபதி வர்த்தமானி மூலம் முன்னர் பிரகடனப்படுத்தியிருந்தார். ஆனால், தேர்தல் தோல்விகளை அடுத்து இதுகுறித்து மௌனமாக இருந்த சிறீலங்கா ஜனாதிபதி தற்போது, வைகாசி 26ம் திகதி கிழக்கிலும், ஆடி 16 ஆம் திகதி வடக்கிலும் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும் என வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

"குடியொப்பம்" நடாத்துவதற்கான சூழ்நிலை இப்பிரதேசங்களில் இல்லையென்பது சிறீலங்கா ஜனாதிபதிக்கு நன்கு தெரியும். இருந்தபோதிலும் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடப்பாட்டுக்குரிய பதவியில்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# சிறீலங்காவில் இராணுவ நிர்வாக வெறியால் "குடாநாட்டுக்குள் தேவையற்ற மரணங்கள்

சிறீலங்கா, தமிழீழப் பிரதேசங்கள் மீதான இறைமையை முற்றாக இழந்த நிலையில், ஆயுத ஆக்கிரமிப்பு மூலம் தமிழ் மக்களை ஆட்சி செய்வதாக உலகை ஏமாற்றி வருகிறது. இதனால் தமிழ்ப் பிரதேசங்கள் நிர்வாக ரீதியாக புறக்கணிக்கப்பட்ட நிலையில், மக்கள் தேவையற்ற முறையில் மரணங்களை தழுவிவருகின்றனர்.

### ஆனைக்கோட்டை சைக்கிள் விபத்து

தமிழ்ப்பிரதேசங்களின் போக்குவரத்துப் பாதைகள் வான்வழிக்குண்டு வீச்சால் குழிகளுடன்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## நல்லெண்ணம் உடையோர்க்கு!

தமிழீழ மக்கள் மீது இன அழிப்பொன்றை நடத்துவதற்கான போர்ச்சங்கை சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்கா ஊதிக்கொண்டிருக்கின்ற வேளையில், சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் டாக்டர் நியன்ஸி பெரேரா, நூறு பிக்குமார்களின் யாழ். நோக்கிய நல்லெண்ண விஜயமொன்றுக்கு மே மாதமளவில் தாம் திட்டமிட்டு வருவதாக அறிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதை பிக்குமார் எதிர்க்கின்றார்கள் என்றும், போர் மூலமாகத் தீர்வு காண்பதையே அவர்கள் விரும்புகிறார்கள் என்றும், வடபகுதி மக்கள் மத்தியிலே நிலவும் அபிப்பிராயத்தைப் போக்கி இனப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் அரசியல் தீர்வு காண்பதையே பௌத்த பிக்குமாரும் விரும்புகிறார்கள் என்பதை, வடபகுதி மக்களுக்கு உணர்த்த வேண்டுமென்பதே இப் பிக்குமாரின் அக்கறை என்றும் இவ் விஜயத்துக்கான நோக்கத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.

போரை, பிக்குமார் வெறுக்கின்றார்கள் என்றால் போரைத் தொடங்கியவர்களிடம், முதலில் அதனை நிறுத்தும்படி கோர வேண்டும். வெள்ளவத்தை ஞானநபிவங்ச தேரோ, "முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாதான் இந்த யுத்தத்தை ஆரம்பித்து வைத்தவர் ஆவார். எனினும் நாட்டின் இன்றைய நிலைக்கு ஆட்சி நடத்திய அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும். இந்நாட்டின் அரசியல் கட்சிகளே மக்களை இந்த நிலைக்கு பேதப்படுத்தியுள்ளன. இதற்கான பொறுப்பை அரசியல் கட்சிகள் அனைத்தும் ஏற்க வேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்கள் தமது அதிகாரங்களைப் பலப்படுத்த மட்டுமே செயல்படுகின்றனர்" என மகாவலி சதுக்கத்தில் கூறிய வார்த்தைகள் யார் இந்தப் போரின் சூத்திரதாரிகள் என்பதை பிக்குகளுக்கும், சிங்கள மக்களுக்கும், உலகுக்கும் தெளிவுபடுத்தியுள்ளன.

அத்துடன், பௌத்த சிங்கள பேரினவாதிகள் டிங்கிரி பண்டா விஜயதுங்கா தலைமையில் தமிழ் இன அழிப்புக்கு தருணம் பார்த்து தவித்துக் கொண்டிருக்கும் செயற்பாட்டை அங்கீகரிக்கக் கூடிய வகையில் சிங்களப் புத்திஜீவியான களனிப் பல்கலைக்கழக தொல்பொருளியல் துறைப் பேராசிரியர் அபயா ஆரியசிங்கா போன்றோர், "இலங்கைத் தீவு முழுவதுமே சிங்கள தேசம். தமிழர்கள் வந்தேறு குடிகள்" எனக் கூறி சிறீலங்கா ஜனாதிபதியின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்து வருகின்றனர்.

இந்நேரத்தில் "விஜயனின் பரம்பரை என்று கூறுவதில் சிங்களவர் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். விஜயன் எங்கிருந்து வந்தான்? இந்தியாவிலிருந்து தான் விஜயன் வந்தான் என்பது, சிறுபிள்ளைகளுக்கும் தெரியும். இந்நிலையில் சிங்களவர்கள் இனவாதத்தைக் கிளறி வாழ்வது வெட்கமடைய வேண்டிய செயலாகும்" எனும் ஞானநபிவங்ஞ தேரோவின் கூற்று விஜயதுங்காவுக்கும், அவர் அடிவருடும் சிங்கள பௌத்த புத்திஜீவிகளுக்கும் அவர்கள் அரசியல் சுயநலங்களுக்காக கற்பிக்க முயலும் போலி நியாயங்களின் உண்மைத்தன்மையை விளக்குகிறது.

மேலும் இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் பௌத்த பிக்குமார் போர்முறைத் தீர்வினை நாடி நிற்கின்றார்கள் என்பதற்கு, ஒரு சில பௌத்த பிக்குகளின் பேச்சுமட்டும் காரணமல்ல. அநாகரிக தர்மபால போன்றோர் காலம் முதல் இன்றுவரை சுமார் ஒன்றரை நூற்றாண்டாக பௌத்தமதத் தலைமைப்பீடம் இனவெறி மதவெறியை விதைத்து வளர்த்த வரலாறும் காரணமாகிறது. பௌத்த பிக்குகள் இலங்கைத் தீவில் வெறுமனே புத்தரைச் சரணடைந்து, சங்கத்தைச் சரணடைந்து, தர்மத்தைச் சரணடைந்து வாழும் துறவிகளாக வாழவில்லை. மாறாக இனவெறியைச் சரணடைந்து, இனக்கொலையைச் சரணடைந்து அரசியல் அதர்மம் இலங்கைத் தீவில் தலைவிரித்தாடக் காரணமான அழுத்தக் குழுக்களாகவும் திகழ்ந்தனர்; திகழ்கின்றனர்.

எனவே இலங்கைத் தீவில் அமைதியான தீர்வு ஏற்பட வேண்டுமானால், போரைத் தொடங்கிய சிங்கள அரசாங்கத்திற்கும் பௌத்த பேரினவாதிகளுக்கும் மனமாற்றம் ஏற்பட வேண்டும். எந்த அமைப்புக்களால் பிரச்சினையைத் தீர்க்கலாம் என ஆராய்வதை விட, எந்த அமைப்புக்குள்ளாலும் நீதியை சத்தியத்தை நிலைநாட்ட முடியும் என்கிற மனமாற்றம் தேவை. அமைப்பு முக்கியமல்ல; ஆள்பவரின் மனநிலை மாற்றம் தான் முக்கியம். இதனை நல்லெண்ணமுடையோர் செய்வார்களானால், மனமாற்றம் முறை மாற்றத்தைக் கொண்டுவரும். முறை மாற்றம் அமைப்பு மாற்றத்தைத் தரும். அமைப்பு மாற்றம் அமைதி வாழ்வைத் தரும். இதை விடுத்து மனமாற்றமில்லாத மனிதரிடம், யாழ். நகர் வந்து மீளும் எவர் போய் எதைக் கூறினாலும் அது புறக்குடத்தில் வார்த்த நீரின் கதையாகவே இருக்கும். ஆயினும் நல்லெண்ண விஜயமென யாழ். வரவிரும்பும் எவரையும் 'வந்தாரை வரவேற்கும் தமிழ் மக்கள்' எப்போதும் தம் பண்பாட்டு வழி நின்று வரவேற்க ஆயத்தமாகவே உள்ளனர். எவர் வந்தாலும் அவர்களிடம் தமிழர்கள் கேட்பது, பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்குங்கள் என்பது ஒன்றே. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெளிவாகக் கூறிய, தமிழர் தாயக உரிமை பூகோள ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழர் சுதந்திரத்துடனும் பாதுகாப்புடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை தோற்றம் பெற்றாலே உண்மை அமைதி மலரும். நல்லெண்ணமுடையோரே! இதற்காக உழைப்பது உங்கள் கடமை. ■

# கிழக்கில் முதலைக் கண்ணீர் வடக்கில் உருத்திர கோலம்

## சிறீலங்காவின் கபட நாடகம்

சிறீலங்கா அரசாங்கத்தின் இன அழிப்பு நடவடிக்கைகளின் விளைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் குடும்பங்களில் ஒரு இலட்சத்து ஆறாயிரம் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. 43, 453 வீடுகள் வாழ முடியாத நிலையில் உள்ளன. 160 பாடசாலைகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. சுமார் நாலாயிரம் கோடி ரூபாவுக்கு மேல் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தனை அழிவுகளுக்கும் சேதங்களுக்கும் சிறீலங்கா பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கமே முழுப்பொறுப்பு.

இது இப்படியிருக்க சமீபத்தில் சிறீலங்கா அரசாங்கத்தின் 16 அமைச்சர்கள் புடைசூழ மட்டக்களப்புக்கு விஜயம் செய்த சிறீலங்காவின் புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநல அமைச்சர் பி. தயாரத்னா புனர்வாழ்வுத் திட்டங்களில் மட்டக்களப்புக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென முதலைக்கண்ணீர் வடித்துள்ளார்.

'கள்வனே நீதிபதியான' கதையாக தங்களாலேயே மேற்கொள்ளப்பட்ட அழிவுகளைக் காட்டி புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற பெயரில் பெருந்தொகைப் பணத்தை வெளிநாடுகளில் கடனாக -நிவாரண நிதியாகப் பெற்று ஆயுதக் கொள்வனவு செய்வதே சிறீலங்கா அரசாங்கத்தின் உள்கிடக்கை.
இதற்கிடையில் வடக்கு -கிழக்கு மாகாண புனர்வாழ்வு மீளக் குடியேற்ற நடவடிக்கை தொடர்பான சிறீலங்காவின் அமைச்சரவை உப குழுத் தலைவருமான பி. தயாரத்னா அவர்களுக்கு வடக்கில் சிறீலங்கா அரசாங்கம் பேரழிவு ஒன்றை, பாரிய யுத்தமொன்றைச் செய்வதற்கு உருத்திர கோலம் கொண்டு வருவது தெரியாத ஒன்றல்ல. சிறீலங்கா அரசாங்கம் தனது படைபலத்தால் தமிழின அழிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதனை ஆதரிக்கும் இந்த புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சர், 'அடித்தவனே புண்ணுக்கு மருந்து போட்ட கதையாக' அழிவுகளை ஆதரித்துவிட்டு பின்னர் முதலைக் கண்ணீர் வடிக்கும் கபட நாடகத்தை ஆடி வருகின்றார். ■

# ஆட்சித் தவறுகளை மறைக்க "புலிகளுக்கு தடை" கோரும் ஜெயலலிதா

வறிய மக்களுக்கு நல்லாட்சி தருவதாக மக்களை நம்ப வைத்து தமிழக சட்டசபையின் முதலமைச்சராகப் பதவியேறிய செல்வி ஜெயலலிதா தனது ஆட்சிக்காலத்தில், மக்கள் நல்லாட்சியை வழங்காத நிலையில் தமிழகத்தில் மக்களிடையே ஜெயலலிதா அரசின் மீது அதிருப்தி நிலவிவருகிறது.

இதனை சமாளிப்பதற்கு வழிதெரியாது தவிக்கும் ஜெயலலிதா, 'புலிகள் பயம்' என்கின்ற ஒரு பிரேமையை மக்கள் முன் ஏற்படுத்தி தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார். முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் டிக்சிற், தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் மையசக்தி என்ற கருத்தை வெளியிட்டமை, ஜெயலலிதாவுக்கு தனது பிரேமையை அது பாதித்துவிடும் என்ற அச்சத்தைக் கொடுத்துள்ளது.

இதனால், அவசர அவசரமாகத் தமிழ் நாட்டு சட்டசபையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்க வேண்டும் என பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார். இதற்கு ஆதரவாக தமிழகக் காங்கிரசும், அண்ணா தி. மு. க. வும் வாக்களித்துள்ளன. தி. மு. கவின் கருணாநிதியின் அணியும், வை. கோபாலசாமியின் அணியும் வாக்களிப்பில் நடுநிலை வகித்துள்ளன.

இது ஒருபுறம் இருக்க வை.- கோபாலசாமி சென்னையில் நடாத்திய பேரணியில் இலட்சக் கணக்கில் மக்கள் கலந்துகொண்டனர். இதில் பேசிய வை. கோபாலசாமி, ஜெயலலிதாவே தனது முதல் அரசியல் எதிரி எனக்கூறியுள்ளார். இதனால் ஜெயலலிதா அடுத்த தேர்தலில், வை. கோபாலசாமியின் தி. மு. க. அணியும் தனக்கு பலம் பொருந்திய எதிர்ச்சக்தியாக திகழக்கூடுமெனக் கருதுவதாகவும், இவைகளையெல்லாம் திசை திருப்புவதற்காக 'புலிகள் தடை' சட்டத்தை ஏதோ தமிழக மக்களின் அத்தியாவசியச் சட்டம் போல நினைத்து நிறைவேற்றியதாகவும் தமிழக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

# 20000 பேரை இழக்க அஞ்சியே இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்தோம்

**- டி. பி. விஜயதுங்கா**

"இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நானும் ரொனிடிமெல்லும் காமினி திசநாயக்காவுமே அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு உறுதுணையாகச் செயற்பட்டோம். அந்நேரம் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த கொப்பேகடுவ உட்பட முப்படை தளபதிகளும் வடபகுதி இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமானால் 20,000 உயிர்களை இழக்க வேண்டும் என அப்போது தெரிவித்தனர். அந்த இழப்புக்கு மத்தியில் யுத்தம் தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாத நிலை தோன்றும் என அவர்கள் அறிவித்தல் தந்தார்கள். யுத்தம் செய்பவர்களே யுத்தம் செய்வது கஸ்டமான நிலையெனத் தெரிவித்தபோது நாம் என்ன செய்வது? இந்த நிலையில்தான் ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுத்தோம். எமது நிலையை நன்கு புரிந்த இந்திய பிரதமர் பயங்கரவாதத்தை ஒழிக்க ஒத்துழைப்பு தருவதாக எம்மிடம் கூறும்போது புத்திமிகு தலைவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கையென்ன? புத்திமிகு தலைவர் எடுத்த நடவடிக்கை தொடர்ந்து இருந்திருக்குமாயின் ரஞ்சன் விஜேரெட்ணா, கொப்பேகடுவ, லலித் அத்துலத் முதலி, விமல விஜயரட்ணா, பிரேமதாசா போன்றோர் இன்றும் உயிருடன் இருந்திருப்பார்கள்".

இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்கா மாத்தறையில் கூறியுள்ளார். ■

# மலத்தியோன் எடுத்துவரப்படாவிடில் யாழ்ப்பாணத்தில் மலேரியா பரவும்

**- வைத்திய வட்டாரங்கள் கவலை**

யாழ்ப்பாண சுகாதார அத்தியட்சகர் பிரிவினரால் மலேரியா நுளம்பு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான மலத்தியோன் மருந்து விரைவில் எடுத்துவரப்படாதபட்சத்தில் யாழ்ப்பாணப் பகுதியெங்கும் மலேரியா காய்ச்சல் பரவுவது தடுக்க முடியாததாகிவிடும் என்று வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.
கொழும்பிலிருந்து மலத்தியோன் எடுத்துவரப்படுவதில் காட்டப்படும் அசிரத்தையும் அக்கறையின்மையும் இப்பிராந்திய மக்களை நோயாளிகளாக்குவதற்கே வழிவகுக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் கவலைகொண்டுள்ளன.
யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் தெளிக்கப்படுவதற்காக சுமார் 40 பெட்டிகள் மலத்தியோன் எடுத்து வரப்பட்டுள்ளபோதும், இது தேவைப்படும் அளவில் மிகவும் சொற்பமானதே எனவும் கூறப்படுகின்றது.
யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக மலத்தியோன் எடுத்து வரப்படவில்லை என்பதும், யாழ்ப்பாணப் பகுதியில் நுளம்புத் தொல்லையும் மலேரியா காய்ச்சலும் தீவிரமாகியிருப்பதும் தெரிந்ததே. ■

# திருகோணமலை வடமாகாணத்துடன்!

தமிழர் தாயகத்தைப் பிரிப்பதில் துடியாய் துடித்துக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசாங்கம், தாக்குதலில் மட்டும் தமிழர் தாயகத்தை எப்போதுமே ஒரு முழுத்தொகுதியாக கருதி வருகிறது.

வவுனியா, முல்லைத் தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியதாக வடபகுதி இராணுவ வலயம் இருந்தது.

தற்பொழுது திருகோணமலையையும் பாதுகாப்பு மாவட்டமாகக் கருதி, வடபகுதி இராணுவ வலயத்துள் அதனையும் சிறீலங்கா அரசாங்கம் இணைத்துள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன அடக்குமுறைக்கு எதிராக தமிழ்ப் பெண்கள் ஏந்தியுள்ள ஆயுதம் பெண் அடக்குமுறையையும் நீக்கும்

## -- கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை

"தமிழீழப் பெண்கள் ஆயுதமேந்தி இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுவதினால், அவர்களது பெண் அடிமைத்தனத்திற்கு எதிரான குரலும் ஓங்கி ஒலிக்கின்றது."

இவ்வாறு, கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை, அனைத்துலகப் பெண்கள் தினத்தையொட்டி, வடமராட்சி கிழக்கிலுள்ள வத்திராயனில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.

இக்கூட்டம் கடற்புலிகளின் மகளிர் அணி உறுப்பினர் செல்வி அரசி தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கடற்புலிகளின் மகளிர் அணித்தளபதி செல்வி நளாயினி தேசியக் கொடியினையும், கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. விநாயகம் கடற்புலிகளின் கொடியினையும் ஏற்றி வைத்தார்.

கடற்புலிகளின் அரசியல் பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் தீபம் ஏற்றி வைத்தார்.

இக்கூட்டத்தில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை தொடர்ந்து உரையாற்றும்போது, 10 வருடங்களுக்கு முன்னர் தமிழ்ஈழத்தில் பெண்கள் இருந்த நிலையில் இன்று பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 1986-ம் ஆண்டு தமிழ் ஈழ யுவதிகள் ஆயுதமேந்தி போராட்டத்தில் இணைந்தபோதும், 1992-ம் ஆண்டு தமிழ் ஈழப்பெண்கள் கடலில் இறங்கி நீச்சல் பழகவும், படகு ஓட்டகற்றபோதும் இதனைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா என்ற ஐயம் ஏற்பட்டது.

இன்று கிளாலிக் கடல்நீரேரியில் பெண்கள் படகுகளில் சென்று பாதுகாப்பளிக்க, மக்கள் பயணம் செய்வதனையும் எதிரியின் முகாம்கள் அமைந்துள்ள எல்லைகளில் பெண்கள் ஆயுத மேந்தி எதிரியின் வருகையை எதிர்பார்த்து, வழிமேல் விழி வைத்து காவல் புரிவதனையும் காணக்கூடியதாகவுள்ளது, தமிழ் ஈழப் பெண்கள் ஆயுதமேந்தி இன ஒடுக்கு முறைக்கு எதிராகவும் போராடுவதினால், அவர்களது பெண் அடிமைத்தனத்திற்கு எதிரான குரலும் இன்று ஓங்கி ஒலிக்கின்றது.

மதத் துறவிகளும், கல்விமான்களும் பேச்சுவார்த்தை பற்றியும், இன ஐக்கியம் பற்றியும் பேசும் போது சிறீலங்கா அரசு நாட்குறித்து வடபகுதி மீது பெரும் படையெடுப்புக்குத் தயாராகின்றது. வெளிநாடுகளிலிருந்து 500 கோடி ரூபா பெறுமதியான யுத்த தளபாடங்களை இறக்குமதி செய்கின்றது. இந்நிலையில் பேச்சுவார்த்தையும், யுத்த நிறுத்தமும், பத்திரிகைகளில் செய்தி வருவது போன்று எப்படிச் சாத்தியமாகும்?

எனவே மக்கள் இவைகளை நம்பி ஏமாறக்கூடாது. யுத்தத்தினால் மக்கள் படும் இன்னல்களை நாம் உணராதவர்களல்ல. எமது நேசக் கரத்தினை அரசு மீது நாம் நீட்டி நிற்பதினால் தான் யாழ்வரும் நல்லெண்ணக் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்துவிட்டு, அப்பாவித் தமிழ் மீனவர்களை சிறீலங்கா கடற்படையினர் மூலம் கடலில் சுட்டுக் கொல்கின்றார்கள். கடந்த மூன்று மாதங்களில் சுமார் 40 தமிழ் மீனவர்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்கள். கடற்படையினர் சுட்டுக் கொல்லவும், மீனவர்கள் மறுநாள் தொழிலுக்குச் செல்லவேண்டியுள்ளது. அவர்களின் வீடுகளில் அடுப்பு புகைக்க வேண்டுமானால், அவர்கள் தொழிலுக்குச் செல்லத்தான் வேண்டும். இராணுவ நடவடிக்கை காரணமாக கரையோரத்தை அண்டிய பகுதிகளிலேயே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பத்து அல்லது பதினைந்து அடி நீளமான குடிசைகளிலே தமது அன்றாட கருமங்களை ஆற்றி வருகின்றார்கள்.

1983-ம் ஆண்டு பல இளைஞர்களும், யுவதிகளும் எமது இயக்கத்தில் இணைய முன் வந்தார்கள். அப்போது அவர்கள் அனைவரையும் உள்வாங்கும் நிலையில் எமது தொழில் நுட்பம் வளர்ந்திருக்கவில்லை. இப்போது எமது இயக்கம் தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்திருக்கின்றது- எதிரியோடு போராடுவதற்கு போராளிகளை உருவாக்கவேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. விநாயகம், கடற்புலிகளின் மகளிர் அணித்தளபதி செல்வி நளாயினி, கடற்புலிகளின் அரசியல் பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இறுதியில் கடற்புலிகளின் கடற்படைப் பயிற்சிக் கல்லூரி மாணவிகளின் வில்லுப்பாட்டு, மற்றும் கலை நிகழ்ச்சிகள் வடமராட்சி கோட்ட கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றன.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கடற்புலிகளின் கடற்படைப் பயிற்சிக்கல்லூரி மாணவிகளின் அணிநடையும் இடம்பெற்றது. ■

# எம் மண்வளங்களிலிருந்து உச்சப் பயன்பெற வேண்டும்

## - மன்னார் மாவட்டத் தளபதி

"நாம் இம்மண்ணில் உள்ள வளங்களை இனங்கண்டு அதிலிருந்து அபிவிருத்தியை, உச்சப் பலனை அடைய வேண்டும். இதற்காகவே தேசியத் தலைவரினால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்துடன் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட முன்வரவேண்டும்" என மன்னார் மாவட்டத் தளபதி திரு. ந. லக்ஸ்மன் அவர்கள் மன்னார் மாவட்டத்தில் பண்டிவிரிச்சான் அ. த. க. பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கு, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வதிவிட வேளாண்மைப் போட்டியை மன்னார் மாவட்டத்தில் நடாத்துவதற்கான நடைமுறைகள், விவசாய மன்னர் தெரிவுப் போட்டி பற்றிய இறுதித் தேர்வு, கமக்காரரர் அறிமுக அட்டை வழங்குவது ஆகியவை பற்றி கலந்துரையாடுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கிற்கு மன்னார் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தலைமை வகித்தார். இக்கலந்துரையாடலில் 125க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. ■

# முல்லை மாவட்டத்தில் அன்னை பூபதி நினைவு நிகழ்வு

அன்னை பூபதியின் ஆறாவது ஆண்டு நினைவு நாளையொட்டி, முல்லை மாவட்ட மக்கள் மிகவும் எழுச்சியுடன் அன்னை பூபதியை நினைவு கூர்ந்தனர்.

கிராமங்கள் தோறும் அன்னை பூபதிக்கென நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டும் வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டும் காணப்பட்டிருந்தன. பல இடங்களில் சிரமதான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அன்னை பூபதியினை நினைவு கூரும் சுலோகங்களும் பதாதைகளும் கட்டப்பட்டு மக்கள் எழுச்சியுடன் நினைவு கூரப்பட்டது. குறிப்பாக முல்லை வர்த்தக சங்கம், வாகன சங்கம் என்பன நினைவு கூரும் வைபவங்களை ஒழுங்கு செய்து முன்னின்று நடாத்தி வருகின்றன. ■

# குடாநாட்டில் எழுச்சியுடன் நடைபெற்ற மகளிர் தினவிழா

அனைத்துலக மகளிர் நாள் கடந்த மாதம் 8ம் திகதி யாழ் குடாநாடெங்கும் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுட்டிக்கப்பட்டது.

அன்றைய தினம் அனைத்துலக மகளிர் நாள் நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

அனைத்துலக மகளிர் நாளான அன்றைய தினம் குடாநாடெங்கும் எழுச்சிக் கோலமாகக் காட்சியளித்தது. மகளிர் தினத்துக்கு எழுச்சி சேர்க்கும்வகையில் அமைந்த புரட்சிகரமான வாசகங்களைத் தாங்கிய பதாதைகள் குடாநாடெங்கிலும் உள்ள பிரதான வீதிகள் எங்கும் கட்டப்பட்டிருந்தன. இவற்றை விட மகளிர் தினத்தைப் பறைசாற்றும் வகையில் பல்வேறு சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தன. அத்துடன் அநேக, வீதிகளில் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. இவை அனைத்தும் இணைந்து குடாநாட்டை எழுச்சியின் எல்லைக்கு அழைத்துச் சென்றுவிட்டன.

அனைத்து மகளிர் நாளில் முக்கிய நிகழ்வாக குடாநாட்டின் கேந்திர நிலையங்களில் மகளிர் நாள் எழுச்சிக் கூட்டங்கள் நடைபெற்றன. கோட்ட ரீதியாக இக்கூட்டங்கள் நடைபெற்றன. வலிகாமம் கோட்டத்திற்கான எழுச்சிக் கூட்டம் மானிப்பாய் மாவீரர் நினைவு அரங்கில் நடைபெற்றது. தீவக கோட்டத்திற்கான எழுச்சிக்கூட்டம் அரியாலை திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. அதேபோல வடமராட்சிக் கோட்டத்திற்கான எழுச்சிக்கூட்டம் பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்திலும், தென்மராட்சிக்கான எழுச்சிக் கூட்டம் மட்டுவில் மகாவித்தியாலயத்திலும் நடைபெற்றது.

இவ்வாறான எழுச்சிக் கூட்டங்களில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் உட்பட பலர் உரையாற்றினர். இக்கூட்டங்களில் ஆண்கள் பெண்கள் என்றும் மற்றும் வயது வேறுபாடு இன்றி ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டங்களின் இறுதியில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# யாழ்ப்பாணத்தின் ஆளுமை கல்வியில் பிரதிபலிக்கிறது

## - பேராசிரியர் சிவத்தம்பி -

யாழ்ப்பாணத்தின் ஆளுமையே யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வியில் பிரதிபலிக்கிறது. யாழ்ப்பாண வரலாற்றைப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்தின் கல்வி பற்றிய ஈடுபாடு முக்கியமானது. யாழ்ப்பாணத்தின் அக்கால ஆசிரியர்கள், அறிஞர்கள் கல்வி வளர்ச்சியில் மாத்திரமன்றி தங்களைச் சூழ இருந்த கிராமத்தினதும், நகரத்தினதும் சிந்தனை வளர்ச்சியில் அக்கறை காட்டியுள்ளனர். இந்த மரபு முக்கியமானது.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற அமரர் சபாரத்தினத்தின் முதலாமாண்டு நினைவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில், யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயங்களை உருவாக்குவதில் அபிப்பிராய முதல்வர்களாய் இருந்தோர் ஆசிரியர்களே. கல்லூரிகள் அபிப்பிராயம் உருவாக்கும் மையங்களாக விளங்கின. இவர்கள் வெறுமனே கல்வியில் அக்கறை காட்டியவர்கள் அல்ல. கல்வியிலும் அரசியலிலும் அல்லது கல்வியிலும் சமூக வாழ்க்கையிலும் ஒன்றி தலைவர்களாய் விளங்கினார்கள். இவர்கள் தாபித்த பெரும் பாரம்பரியத்தினாலேயே யாழ்ப்பாணத்தில் கல்வி தொடர்ந்து வளர்கின்றது. இன்றைய சூழ்நிலையிலும் கூட யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சி பெருமளவு தடைப்படவில்லை.

இங்கு உரையாற்றிய மேல் மாகாண ஆளுனர் சர்வானந்தா தமதுரையில், கல்வி என்பது ஒரு மாணவனின் ஆளுமையை வளர்த்து அவனது ஆற்றல்களை வெளிக்கொணர்வது, கற்றலும், கற்பித்தலும் மட்டும் கல்வியாகாது. பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் மட்டும் கல்வியின் நோக்கம் அல்ல எனத் தெரிவித்தார். ■

# மாணவர் மூக்குக் கண்ணாடி கடற்படையினரால் அபகரிப்பு

யாழ்ப்பாணத்தில் பார்வை குறைந்த மாணவர்களுக்கு வழங்குவதற்கென 'றெட்பானா'வால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்ட மூக்குக் கண்ணாடிகளை சிறீலங்காக் கடற்படையினர் பறித்துள்ளனர்.

சிறீலங்கா அரசின் அனுமதி பெற்று கொண்டு செல்லப்பட்ட சுமார் 125 மூக்குக் கண்ணாடிகளை திருகோணமலைத் துறைமுகத்தில் வைத்தே சிறீலங்காக் கடற்படையினர் பறித்துள்ளனர். ■

# மீனவப் படகுகள் சிக்க கடற்படையினர் 'வலை'

மீனவர் படகுகளை தடுத்து தாக்குதல்களை மேற்கொள்ளுவதற்கு வசதியாக அராலிக் கடலின் ஆழப்பகுதியில் 'டிஸ்கோ' வலைகளைப் போட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அராலி கடற்பரப்பிலேயே இராணுவத்தினர் இவ்வாறாக வலைகளைப் போட்டுள்ளனர். இதனால் நடுக்கடலினுள் பிரயாணம் செய்யும் படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்களில் இவ்வலைகள் சுற்றுகின்றன. இதனால் இவற்றின் இயக்கம் ஸ்தம்பிதமடையும். இச்சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் அப்படகுகள் மீது இலகுவாகத் துப்பாக்கி மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாட்டினால் இப்பகுதி மீனவர்களின் தொழில்களும் பாதிப்படைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிறிய துவாரங்களைக் கொண்ட இவ்வலையினைக் கடந்து மீனினங்கள் கரையை நோக்கி வருவது தடைப்பட்டுள்ளது. இதனால் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களின் அளவும் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழப் பெண்கள்

## புலிகளின் தலைமைத்துவத்தில் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி

தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் நேரடிப்பங்கை -போர்க்களங்களில் அவர்களது வீரத்தை போர்த்திறனை வியந்து போற்றாதோர் இல்லை. அந்தளவுக்கு போராட்டத்தில் தமிழீழ இளம் பெண்களது பங்கும் பணியும் மிக முக்கியம் பெறுகின்றது. இதன் நேரடி விளைவாக தமிழினத்தின் படை பலம் உயர்ந்து செல்வதைக் கூறலாம்.

அதேவேளை- மறைமுகமாக தமிழீழப் பெண்களது வாழ்நிலையும்-பெண்கள் தொடர்பாக எமது சமூகத்தின் பண்பாட்டுப் பார்வையும் வளர்ச்சியை நோக்கிய மாற்றங்களுக்கு உட்படத் தொடங்கிவிட்டது என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

"நள்ளிரவு 12 மணிக்கு பெண் ஒருத்தி தனியாக வீதியில் செல்லும் நிலை எப்போது ஏற்படுகின்றதோ அப்போதுதான் உண்மையான சுதந்திரம் கிடைத்த நாளாகக் கருதமுடியும்" என, மகாத்மா காந்தி ஒரு தடவை கூறியிருந்தார். இவ்வாறான சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமே நிலவுகின்றது என, அண்மையில் யாழ்ப்பாணம் சென்றுவந்த தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் கூறியதாக 'வீரகேசரி' வெளியிட்டுள்ள செய்தி, மேலே கூறப்பட்டதை நிரூபிப்பதாகவே உள்ளது.

***நீதி வழங்கும் நீதியாளர்களாக, நியாயங்களை எடுத்துரைக்கும் சட்டவாளர்களாக, சட்டம் - ஒழுங்கு பேணலில் பெரும் பங்காற்றும் காவல்துறை பணிமனைகளின் பொறுப்பாளர்களாக மற்றும் எழுத்துத்துறை, கலைத்துறை, நிருவாகத் துறைகள் என்று பெண்களது சமூகப் பொறுப்புகள் இப்போது அதிகரித்துள்ளன.***

இவ்வருட உலக மகளிர்நாள் வடபுலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்று 'பி. பி. சி' அறிவித்தமையும் இச் செய்தியின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டுவதாகவே உள்ளது.

ஒரு பத்துவருடங்களிற்கு முன் பெண்களை எமது சமூகம் பார்த்த முறைக்கும் இப்போது பார்க்கும் முறைக்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

தலைமைத்துவப் பண்போ, சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேறும்-உடல் உளத்திறனோ, நிருவாகப் புலமையோ, அறிவாற்றலோ அற்றவள் என்பதே பெண்கள் தொடர்பான முன்னைய மதிப்பீடு ஆகும். ஆனால் இன்று போராட்ட அரசியலின் அனைத்துக் கட்டுமானங்களிலும் பெண்கள் முக்கிய பங்கெடுத்துள்ளதுடன், ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் திறமைகாட்டி வருகின்றனர் என்பது வெளிப்படை. இந்த வகையில் பெண்கள் தற்போது வகிக்கும் சமூகப் பாத்திரம், பெண்மை தொடர்பான 'சமூக மனதில்' பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வல்லது என்பது குறிப்பிடத் தக்கது.

நீதி வழங்கும் நீதியாளர்களாக, நியாயங்களை எடுத்துரைக்கும் சட்டவாளர்களாக, சட்டம் - ஒழுங்கு பேணலில் பெரும் பங்காற்றும் காவல்துறைப் பணிமனைகளின் பொறுப்பாளர்களாக மற்றும் எழுத்துத் துறை, கலைத் துறை, நிருவாகத்துறை என்று பெண்களது சமூகப் பொறுப்புக்கள் இப்போது அதிகரித்துள்ளன.

இவ்வாறாக அரசியல் நிருவாகங்களில்-தேசிய விடுதலைப் போராட்டத்தில்-பெண்களது பங்கும் பணியும் அதிகரித்து வந்த பொழுதிலும் குடும்ப வாழ்விலும் பெண்ணினம் தொடர்பான விழிப்புணர்ச்சியிலும் மற்றும் சில பண்பாட்டு வழக்கங்களிலும் பெண் பெரிய மாற்றங்களைச் சாதித்துவிட்டாள் என்று கூறமுடியாது. புனிதமான திருமண உறவின் ஆரம்பத்திலேயே 'சீதனம்' என்ற பெயரில் பெண்ணின் கௌரவம்-ஆளுமை-சிறுமைப்படுத்தப்பட்டு, பெண்விலை பேசப்படும் அறிவீனத்தை இதற்கு ஒரு உதாரணமாகக் காட்டலாம். இந்த சமூக அநீதியிலிருந்து பெண்கள் மீண்டுவருமுகமாக, சீதனம் தொடர்பான ஒரு சட்டப் பாதுகாப்பைப் பெண்கள் விரைவில் அனுபவிக்க இருக்கின்றனர். இது தொடர்பான ஒரு சட்ட வரைபை இயற்றி, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபடும்படி அரசியல் துறையினரையும், மகளிர் அணியினரையும், நீதி நிருவாகத் துறையினரையும் தலைவர் பிரபாகரன் அவர்கள் பணித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, தென்தமிழீழத்தில் தமிழ்ப் பெண்களது வாழ்க்கை கொடுமை நிறைந்ததாக உள்ளது. கேட்போர் மனம் திடுக்கிடும் வகையில் சிங்களப் படைகள் புரியும் மிலேச்சத்தனங்களால் தமிழ்ப் பெண்கள் அல்லலுறுகின்றனர்.

கொலைகள் - பாலியல் வன்முறைகள் -பாலியல் தொந்தரவுகள் ஒருபுறமிருக்க, சிங்களப் படைகள் திட்டமிட்ட ரீதியில் கணவன்மார்களைக் கொன்று பெண்களை விதவைகளாக்குவதும், தந்தைமார்களைக் கொன்று பெண் பிள்ளைகளை அநாதரவாக்குவதும் தொடர்ந்தபடியே உள்ளது. அன்புக்குரியவர்களை -ஆதரவான துணைகளை - இழந்து சோகத்தில் மிதப்பதுடன் இராணுவ அடக்குமுறைகள் - மிலேச்சத்தனங்களுக்கு ஆளாவதுடன், தாங்கமுடியாத பொருளாதாரச் சுமைகளுடனும் குடும்பப் பொறுப்புக்களுடனும் தென்தமிழீழப் பெண்கள் அவதியுறுகின்றனர். இப்பெரும் துயர்களுக்கு மத்தியிலும் அவர்கள் வெளிப்படுத்தும் தேசாபிமானமும், உறுதியும் பிரமிக்கத்தக்கன. உண்மையில் இது தமிழீழப் பெண்கள் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் என்பது உறுதி.

உலகளாவிய ரீதியில் பெண்களது வாழ்நிலையை மேம்படுத்தும் முயற்சிகள் எந்தளவிற்கு வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும் தமிழீழத்தைப் பொறுத்தவரை ஈழப்பெண்களது எதிர்காலம் பிரகாசமானதாகவே இருக்கின்றது. இதற்குப் பிரதான காரணம் புலிகள் இயக்கத்தின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய விடுதலைப் போராட்டம்தான்! தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையையும் வென்றெடுக்க வேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன் போராட்டத்தை வழிநடத்தும் தலைவர் பிரபாகரன் அவர்களது செயற்பாடுகள்தான், இவ்விதம் சமூக மாற்றத்திற்கான கதவுகளைத் திறக்கச் செய்துள்ளது.

"பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை. நீண்ட நெடுங்காலமாக, எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப் புரையோடி நிற்கிறது சமூகக் கொடுமை. இந்த சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாகச் சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து இந்தப் புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்."

இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள், இவ்வாண்டு மகளிர் நாளின்போது விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

**வடக்கில்.......**

*"தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கையும் போராட்டச் சூழ்நிலையும் வடபகுதி தமிழ்ச் சமூக அமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றன. "நள்ளிரவு 12 மணிக்கு பெண் ஒருத்தி தனியாக வீதியால் செல்லும் நிலை எப்போது ஏற்படுகின்றதோ அப்போதுதான், உண்மையான சுதந்திரம் கிடைத்த நாளாகக் கருத முடியும்" என, மகாத்மா காந்தி ஒரு தடவை கூறியிருந்தார். "இவ்வாறான சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமே நிலவுகின்றது" என, அண்மையில் யாழ். சென்றுவந்த தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் கூறியிருந்தார்.*

*வீரகேசரி 07. 03. 1994*

# தெற்கே வருவோரின் கருத்து வட-கிழக்கு மக்களின் கருத்தல்ல

## - வண.பிதா அலெக்சாண்டர்

வடக்கு - கிழக்கு பகுதிகளிலிருந்து உழைப்புக்காக அல்லது பிழைப்புக்காக தெற்கிற்கு வருகின்ற தமிழர்கள், அங்கு நாம் துன்புறுத்தப்படுவதாக அல்லது அங்கு தாம் வாழ்வது சிரமமானதென சொல்லுவது வழக்கம். தென்னிலங்கையில் சிங்களவர்களுடன் வாழவேண்டியிருப்பதால் அவர்கள் அவ்விதம் கூறுகின்றனர். ஆனால் இத்தகையவர்களின் அபிப்பிராயத்தை வட-கிழக்கு மக்களின் கருத்து என கருதுவது தவறு ஆகும். இவ்வாறு வணபிதா அல்பிரட் அலெக்சாண்டர் தெரிவித்தார்.

"நாட்டில் சமாதானம் நிலைபெற, நாடு செய்ய வேண்டியது என்ன?" என்ற தலையங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் சமாதானம் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் சமாதானம் தான் ஏற்படுவதாக இல்லை. உண்மையான சமாதானம் அடிமட்டத்திலிருந்து தான் உருவாக வேண்டும். குடும்பத்தில் சமாதானமாக வாழ முடியாதவர்கள் சமூகத்தில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

வட- கிழக்கு பகுதி மக்கள் கல்வி கற்பதிலும், கடுமையாக உழைப்பதிலும் வேலை வாய்ப்புக்களைப் பெறுவதிலும் ஆர்வமுடையவர்கள். அதற்கான பாதையில் முட்டுக்கட்டைகள் ஏற்படும்போது அவர்கள் ஆத்திரமடைகின்றனர். நானும் விடியற்காலையில் எழுந்து புகையிலைச் செடிகளுக்கு தண்ணீர் இறைத்துவிட்டுத் தான் பாடசாலை செல்வேன். அவ்விதம் வேலை செய்து படித்து பின் வெளிநாடுகளிலும் கல்வி கற்று இந்த நிலைக்கு வந்துள்ளேன். நான் சிங்களவர்களிடையே என்னைத் தமிழன் என்று சொல்லத் தயங்குவதில்லை.

தென்னிலங்கையர் என்ற வகையில் ஒருவர் தனது மகனுக்கு சிறந்த உயர் கல்வி, சிறந்த தொழில் போன்றவற்றைப் பெற்றுக்கொடுக்க முடியுமாயின் வட-கிழக்கினர் என்ற வகையில் ஏன் எமக்கு அந்த வாய்ப்பு இல்லை எனக் கேட்கும்உரிமைவட-கிழக்கு பகுதி மக்களுக்கும் உண்டு. ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு எனக் கூறியபோதும்கூட யேசுக் கிறிஸ்து தமக்கு கன்னத்தில் அடித்தபோது ஏன் இப்படிச் செய்கிறீர்கள் எனக் கேள்வி கேட்டார். சகல தனிநபர்களினதும் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்து மதித்து வாழவேண்டும் எனத் தெரிவித்தார். ■

### வடக்கில் அரசசார்பற்ற நிறுவனங்கள்

# செயற்பாட்டை கட்டுப்படுத்த அரசு திட்டமிட்ட முயற்சி

சிறீலங்கா அரசாங்கம் திட்டமிட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டை வடக்குப் பகுதியில் மட்டுப்படுத்தி வருவதாகவும் இதனால் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கருதப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறை செய்தல், நிதிகளை மட்டுப்படுத்துதல், பொருட்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கல் என்ற போர்வையில் கால தாமதப்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகளை திட்டமிட்டுச் செயற்படுத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

நேரடியாக இந்நிறுவனங்களைக் கட்டுப்படுத்த முடியாமையினால், மறைமுகமாக சட்டங்களைப் போட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டை வடபகுதியில் செயற்பட முடியாத அளவிற்கு மறைமுகமாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு கிடைக்கும் நிதிகளிலிருந்து வடக்கு -கிழக்கு மாகாணங்களின் எல்லையிலுள்ள சிங்கள கிராமங்களுக்கும், முஸ்லீம் கிராமங்களுக்கும் உதவிகளைச் செய்கின்றது எனவும் தெரியவருகிறது. ■

### யாழ். செஞ்சிலுவைச் சங்க

# நடமாடும் வைத்திய பிரிவுக்கு இராணுவம் தடை விதிப்பு

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் வைத்திய பிரிவுக்கு கூட்டு நடவடிக்கை பணியகத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை காலமும் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினால் மூன்று நடமாடும் வைத்திய பிரிவுகள் நடாத்தப்பட்டு வந்ததாகவும், அவற்றில் ஒன்றை முற்றாக கூட்டு நடவடிக்கைப் பிரிவு தடை செய்ததுடன் மற்றைய இரண்டு பிரிவையும் மட்டுப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர் காலத்தில் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கையைபெரியளவில் கட்டுப்படுத்த இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு, முன்னோடி நடவடிக்கையாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாகாணசபை அமுலாக்கத்தினால் பெரும் நிதி வீண் விரயம்

## - உலக வங்கி குறை கூறுகிறது

சிறீலங்காவில் மாகாணசபை அமுலாக்கத்தினால் நிதி வீண் விரயமாக்கப்பட்டு வருவதாக உலக வங்கியால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் நிர்வாக அமைப்பு முறையில் மாகாணசபை என்றும் மாவட்ட செயலாளர் காரியாலங்கள் என்றும் இரண்டு நிர்வாக அமைப்புக்கள் ஒரே வேளையில் செயற்படுகின்றன என்றும் இதனால், பெருமளவு நிதி அநாவசியமாகச் செலவு செய்யப்படுகிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நிர்வாக சபை அமைப்புக்களும் ஒன்றாக்கப்பட்டு ஒரே நிர்வாக அமைப்பாக இயங்கினால், அநாவசியமாக நிதி வீண்விரயமாக்கப்படுவதை தவிர்க்க முடியும் என்றும், அவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதும் அநாவசியமான செலவுகளை அதிகரிக்கும் என்றும், மத்திய அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றுபவர்களுக்கு சமமான எண்ணிக்கையில் மகாணசபையிலும் கடமையாற்றுகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்தின் மொத்தச் செலவீனங்களில் 1/8 முதல் 1/10 வரையிலான செலவுகள் மாகாண சபைகளினாலேயே ஏற்படுகின்றன. இவற்றில் அதிகளவு பணம் வாடகை, மற்றும் சம்பளக் கொடுப்பனவு தொடர்பானது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட மாகாணசபை ஊழியர்களின் சேமலாபக் கொடுப்பனவு, மற்றும் ஒதுக்கீட்டுப் பிரிவுகளின் கொடுப்பனவு ஆகியனவும் அதிகமாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அனைத்து மாகாணசபைகளிலும் சுகாதார சேவை ஊழியர்களுக்கான செலவீனங்கள், மருந்து வழங்கல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவீனங்கள் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்படுவதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# 1000 குழந்தைகளை தத்தெடுக்க புனர்வாழ்வுக் கழகம் திட்டம்

சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் பெற்றோரை இழந்த ஆயிரம் குழந்தைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தத்தெடுத்துள்ளது. முதற் கட்டமாக இத்திட்டம் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தத்தெடுக்கப்படும் இக் குழந்தைகள் 21 வயதை அடையும் வரை இத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெறுவர். இத்திட்டத்திற்கமைய வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்ட 1000 குழந்தைகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் தத்தெடுக்கப்படுவர். யாழ் மாவட்டத்தில் இருந்து 300 குழந்தைகளும், வடக்கு கிழக்கின் ஏனைய ஏழு மாவட்டங்களிலுமிருந்து மாவட்டத்திற்கு 100 குழந்தைகள் என 700 குழந்தைகள் தெரிவுசெய்யப்படுவர். ■

# விடுதலைப்புலிகள் இல்லாத தீர்வில் வலுவிருக்காது

## - அஸ்ரப்

"தீர்வை ஏற்படுத்தும் முயற்சியில் தமிழர்கள் சார்பில் ஒரு கோரிக்கையும் முஸ்லீம்கள் சார்பில் ஒரு கோரிக்கையும் இருக்குமானால் ஒருபோதும் வெற்றி கிடைக்காது. விடுதலைப்புலிகள் இல்லாமல் தமிழ், முஸ்லீம் சமூகங்களுக்கு முன் வைக்கப்படும் கோரிக்கை வலுவானதாக இருக்காது. எனவே தமிழ் -முஸ்லீம் அணுகுமுறை மாற்றம் அவசியமாகின்றது. தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் பொதுவான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு இரு இனங்களினதும் தலைவர்கள் இணைந்து செயற்பட வேண்டும்"

என முஸ்லீம் காங்கரஸ் தலைவர் அஸ்ரப், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு விடுத்துள்ள பகிரங்கக் கடிதமொன்றில் கூறியுள்ளார். ■

### சிங்கள மீனவர்களுக்கு விடுதலைப் புலிகள் உதவி

திருகோணமலையில் இருந்து ஆழ்கடல் மீன்பிடிப்புக்குச் சென்ற சிங்களவர்களான எஸ்.-டி. நியால், எஸ். டி. உப்புல் தயாரத்னா என்ற மீனவர்கள் படகு சேதமடைந்த நிலையில் ஆழ்கடலில் உயிர்காப்பு சமிக்ஞை எழுப்பினர். இதனைக் கண்ட விடுதலைப் புலிகள் அவ்விடத்திற்குச் சென்று அவர்கள் பத்திரமாக கரை சேர உதவினர். ■

### திருகோணமலையைச் சுற்றி 115 இராணுவ முகாம்கள்

திருகோணமலை நகருக்கு வெளியே மட்டும் 115 க்கு மேல் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றது. பன்குளம் முற்றுமுழுதாக சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்களைச் சுற்றி தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் பணயக் கைதிகளாக குடியேற்றும் உத்தி தாராளமாகக் கையாளப்படுகிறது. குச்சவெளி இராணுவ முகாமருகே 10 தமிழ்க் கிராமங்கள் பலவந்தக் குடியேற்றத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. திரியாய், கும்புறுப்பிட்டி பகுதிகள் மனித நடமாட்டம் அற்ற பிரதேசங்களாக மாற்றப்பட்டுள்ளன. ■

# நீதிமன்றம் குற்றவாளி எனக் கண்டவரை ஜனாதிபதி மன்னிப்பது தவறானதாகும்

## மனித உரிமைகள் செயற்பாட்டுக்குழு கண்டனம்

நீதிமன்றத்தினால் குற்றம் காணப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட இருவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளித்து விடுதலை செய்யப்பட்டமை தொடர்பாகக் கண்டனம் தெரிவித்து மனித உரிமைகள் செயற்பாட்டுக்குழு நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

செல்டன் நிமால் பீரிஸ், டபிள்யு. எம். பந்துல ஜயதேவ ஆகிய இவ்விரு நபர்களும் டபிள்யு.- ஏ. சுமணசிறீ என்பவரை கைமோசக் கொலை செய்ய முயற்சி செய்த தவறுக்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் மூன்று வருடக் கடுங்காவற் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் இவ்விருவரும் ஒருநாள் கூட சிறைத் தண்டனை அனுபவிக்க அனுமதிக்கப்படாமலேயே ஜனாதிபதி தனது மீயுரிமையைப் பயன்படுத்தி மன்னிப்பளித்து விடுதலை செய்தார்.

இவ்விடயத்தில் தொடர்புபட்டுள்ள வினாக்கள் மிகவும் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தவை எனவும், நாட்டின் நீதி நிர்வாகம் தொடர்பான அடிப்படை அம்சங்களில் பாரிய தாக்கத்தினைக் கொண்டுள்ளன எனவும் நாம் நம்புகிறோம் என்று மனித உரிமைகள் செயற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அக்குழு வெளியிட்ட நீண்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

குற்றச் செயலால் விளைவிக்கப்படும் தீங்கு தனிப்பட்டவரின் நலனுடன் நின்றுவிடாது. சமூகத்திற்கு பாரிய தீங்கை விளைவிக்கிறது. ஊறு அடைந்தவரின் கோரிக்கையின் மீது தவறொன்று ஒத்திவைக்கப்படவோ கைவிடப்படலானது, நீதி மன்றமொன்றால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டபின்னர் ஏற்படவியலாது. அதுவும் குறிப்பாக நாட்டில் வன்முறைக் குற்றங்கள் அதிகரித்த வண்ணமாக இருக்கின்ற இக்காலகட்டத்தில், சமூகத்தின் நலன்கள் ஊடறுந்த தனியாளின் விருப்புக்கு மேலாக ஓங்கிநிற்க வேண்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. வழக்குத் தொடுநருக்காக இருவேறு நீதிமுறை நடவடிக்கைகளில் சாட்சியமளித்த பின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய ஆயுர்வேத வைத்தியரான டபிள்யு.- ஏ. சுமணசிறீ தனது மனமாற்றத்தின் அடிப்படையில் விளக்கமளித்தபின் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குதல் என்பது குற்றவியல் நீதியையே வழிதவறச் செய்வது ஆகும்.

மேலும் இந்த வழக்கின் குறிப்பிடத்தக்க மற்றுமொரு அம்சம், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட இருவரும் இந் நாட்டின் நீதிமன்றங்கள் தொடர்பாக எடுத்து எறிந்தும் அவமதித்தும் நடந்த போக்கு ஆகும். நீதிமன்றத்தின் முன்பாக தோன்றும்படி பணிக்கின்ற கட்டளைகள் ஐந்து தடவைகள் ஆக்கப்பட்ட போதும், அவ்வாறு செய்யாமல் நீதிமன்றத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் போக்கை வெளிப்படுத்தினர். இத்தகைய போக்கு சமூகத்தில் நிலையூன்றுமானால் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கான மரியாதை நீதி வழங்கும் நிறுவனங்களின் கண்ணியம் என்பன பாதுகாக்கப்படவியலாதுபோகும். ஜனாதிபதியின் மன்னிப்பு வழங்கும் மீயுரிமை பிரயோகிக்கப்பட்டமை நேர்த்தியானதா என்பதை தீர்மானிப்பதில் இக் காரணி மறுப்பின்றி மிகவும் தொடர்புடையதாகும்.

இறுதியாக மன்னிப்பு வழங்கும் மீயுரிமையானது மிகவும் கட்டாயமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தவே கருதப்பட்டது என்பதையும் நீதி, நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகளில் பொது மக்களின் நம்பிக்கையைப் பாதிக்கக்கூடிய விதத்தில் பயன்படுத்தப்பட எண்ணப்படவில்லை என்பதையும் அழுத்திக்கூற விரும்புகின்றோம். இத்தகைய கொள்கை மீறப்படுவது, சட்ட ஆட்சிக்கு மதிப்பு அளிக்கின்ற ஜனநாயக சமூகத்தின் அமைதியை பாதிக்கின்றதான பாரிய விளைவுகளைக் கொண்டு வரக் கூடியது என்பதும் தென்படும் ஒன்றாகும். மன்னிப்பு வழங்கும் மீயுரிமையானது அரசியல் செல்வாக்கு இத்தகைய பணிகளைப் புரிகையில் எவ்வித பங்கையும் வகிக்காது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசிய மானதாகும். ■

# சுமண படை நடவடிக்கை புலிகளுக்குப் பாதிப்பில்லை

## ■விசேட தளபதி குணம்

திருக்கோணமலையில் படையினர் மேற்கொண்ட சுமண இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தப்பட்டது என, அரசு பிரசாரம் செய்தளவு வெற்றிகரமானதல்ல. இதனால் விடுதலைப்புலிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லையென, விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட விசேட தளபதி குணம் புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

திருமலையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலையொட்டி படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். இதில் புலிகளின் நிலை ஒன்று அழிக்கப்பட்டதாக அரசு கூறியது. ஆனால், இதனால் புலிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. பல படையினரே புலிகளின் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர்.

அப்பாவித் தமிழரை படையினர் முகாமிற்கு பிடித்துச் சென்றனர். திரியாய், கும்புறுப்பிட்டி, குச்சவெளி பகுதிகள் மக்களற்ற பகுதிகளாக உள்ளன. குச்சவெளி இராணுவ முகாமருகே 10 தமிழ் கிராமங்களில் பலாத்காரமாக குடியேற்றம் நடைபெற்றன. முஸ்லிம் குடும்பங்கள் பலவும் குடியமர்த்தப்பட்டன. சிங்கள குடும்பங்களும் குடியேற்றப்பட்டுள்ளன.

திருமலைநகருக்கு வெளியே மட்டும் 115 ராணுவ முகாம்களுக்கு மேல் உள்ளன. திருமலை எல்லைப் பகுதியான பன்குளம் முழுமையாக சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். ■

# இந்த தலைமுறையின் காலத்தில் வெற்றியைப் பெற்றுவிட வேண்டும்

## - புதுவை இரத்தினதுரை

"இந்தப் போராட்டத்தினை எமது தலைமுறையிலேயே முடித்துவிட வேண்டும். எமது அப்பன் விட்ட தவறை நாம் விடுவோமாயின் எமக்குப் பின்னால் வரும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சந்ததி எம்மைவிடக் கூடிய கஸ்டத்தினை அநுபவிக்க நேரிடும். இந்த வேளையில் காலம் ஒரு கதவைத் தட்டித் திறந்து, கதாநாயகனாக தலைவர் ஒருவரைத் தந்துள்ளது. இவ் உறுதி மிக்க, வீரம் செறிந்த இத் தலைவனின் காலத்திலேயே இந்தத் தலைமையின் கீழ் நின்று வெற்றிபெற வேண்டிய தேவை எமது மக்களுக்கு உண்டு. இப் போராட்டம் நீதி, நியாயமானது. ஒரு போராளிக்கு இருக்கின்ற உணர்வு ஒவ்வொரு மக்களுக்கும் இருக்க வேண்டும். அப்போது தான் எமது போராட்டம் விரைவாகச் சென்று, வெகுவிரைவில் சுதந்திரத்தை அடைய முடியும்."

இவ்வாறு அண்மையில் பளை மகாவித்தியாலயத்தில் 'நினைவழியா நாட்கள்' கவிதை நூல் அறிமுகவிழாவில் கலந்துரையாற்றிய புதுவை இரத்தினதுரை அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அவர், இந்த மண்ணிலே நிற்கின்ற பனை, தென்னை மரங்கள், மாடுகள் எதிரியின் குண்டு வீச்சுக்கு காயப்படுகின்றன. ஆனால் நாங்கள் பேசக்கூடியவர்கள். ஒருவருக்கும் தலை குனியாது நிற்கின்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாங்கள். எனவே, தமிழன் தமிழனாக வாழவேண்டும். எமது உரிமையைக் கேட்பதற்கு எமக்கு உரிமை உண்டு. சிங்களவர்கள் கூட கூறியுள்ளார்கள், தமக்கு பிரபா போல் ஒருவர் இல்லை என்று. ஆனால் எமக்கு அவர் இருக்கும் காலத்திலே வெகுவிரைவில் ஒரு நல்லகாலம் கிட்டும். வெகுவிரைவில் தமிழீழம் மலரத்தான் போகின்றது. இது நிச்சயம் என்றார். ■

# புத்தகங்களுக்கு உறைபோடவும் கிழக்கு மாணவருக்கு தடை விதிப்பு

"பாடசாலை மாணவர்கள் தமது புத்தகங்களுக்கு உறைகள் எதையும் போட்டுக் கொள்ளக் கூடாது", "மாணவர்கள் புத்தகப் பையை எதையும் பாடசாலைக்கு கொண்டு செல்லக்கூடாது". இவைகள் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கூறும் அறிவுரைகள் அல்ல. மட்டக்களப்பில் உள்ள சில பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறீலங்கா இராணுவத்தினர் விதிக்கும் கட்டளைகள்தான் இவை. இவற்றுடன் மாணவர்கள் தினசரி ஒரே பாதையிலேயே செல்ல வேண்டும் என்ற மற்றொரு கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலை ஆசிரியர்களை தமது முகாம்களுக்கு அழைத்துச் சென்று மேற்படி கட்டளைகளை இராணுவத்தினர் இட்டதாக மட்டக்களப்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**இது ஒரு புதிய போர்ப்பரணி !**
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை -அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

## அத்தியாயம் 8 இன் தொடர்ச்சி

ஏராளமான சிகரெட் பைகளும், அடிக்கட்டைகளும் கும்பல் கும்பலாக இருந்தன. மழையில் ஊறி அவை கெட்டமணம் ஒன்றைத் தோற்றுவித்தன. ஏராளமான ஆபாசப் படங்கள் சுவர் நெடுகிலும் அலங்கரித்தபடி கிடந்தன. இதுதான் சிறிலங்கா இராணுவப் படை முகாம். இவர்களிடம் எவ்வாறு ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது? அவர்கள் விரும்புவதே ஒழுக்கக்கேட்டைத்தான் போலும்!

பெரிதாகக் கரிமண்டிப்போன சுவர்களுடன் சமையலறை தென்பட்டது. உள்ளே சென்று பார்த்தோம். பெரிய அண்டாக்களில் ஒன்றில் குத்தரிசி போலும். மற்றைய ஒன்றில் மைசூர்ப் பருப்பும், இன்னொன்றில் சோயா பீன்ஸ் கறியும் சமைத்தபடி அப்படியே கிடந்தன. நேற்றையப் பொழுது சமைத்ததாக இருக்க வேண்டும். இலேசாகப் பழுதடைந்த மணம் கிளம்பியது. மாஸ்ரர் பெரிய அகப்பைகளைச் செலுத்தி 3 அண்டாக்களிலும் கிண்டிவிட்டபின் தொடர்ந்து வந்தார். சமையலறைக்கு வெளிப்புறமாக வாழைத்தோட்டம், அதில் ஏராளமான வாழைகள் முறிந்து கிடந்தன.

அதனூடாக தூரத்தே கோயில் அரணும் அதனுடன்கூடிய மடமும் தென்பட்டன. விரைவாகப் பொலிஸ் நிலையக் கட்டடங்களையும், அதேபுறத்துக் கட்டடங்களையும் பார்த்தபின் கன்னியாஸ்திரி மடத்தினுள் சென்று அவதானித்தோம். சுவர்களுக்கு உட்புறமாக பல அடுக்கு மண் மூடைகள் பலப்படுத்தி நின்றன. ஏராளமான உடைகள் குருதியில் தோய்ந்து உறைந்து கிடந்தன.

**"வா, சக்கை லொறி வெடித்த இடத்தைப் பார்ப்பம்".**

**இருவருமாகச் சென்றோம். பிரதான முகாமின் வாசலைக் கடந்து அதன் மையப்புறமாக ஒரு பெரும் குழி காணப்பட்டது.**

**கண்ணிமைக்கும் நேரத்தில் காவியமான போர்க் அண்ணாவின் கதைகளை அது மௌனமாகக் கூறிற்று. ஒரு கணம் அதே இடத்தில் தரித்து நின்றோம்.**

**தேச விடுதலைக்காக தனது உயிரையே ஆயுதம் ஆக்கி செலுத்தும் புனித வீரர்களைப் பெற்றதற்காய் எமது தாய்நாடு, மகிழ வேண்டும்! உயிரையே வெடிகுண்டாக்கி எதிரி முகாமைத் தகர்த்திடும் மனோதிடம் எந்தத் தேச இளைஞனுக்கு ஏற்படும்? இதிலிருந்து அவன் தனது தேச விடுதலையை எங்ஙனம் நேசிக்கின்றான் என்பதை, அவனை ஒத்த இளைஞர் சமுதாயம் கொஞ்சம் உணர்வுரீதியாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அவனது இலட்சியங்கள் தொடரப்படும்; கொள்கைகள் கொண்டேகப் படும்.**

மீண்டும் திரும்பி பிரதான வீதியூடாக நடந்து மாங்குளச் சந்தியை இருவரும் அடைகின்றோம். ஏறத்தாழ பதினைந்து நிமிடம் சந்தியில் தரித்து நாலாபுறமும் பார்வையைச் செலுத்தியபடி நின்றோம்.

"மாஸ்ரர் இங்கிருந்து பாருங்கோ, காம்ப் எப்படியிருக்கு? முன்னாலை இருக்கிற பெரிய மரங்கள் எவ்வளவு அழகு! இவ்வளவு காலமும் அவன்களால் சூழப்பட்ட பூமி. இன்றுதான் எம்மிடம் வந்திருக்கிறது".

"இப்பிடி இன்னும் எத்தனை எத்தனை இடங்களைப்பா. பார், ராத்திரி பொம்பர் ரவுணைப் படுத்தியிருக்கிறபாட்டை"!

மாஸ்ரர் சுட்டிக்காட்ட எஞ்சியிருந்த ஒரேயொரு மாடிக் கட்டடமும் ஏனைய கடைகளும் சுடுகாடாக இடித்து அழிக்கப்பட்டிருந்தன. ரெயில்வே நிலையமும் சிற்றுகள் சிதறி அலங்கோலமாகக் கிடந்தன.

வாங்கோ, கோயிலையும் மடத்தையும் பார்த்திட்டுப் போவம் விரைந்து முல்லைத்தீவு வீதியால் நடக்கின்றோம். ஒருபுறமாக உடைக்கப்பட்ட கடைகளும் மறுபுறமாக இராணுவ அரண்களும் சிறு வீடுகளும் தொடராய் வர, முதற் புறம் எட்டாத வயல் வெளியாக விரியத் தொடங்கியது. மறுபுறம் அதே ஆக்கிரமிப்பு அத்தாட்சிகள், இடிந்துபோய் மண்மூடைகள் சிதறி தலைகுனிந்து அவமானச் சின்னமாக நின்றன. விரிந்த வயல்வெளி இவைகளை எள்ளி நகைத்தது. இவ்வளவு அரணாக இருந்தும் நீங்கள் எனது பரப்பில் தங்கி நின்ற மைந்தர்களிடம் தோற்று விட்டீர்களென தென்றலாய்ச் சிரித்தது!

இடையிடையே வீதியோரங்களில் இரத்தக் கறைகள் படிந்து கிடந்தன. அவை எமது போராளிகளுடையதாக இருத்தல் வேண்டும். வெளிப் பிரதேசத்துள் உடலை அரணாக்கிப் பாய்ந்த மறவர்களது குருதிச் சொட்டுக்கள்.

இவர்கள் நேசித்த மக்கள் இவர்களது வேட்கையை -இலட்சியத்தைப் -புரிந்துகொண்டால், நாளை இந்த ஒவ்வொருவரது சொட்டுக்களினின்றும் ஓராயிரம் வேங்கைகள் எழுவர்! இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அரணாக இருந்த வீடுகள் பலத்த சேதமாகி இடிந்து கிடந்தன. காக்கைகள் கும்பலாக பழி தீர்க்கப் பறந்து திரிந்தன. இந்தக் காவலரண்களிலிருந்து இராணுவம் கோயில் வரை நிலப்பதுங்கு குழிகளை தொடராக அமைத்திருந்தார்கள். அதுதான் அவர்களது விநியோகப் பாதையாக இருக்கலாம். எதிராக பரந்து கிடந்த வயல்வெளிகளைப் பார்க்கையில் மனம் பெரிதாகக் கனத்தது. துக்கம் நெஞ்சை அடைக்க ஓ என அழவேண்டும் போலிருந்தது.

இந்த வெளிக்குள்ளால்தானே எங்கள் பெடியள் முன்னேறியவங்கள்? பயங்கரவெளி பொம்மர்கூட ஒவ்வொருத்தனாகப் பார்த்து அடிக்கலாம். எதிரி எல். எம். -ஜிகளால் குண்டுவேலியே அமைத்திருப்பான். அப்படியிருக்க பழகின தோழர்களெல்லாம் ரத்தம் சிந்தி சாகச்சாக, அடிச்சு விழுத்தினவங்கள் தானே. இந்த றோட்டில ஏறி வெடிவாங்கினவன் றோட்டுக்கு வாறதுக்கு எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பான்!

ஐயோ! திலீப் அண்ணை, பிரபா அண்ணை, கோபு ஆட்களெல்லாம் உந்த வெளியிலதானே உயிர்விட்டிருப்பர்?

"அசையாத மலையடா அவங்கள்".

உணர்ச்சிவசப்பட்டு மாஸ்ரர் தழுதழுப்பதை உணர்ந்தேன். "ஆனால் அதற்கு உரிய வெற்றியைப் பெற்றிட்டம். அடிச்சுக் கலைச்சு இதே றோட்டாலை சுதந்திரமாகத் திரியிறம். என்னென்றாலும் அவங்களை நினைத்தால் தாங்கேலாது".

"கோயில் மடத்தைப் பாருங்கோ, எந்தப் பெரிசா உடைஞ்சு கிடக்கு". கதையை மாற்றினேன்.

"ம்ம்..." பெருமூச்சுடன் ஆமோதிப்பது தெரிந்தது.

ஒற்றையடிப் பாதையூடாக இறங்கி மடத்தை நோக்கி நடந்தோம். விஸ்தீரனமான காவலரண்கள் உருக்குலைந்து போய்க் கிடந்தன. மடத்தின் ஒருபுறம் சேதமாகி இருந்தது. இந்த மடத்தைப் பிடிக்கிறதுக்கு எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பான்கள். உம், வெளியால் வந்து அடிப்பது கஸ்ரம்தான்.

மடத்தைத் தாண்டி கோயிலுக்குள் நுழைந்தோம். கோயிலுக்கு முன்பாக நின்ற பெரிய மரத்தின் அடியில் இரு இராட்சத எதிரிகள் பிணமாகக் கிடந்தார்கள். ஒருவன் இடுப்பிலும் இன்னொருவன் காது அருகாகவும் ரவையால் துளைபட்டுக் கிடந்தனர். ஒருகணம் வெறுப்பு மேலோங்கினும் இறந்தவர்களிற்கு மரியாதையாக ஆயுதங்களை தோள்களினின்று கழற்றியபின், இரு சாக்குகளை எடுத்து மூடிவிட்டு வோக்கியில் அறிவித்தோம்.

இந்துக் கோயிலை இப்படியான ஒரு சூழலில் காணும் போது எனக்குள் ஒரு தாபம். முன்பு நான் சிறுவனாக இருக்கும் காலத்தில், சாதிப்பாகுபாடு காட்டி கோயிலுக்குள் ஒரு பகுதி மக்களை மற்றையவர்கள் தடுக்கும் வழக்கமும், பின் ஏதாவது சச்சரவு ஏற்பட்டு அவர்கள் சண்டையிட்டு வெட்டுப்படுவதும் எனக்குப் பழகிப்போன சிறுவயது நிகழ்வுகள். இன்று அந்நியன் கோயில் கர்ப்பக்கிரகம் வரை துவசமாடுகின்றான். என்ன ஆசைகள் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செயலில் காட்டியிருக்கின்றான். கோயிலின் மணிக்கூட்டுக் கோபுரத்தில் பெரிய காவலரண். இதைக் கேட்பதற்கு இன்று ஒரு சமய பக்தரும் இல்லை. இன்றுகூட சாதிப் பிரிவினையால் கோயில் சண்டைகள் சிறியளவுக்கு மறைமுகமாக நடைபெறுகின்றன. பலர் மனதில் எதிர்ப்பைத் தேக்கியுள்ளனர். இவர்களெல்லாம் ஏன் ஏகாதிபத்திய தலைவிரித்தாடலின் முன் வாயடைத்துப் போகிறார்கள்? இவற்றைக் கேட்க மட்டும் போராளிகள் என்ற நிலையா தேவை?

ஒரு சுதந்திரச் சூழலில் முற்போக்கான தலைமுறையைத் தோற்றுவிக்க போராளிகள் உயிர்த்தியாகம் செய்கையில், நீங்கள் ஏன் பிற்போக்குத்தனத்தைக் கைவிடத் தயங்குகின்றீர்கள்? இவை என்றும் எம்முடன் ஒட்டிப் பிறவாது நாமாக வரித்துக் கொண்டவைதானே? எல்லையிலே எமது துப்பாக்கிகள் எதிரிகளுக்கு சமாதி கட்டுகையில், நீங்கள் நாட்டினுள் சமுதாயச் சீர்கேட்டை குழி தோண்டிப் புதைத்துவிடுங்கள். நாளை நாங்கள் அனைவருமாய் புதியதோர் ஈழம் படைப்போம். கோயில் காவலரணைப் பார்வையிட்டபின் பிக்கப் வாகனம் ஒன்றில் ஏறி, கனகராஜன் குளம் நோக்கிப் பறந்து போனோம். கண்கள் வானத்தை வட்டமிட்டவண்ணம் இருந்தன. இயந்திரக் கழுகுகள் காற்றினுள் இன்னமும் சுற்றிக் கொண்டு இரை தேடின.

**இராணுவம் காட்டினுள் இறங்கிவிட்ட செய்தி மக்களிடையே காட்டுத்தீ போல பரவ ஆரம்பித்தது.** எங்கும் கூட்டம் கூட்டமாகக் கூடிநின்று கதைத்தார்கள். இவர்களில் பலர் சொட்கண் துப்பாக்கிகளையும், இடியன் எனப்படும் கட்டுத் துவக்குகளையும் ஏந்தியவண்ணம் காட்டை நோட்டமிடுவது தெரிந்தது. நாம் நேராக புதுவிளான் குளம் எனும் சிறிய அழகான கிராமத்தில் தங்கினோம். சுமார் ஐந்து பொதுமக்களது வீடுகளில் குழுக் குழுவாக தங்கி நின்றோம். இதில் நான், மாஸ்ரர், இதயன், அழகு ஆகியோரும் இன்னமும் ஆறு பேருமாக ஒரு வயோதிபர் வீட்டில் தங்கிக்கொண்டோம்.

சென்றவுடன் அவர்களது அன்பான மதிய உணவை அருந்திவிட்டு நன்றாக நித்திரை செய்து, இரவு 7.30 மணியளவில் தான் விழித்துக் கொண்டோம். தேநீரை அருந்தியபின் இரவுப் போசனத்தின் முன்பாக தலைவாசலில் சென்று, ஐயாவுடன் அமர்ந்து கொண்டோம். உண்மையில் வயோதிபர்களுடன் உரையாடுவதோ அவர்களது கதைகளைக் கேட்பதென்பதோ எமக்கு மிகுந்த மகிழ்ச்சிதரும் விடயம். இவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வேளைகளைத் தவறிவிடுவதில்லை. நான்தான் உரையாடலைத் தொடக்கி வைத்தேன்.

"ஐயா இங்க வந்து குடியேறி கன வருடமோ"?

"எங்கட அப்பா, அம்மா கலியாணம் கட்டி இதிலதான் குடியேறியவை. அப்ப அவைகள் புத்தூர் நாகதம்பிரான் கோயிலுக்குப் பக்கத்திலதான் இருந்தவை. நானும் அதிலதான் பிறந்து வளர்ந்தனான். பிறகு எனக்கு ஒரு இருபது இருபத்திரண்டு வயசிலதான் இந்தக் காணிகளெல்லாம் காடுவெட்டி பேமிட் போட்டு உறுதியாக்கினனான். கலியாணம் செய்த பிறகு இங்குதான் பிள்ளை குட்டியள் பிறக்க இருக்கிறன்".

"அப்ப ஐயாவுக்கு இப்ப எத்தனை வயது"?

"எனக்கோ? இப்ப... ஆ, எழுபத்தைஞ்சு ஆகுது. 14 ஆம் ஆண்டு பிறந்தனான் எண்டாப் பாருங்கோவன்".

"உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்"?

"மூத்தது பெடிச்சி. இப்ப கனகராஜன் குளத்தில குடும்பத்தோடு இருக்கிறாள். அடுத்தவன் பெடியன். அவன் ஏதோ வியட்டோ புளட்டோ இயக்கத்தில இருந்து பிறகு சுடுபட்டுச் செத்துப் போனான். இந்திய ஆமி இருக்கேக்கதான், மற்றவன் கடைக்குட்டிப் பெடியன். இப்ப புலவுக்குப் போட்டான் மருந்தடிக்க. இப்ப வந்திடுவான்".

"கனகாணி பூமி கிடக்குதோ"? வாத்தியார் கிளறினார்.

"சீச்சி, என்ன இருபத்தஞ்சு ஏக்கர் நிலம் கிடக்கு. அதில தான் வயலுகள், தோட்டங்களும் இந்த ஒரு ஏக்கரில வீடும் கிடக்குது; இப்ப எல்லாம் போச்சு. உந்த கிளிசு கெட்ட சனங்கள் வரத் தொடங்கினாப் பிறகு கைவிட்டுட்டன். ஏதோ வருசத்தில ஒருநாள் பெரிய படையல் செய்வன்; அவ்வளவுதான்.

இப்ப எங்கே? எல்லாச் சாதியும் இப்ப வெளிநாட்டுக்காரர். அந்தக் காசில எங்களை எங்கே மதிக்கினம்"? பெருமூச்செறிந்தார்.

"எல்லாரும் மனிசர்தானே? உதிலை என்ன சாதி பார்க்கிறது" என இழுத்தேன்.

"என்னெண்டாலும் சாதிக்குரிய மதிப்பு வருமே"? அவருடன் மேதிகமாகக் கதைப்பது அர்த்தமற்றது எனப் புரிந்துகொண்டேன்.

"ஐயா இளையமகனை வெளிநாட்டுக்கு அனுப்பேல்லையோ அங்கதானே எங்கட ஊரிப்பெடியள் வாரிவாரி அள்ளி அனுப்புறாங்கள்"?

வாத்தியார் கூறினார் -

"சா... அதுவும் ஒரு வேலையே, இஞ்ச எங்கட தேசத்திலை இத்தனை நிலம் சும்மா கிடக்க? குளம் நிறைய தண்ணி கிடக்க பொன் விளையிற பூமியை விட்டிட்டு அங்க போறதோ? எனக்கோ பொடிக்கோ கனவிலையும் உந்த எண்ணம் இல்லை. எங்கட ஊரில இருந்து கஞ்சி குடிச்சுக் கொண்டு உந்தக் குளத்தை, காட்டை, கோயிலை, முற்றத்தைப் பார்த்துக்கொண்டு சாகலாம்! உவங்களுக்குப் பயந்து ஒருநாளும் போக மாட்டம்".

அவருடன் உரையாடலில் ஒன்றைத் தெளிவாகப் புரியக்கூடியதாக இருந்தது. இந்த நேரத்தில் நடக்கும் விடுதலைப் போராட்டத்துக்கு எந்த வகையிலும் ஒத்துப் போகக்கூடிய மனப்பாங்கைப் பெற்றிருந்தார். எமது மண் அநாதையாவதோ, எமது வளங்கள் வீணாகிப் போகையில் வெளிநாடு செல்வதோ அவரது விருப்பத்திற்கு மாறானது. ஆயினும் சில பழைய சமுதாயக் கட்டமைப்பை மாற்றத் தயங்குகின்றார். இந்த வேளையில்தான் இளைய தலைமுறைகள் விழித்துக்கொள்ள வேண்டும். இன்று நீங்கள் உங்கள் பெற்றோரை வழிகாட்ட வேண்டிய வரலாற்றுப்படியில் நிற்கின்றீர்கள். ஒரு சிலரால் அது முடியாதுவிடின் உங்களையாவது புதிய பிறப்பிற்காக மாற்றிக் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தென்தமிழீழம்: ஒரு சிறைப்பட்ட வாழ்வு

அவலப்பட்ட ஒரு வாழ்க்கை அந்த மக்களுக்குச் சொந்தமாகி விட்டது.

புலரும் பொழுதிலிருந்து இருளும் வரையும், இருளும் பொழுதிலிருந்து மறுநாள் புலரும் வரையும், மருளும் வாழ்வோடு தென்தமிழீழத்தில் நாட்கள் கடந்து செல்லும், நிம்மதி பறித்தெடுக்கப்பட்ட நிமிடங்கள் அந்த நாட்களைப்போலக் கடந்து செல்லும்.

அந்த மக்களது அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அலகிலும் எதிரி தனது துப்பாக்கியை நுழைத்து வைத்துள்ளான். அவர்களது தினங்களில், அவர்களது தொழிலில், அவர்களது கல்வியில், அவர்களது பண்பாட்டு வாழ்வில், அவர்களது அன்றாட வாழ்வில், அவர்களில்..... எங்கும் பகைவன் கடிவாளமிட்டுள்ளான். "அனுமதியின்றி கடவுளும் அசையமுடியாது" என்பது, அவன் இட்டு வைத்திருக்கும் கட்டளை. மனைக்கு உணவு சமைப்பதிலிருந்து, சேனைக்கு உரம் போடுவது வரை எல்லாவற்றிற்கும் இந்தச் சட்டம் பொருந்தும். சொல்வதைச் செய்யாதவர்கள் சொல்லாமலே கொல்லப்படுவார்கள். இதுதான் தென்தமிழீழச் சட்டம்.




வாழ்வு அலங்கோலமாகிவிட்டது.
காற்றுக்கும் கடலலைக்கும், நிலவுக்கும் சிறை:
அனுமதியின்றிக் கடவுளும் அசைய முடியாது.

அதிகாலை அவலமாய் விடியும். நிசப்தம் எரிச்சலூட்டும் விதமாய் ஆட்சி செய்யும். வாசல் கதவை மெல்லத் திறந்து நீக்கலுக்கூடாய்க் கண்களைச் செலுத்தினால், வேலிக்கு வேலியாகப் பச்சை உடைகள் அணிவகுத்து நிற்கும். கிராமம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் முடிவு செய்துகொள்ளலாம். அவர்களாக வெளியில் வருமாறு சொல்லும்வரைக்கும், படி தாண்டக் கூடாது. அந்த முழுநாளும், அடுத்த நாளும், அதற்கடுத்த நாளும், சில சமயம் அந்த வாரம் முழுவதுமே அந்தக் கிராமம் சல்லடைப் போடப்படும். அக்குவேறு ஆணிவேறாக கிண்டிக்கிளறி ஒவ்வொரு குடிசையும் சோதனையிடப்படும். அவர்களின் மனநிலையைப் பொறுத்து சில எரிக்கப்படும். அங்குள்ள பாடசாலையிலோ, கோவிலிலோ ஒன்றுகூடுமாறு ஊர்மக்கள் பணிக்கப்படுவார்கள். ஏற்கனவே திரட்டப்பட்ட தகவலின்படி தாங்கள் கொண்டுவரும் ஆள் விபரப் பட்டியல் பரிசோதிக்கப்படும். எந்த வீட்டிலாவது எவராவது பட்டியலுக்குக் கூடுதலாக இருந்தால், வந்தவரும் இருந்தவரும் கொண்டுசெல்லப்படுவார்கள். அநேகமானவர்கள் திரும்பி வருவதில்லை. முற்றிகையிடப்பட்டிருக்கும் நாட்களில் ஊர் முற்றாக அங்கவீனமாகிவிடும். தொழிலில்லை, பள்ளிக்கூடங்களில் படிப்பில்லை, கடைகளில்லை, வயல்களில் ஆட்களில்லை, ஆலயங்களில் பூசையில்லை, எல்லாமே வெறிச்சோடிப் போகும். சுருங்கச் சொன்னால்-அநேகமாக அடுப்புகளில் உலை வேகாது, வீட்டு நாய்கூட வீதிக்கு வர அஞ்சும். அப்படியான சுற்றிவளைப்புகள் மாதத்தில் 2, 3 தடவைகள் அல்லது வாரமொரு தடவை, தென் தமிழீழத்தின் ஒவ்வொரு கிராமத்தின் மீதும் நிச்சியமாக நடாத்தப்படும்.

முற்றுகையில் பலவகை. சாதாரண சுற்றி வளைப்பு ஒருவகை. - 'தேடுதல்' என்ற பெயரில் இன்னுமொன்று நடக்கும். அது வித்தியாசமானது. மிகக் கோரமானது. அந்த முற்றுகை முடிந்து அவர்கள் வெளியேறுகிறபோது, ஊர் சூறையாடப்பட்டிருக்கும். எஞ்சியவை கருகிப் போயிருக்கும். ஐந்தோ பத்தோ அல்லது அதனிலும் கூடுதலான ஆட்கள் தெருக்களில் செத்துப்போய்க் கிடப்பார்கள். ஆனால் ஐம்பதோ நூறோ பேர் காணாமல் போயிருப்பர். ஏனையவர்கள் உடுத்த உடையுடன் விரட்டியடிக்கப்பட்டிருப்பார்கள். இந்தவகை முற்றுகை பயங்கரமானது. உயிர்நாடியை உலுக்கக்கூடியது.

ஒரு நாளுக்குத் தேவையான உணவுப் பொருள் மட்டுமே வீட்டிலிருக்கவேண்டும் என்பது, தென் தமிழீழத்தில் நடைமுறையிலுள்ள ஒரு சட்டம். அதோடு, கிராமப்புறங்களில் சிறிய பலசரக்குக் கடைகள்கூட வைத்திருக்கக்கூடாது என்பதையும் அவர்கள் சொல்லிவைத்துள்ளார்கள். அன்றாடம் நகருக்குச் சென்று, அன்றைக்குத் தேவையான உணவுப் பொருளை மட்டும் வாங்கிவர வேண்டும். பகலோ, இரவோ திடீரென வீட்டுக்குள் நுழையும் சிங்களப் படையாட்களுக்குத் தக்கபடி பதில் சொல்லவேண்டும். உணவையும், வீட்டிலுள்ளவர்களையும் சமப்படுத்திக் காட்டவேண்டும். கூடுதலாக இருந்துவிட்டாலோ, "புலிக்குக் குடுக்கவா?" என்று கேட்டு என்னவும் செய்துவிட்டுப் போவார்கள். உட்கொண்டு முடிந்தபின் உணவு எஞ்சியிருந்தாலும் சிக்கல்தான். கண்டார்களென்றால் கதையே வேறு. வீட்டோடு கொண்டு போய்விடுவார்கள்.

வீதிக்கு வீதி காவலரண்கள். சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகள். மைலுக்கொரு படைமுகாம்கள். இராணுவக் கெடுபிடிகள் மிக மோசமானவை. மறித்துவைத்துக் கொண்டு அவர்கள் கேட்கும் கேள்விகள் விசர்த்தனமானவையாக இருக்கும். எந்த ஒரு பொருளைக் கொண்டு போனாலும்-அது சட்டையோ, விளையாட்டுப் பொருளோ, பானையோ என்னவாகத்தான் இருந்தாலும்- ஏன்? எதற்கு? புலிக்குக் குடுக்கவோ? என விசாரிப்பார்கள். மூளைக்கும் வாயிற்கும் தொடர்பில்லாதவிதமாய் அவர்கள் போடும் கேள்விகளுக்கு, மிகத் தெளிவாகப் பதிலுரைக்க வேண்டும். தளம்பிக்கொண்டு நின்றால் தள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். சோதனை முகாமிற்கு 300 யார் முன்னதாகவே ஊர்திகளிலிருந்து இறங்கவேண்டும். நடந்து போய், சோதனை முடிந்து திரும்பவும் 300 யார் நடந்துதான் ஊர்திகளில் ஏறவேண்டும். கல்முனையைச் சேர்ந்த ஒரு வர்த்தகர், "முன்னையெல்லாம் மட்டக்களப்பிலிருந்து வர ஒன்றரை மணி நேரம் போதும். இப்பெல்லாம், நாலு அஞ்சு மணி பிடிக்கிறது. 15 மைல் தூரம் போறதெண்டா, அதில் இவனுகளின்ர காம்புகளுக்கு முன்னால நடக்கிற தூரம் அஞ்சு மைல் வரும்" என்று சினந்துகொண்டார்.

ஒவ்வொரு காலையிலும், ஒவ்வொரு குடிமகனும் அருகிலுள்ள குறிப்பிட்ட ஒரு படை முகாமில் சென்று, தங்கள் இருப்பைப் பதிவு செய்யவேண்டும். ஊருக்கு வெளியில் எங்கு செல்வதென்றாலும் படை முகாமில் முன்அனுமதி பெறவேண்டும். அப்படியாக அனுமதி பெறப்போகின்றவர்களிடம் எங்கே போகிறார்கள்? ஏன் போகிறார்கள்? எவரிடம் போகிறார்கள்? எப்போது வருவார்கள்? என்பதையெல்லாம் துருவித் துருவி விசாரிப்பார்கள். பதில்கள் படையினருக்குத் திருப்தியளித்தால் மட்டுமே அனுமதி கிடைக்கும். வடக்குக்குச் செல்வதுபற்றி எவரும் மூச்சுவிடக்கூட முடியாது. 'வடக்கு' அவர்களுக்கு 'ஒவ்வாமை' ஆனது.

விதைக்கப்பட்ட வயல்நிலம் செழித்து வளரும்போது, அதற்கு உரம்போடுவதைப் பற்றி பருவகாலங்கள் தீர்மானிப்பதில்லை. படையினர்தான் தீர்மானிப்பார்கள். காலம் வந்ததோ இல்லையோ, வயல் வளர்ந்ததோ இல்லையோ, படையினர் அனுமதிக்கும்போதுதான் உரம் போடமுடியும். அதேபோல், வரம்புயர வளர்ந்து அசைந்தாடும் கதிர்மணிகளை அறுவடை செய்வது பற்றி, நெற்கதிர்களின் முதிர்ச்சி நிலை தீர்மானிப்பதில்லை. சிங்களப் படையினரின் வசதியைப் பொறுத்துத்தான் அது தீர்மானிக்கப்படும். அவர்கள் சொல்லும் நாளில்தான் அறுவடை செய்யவேண்டும். ஏனெனில் அப்போதுதான், அரிந்து குவித்து சூடடித்து தமிழர்கள் நெல்லை மூட்டைகட்டி வைக்கும்போது, சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் அனுப்பி எடுப்பிக்கமுடியும்.

பொதுவாக - உலகெங்கும்-சந்தைகளில்-அது என்ன வகைப்பட்டதாய் இருந்தாலும்-பொருட்களை விற்பவன்தான் அவற்றுக்கு விலை சொல்லுவான். ஆனால், தென் தமிழீழத்துச் சந்தைகளில் அது தலைகரணமாகத்தான் நடக்கும். வாங்குபவனே விலையை முடிவுசெய்வான். ஏனெனில் விற்பவன் தமிழன். அயல் கிராமங்களில் இருந்து பொருட்களை வாங்குகின்றவன் முஸ்லிம் அல்லது சிங்களவன். தமிழன் பொருட்களுக்குப் பேரம் பேசினால் அவர் அடுத்தநாள் இருக்கமுடியாது. காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் காணாமல் போய்விடுவார். எனவே, சொல்லும் விலைக்குப் பொருளைக் கொடுத்துவிட்டு, தருகின்ற பணத்தை வாங்கிக் கொண்டு போகவேண்டியதுதான்.

சத்துருக்கொண்டான் கிராமத்தைச் சேர்ந்த-தற்போது அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ள-பாடசாலை ஆசிரியை ஒருவர் சொன்ன கருத்து பின்வருமாறு -

அநேகமான விடிகாலைகளில் முழுவியளம் மனிதப் பிணங்களின் மீதாகத்தான் இருக்கும். நினைவில் வைத்துக்கொள்ள முடியாமல் மறந்து விடக்கூடிய அளவுக்கு கொலைகள் நடந்துள்ளன. ஒவ்வொரு மூச்சுவிடும் போதும் படையினருக்கு விளக்கமளிக்க வேண்டும். இதுதான் சாட்டு என வைத்துக்கொண்டு, தேசத்துரோகக் கும்பல்களைச் சேர்ந்தவர்களும், தங்களது சொந்த-குடும்பப் பிரச்சனைகளுக்குப் பழிதீர்த்துவிடுவார்கள். சில சமயங்களில், "ஏனடா இங்கு வந்து பிறந்தோம், யாழ்ப்பாணப் பக்கம் ஓடி விட்டாலும் நல்லது" என்றிருக்கும் என்றவாறு அவர் தனது உணர்வலைகளை வெளியிட்டார்.

சிங்கள அரசு நடாத்தும் இராணுவ ஆட்சியின்கீழ் கோரமாக நசுங்கிப்போயிருக்கும் தமிழீழத்தின் தென்பிராந்தியத்தில், உண்மையில் 'உயிர்வாழ முடியாது' என்பதே தமிழர்களுக்குள்ள பெரிய பிரச்சினை எனலாம். ஆனால், 'உயிர்வாழ்வதோ' அதைவிடப் பெரிய பிரச்சினையாக உள்ளது. அன்றாட வாழ்வு முழுமையாக அலங்கோலப்பட்டுப் போயுள்ளது. எந்த நேரமும் பயங்கரம்-எந்த வேளையும் எதுவும் நடக்கலாம். சிங்களத் துப்பாக்கிகளின் உத்தரவின்கீழ்தான் இந்த மண்ணில் எதுவும் இயங்கலாம் -படுவான்கரைக் காற்று, எழுவான்கரைச் சூரியன், நிந்தாவூர்க் கடலலை, எல்லாவற்றுக்கும் சிறைதான்.

மாங்கேணிப் பகுதியைச் சேர்ந்த ஒரு ஒய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் சொன்னார்:

"தன்னோட இனிமேல் தமிழர்கள் சேர்ந்து வாழமுடியாது என்பதைத்தான் சிங்களவன் எங்களுக்கு உணர்த்துகிறான். அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும்போது, சிறை உடைத்து வருவது போன்று ஒரு உணர்வு ஏற்படுகின்றது." ■

## ஜனாதிபதியின் போக்கு தொலைநோக்கு அற்றது

### விஜேதுங்கா மீது இந்து பத்திரிகை சாடல்

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று விஜேதுங்கா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவது இனநெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சவாலை வெறுமனே பயங்கரவாதம் என்று தரம் குறைப்பதும் தூரதிருஸ்ட்டியான தந்திரோபாய நோக்கு இல்லாதிருப்பதையே எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு இந்துப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதில் மேலும் இராணுவத் தீர்வு மார்க்கமானது கொழும்பில் அதிகாரத்தில் இருந்த அரசாங்கத்திற்கு அனர்த்தமானது என்பது, மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும். கிளாலியிலும் பூநகரியிலும் கடந்த வருடம் இடம்பெற்ற சம்பவங்கள் தாக்குதல் தொடுப்பதில் புலிகளுக்கு இருக்கும் வல்லமையும் ஆற்றலும் அசைக்க முடியாதவையாக தொடர்ந்தும் இருப்பதையே உணர்த்துகின்றன. வடக்கு -கிழக்கிலே நடைபெறும் போரிலே சிறீலங்காப் படைகள் வெற்றி பெறும் சாத்தியத்திற்கு எதிரானதாகவே பலச்சமநிலையும் இருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது. ■

## மன்னாருக்கு விரிவாக்கம் பெற்றது

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது செயற்பாடுகளை மன்னார் மாவட்டத்திற்கு விஸ்தரித்துள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பலவித செயற்பாடுகளையும் மேற்கொண்டு வந்த இக்கழகம் இப்போது மன்னார் மாவட்டத்திலும் செயற்பட ஆரம்பித்துள்ளது. போசாக்குக் குறைந்தவர்களுக்கான வெளிப்புற சிகிச்சை நிலையம், போசாக்கு புனர்வாழ்வு நிலையங்கள் என்பன இக்கழகத்தால் செயற்படுத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்றலாக வீசிய புயல்

பூநகரிச் சமர்தான் புலிகள் இயக்கத்தின் பலத்தையும், அதன் போரிடும் சக்தியையும் எடுத்தியம்பியது. ஆனாலும், ‘புலிகளுக்கே உரித்தான சண்டை’ என்று, புலிகளின் போர்த்திறனைப் பறைசாற்றிய சண்டையென்று புலோப்பளைச் சமரைத்தான் சொல்ல வேண்டும்.

பட்டப் பகற்பொழுதில், கவசங்களற்ற வெட்ட வெளிப் பிரதேசத்தில், மணலோடு மணலாகி மறைந்திருந்த புலிகள், கவசங்களுடனும், கனரக ஆயுதங்களுடனும் நகர்ந்த எதிரிகளுக்கு முன்னால், ஆக்ரோசமாக எழுந்தபோது உலகையே வியப்பிலாழ்த்திய அந்தச் சண்டை வெடித்தது.

டாங்கிகளும், பீரங்கிகளும், நவீன போர்க் கலங்களும், மனஉறுதிக்கு முன்னால் மண்டியிட்டன. சாவுக்கு அஞ்சாத துணிவுக்கு முன்னால், பகைவனின் படை துவம்சமாகிப் போனது. நுட்ப தந்திரோபாயமான போர் வியூகத்திற்குள் சிக்கி, சிங்களச் சேனை சிதைந்தழிந்தது. டாங்கிகளும், கவச வண்டிகளும் நொருங்கின. ‘எக்கச்சக்கமான’ ஆயுதங்களை எதிரி பறிகொடுத்தான்.

வரலாறு காணாத படுதோல்வியைப் பரிசளித்து, புறப்பட்ட இடத்திற்கே பகைவனைத் திருப்பி அனுப்பிவைத்தனர் புலிகள்.

யாழ் குடாநாட்டின் உயிருக்கு உயிர் கொடுத்த, யாழ்ப்பாண மக்களின் வாழ்வுக்கு வாழ்வளித்த அந்தச் சண்டைக் களத்தில்தான் வன்னி நிலத்தின் போர்மறவன், எங்கள் நரேஸ் வீழ்ந்தான்.

புலோப்பளையில் - பெருவெற்றியைப் பெற்றுத்தந்த, ஒரு சண்டை முனையை வழிநடாத்திக் கொண்டிருந்தபோது நரேசுக்கு முன்னால் வீழ்ந்த எதிரியின் பீரங்கிக் குண்டொன்று அந்த வீரத்தளபதியை எங்களிடமிருந்து பிரித்துக் கொண்டது.

அவனோடு கூட இன்னும் 85 தோழர்கள், அந்த வெற்றிக்கு விறகானார்கள்.

அப்போது அவனுக்குப் பதினாறு வயது. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது -பத்தாம் வகுப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு, தாய் நாட்டிற்காக அவன் துப்பாக்கியைத் தூக்கினான்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் - ஒரு மாலைப் பொழுது மங்கிக் கொண்டிருந்தது. காலையிலேயே வந்துவிட்டதால், பொறுமையை அடக்க முடியாமல் அவன் காத்துக் கொண்டிருந்தான். "எப்படியாவது போய்விட வேண்டும்". கூட்டிச் செல்பவரைக் காணவேயில்லை. புதுக்குடியிருப்பில் ஒதுக்குப் புறமாக இருக்கும் அந்த வீடுதான், புலிகள் இயக்கத்தின் தொடர்பு இடம்.

திடீரென படலையடியில் கேட்ட சத்தத்தில் "அவர்தானா....?" என ஆவலோடு எட்டிப் பார்த்தவன் அதிர்ந்து போனான். வந்து கொண்டிருந்தது இவனது அண்ணன். தன்னைக் கூட்டிச் செல்லத்தான் அவர் வருகிறார் என்பதை ஊகிக்க அவனுக்கு நேரமெடுக்கவில்லை. இலேசாகப் பயம் பிடித்துக் கொண்டது. ஆனாலும், மனசுக்குள் பொருமினான். "தாங்களும் போகமாட்டினம். போற ஆட்களையும் விடமாட்டினம்." அப்படியே சொல்லித் திருப்பி அனுப்பிவிட வேண்டும்; நினைத்துக் கொண்டான். ஆனால், விடயம் தலைகரணமாக நடந்தபோது, அவனால் நம்பமுடியவில்லை. வந்த அண்ணனும், வீட்டின் ஒரு மூலையில் போய் குந்திக் கொண்டார். கண்கள் சந்தித்தபோது, ஆளையாள் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டார்கள். யாராவது ஒரு ஆள் வீட்டிற்குத் திரும்பியே ஆகவேண்டும் என்றது இயக்கம். "நீ சின்னப் பையன்தானே, வயசு வரட்டும்" என்று நரேசைத்தான் வீட்டுக்குப் போகச் சொன்னான் அண்ணன். தம்பி மறுத்துவிட்டான்; அடியோடு மறுத்துவிட்டான். "வீட்டுக்கு ஆள் வேணுமெண்டால் நீயே போ" என்று அண்ணனுக்குச் சொன்னான்.

அண்ணனும் மறுத்துவிட்டான். இருவருமே பிடிவாதமாக இருந்தார்கள். முடிவெடுக்க முடியாத சிக்கலில் முகாம் பொறுப்பாளர் மாட்டிக்கொண்டார்.

கடைசியில், வன்னியின் ‘ஜீவன்’ பயிற்சி முகாமின் முதலாவது அணியில் அண்ணனும் தம்பியும் ஒன்றாகவேதான் பயிற்சி எடுத்து, முடித்து வெளியேறினார்கள்.

நரேசின் போராட்ட வாழ்வு இப்படித்தான் ஆரம்பித்தது.

துடிதுடிப்பாகத் துள்ளித் திரிந்த அந்தப் பெடியனை ஊரில் எல்லோரும் ‘குரு’ என்றுதான் செல்லமாகக் கூப்பிடுவார்கள். 07-11-1969 அன்று, சிங்கராஜா -மேரி கமலீன் தம்பதிகளின் இரண்டாவது குழந்தையாக அவன் கண் திறந்தபோது, பெற்றவரும் பேரர்களும், சுற்றவரும் சேர்ந்து வைத்த ‘அருமைநாயகம்’ என்ற பெயர், பள்ளிக்கூடப் பதிவுக்கு மட்டுமே செல்லுபடியானது. அந்தச் சின்னவன் குறும்புத்தனம் அதிகமானவனாக இருந்தபோதும், பசுமையாகப் பழகும் பண்பும், இலகுவில் இரக்கப்பட்டுவிடும் சுபாவமும், கோபம் வந்தால்கூட எவரையும் அளவுக்கு அதிகமாகக் கோபித்துக் கொள்ளாத இயல்பும் அவனிடம் குடிகொண்டிருந்தன. கதைகளுக்கு அவ்வளவு இடம் கொடுக்காது, காரியங்களில் மட்டும் கண்ணான ஒரு குணாம்சமும், எதனையும் துருவித் துருவி ஆராய்ந்து விடயங்களை அறிய விழையும் ஆர்வமும் அவனிடமிருந்த சிறப்பான தன்மைகள். எடுத்துக் கொண்ட எந்த முயற்சியையும், நிறைவெய்தும்வரை நிறுத்திக் கொள்ளாத உழைப்பாளி அவன். பிஞ்சுப் பருவத்திலேயே அறிவும், ஆற்றலும் அவனுக்குள் விதைபோட்டு வளரத் துவங்கியிருந்தன. அவனுக்குள் ஊறிப் புரையோடியிருந்த இத்தகைய உயர்ந்த தன்மைகள்தான் -படிப்படியாக பரிணமித்து -பிற்காலத்தில் , சண்டைக் களங்களின் அதிபதியாகச் செயற்படக்கூடிய தகைமைக்கும் -நிர்வாகப் பொறுப்பாளனாகப் பணியாற்றக்கூடிய தகுதிக்கும் அவனை வளர்த்துச் சென்றன என்று சொல்லலாம்.

இந்திய ஆக்கிரமிப்புப் பூதம் எங்கள் நிலமகள் மேனியில் கோரத் தாண்டவம் ஆடிய ஆரம்ப நாட்களில் ஒன்று அது. புதுக்குடியிருப்பில், சிற்றூர்ப் பொறுப்பாளனாக, நரேஸ் அப்போது அரசியல் வேலை செய்துகொண்டிருந்தான். அடிக்கடி மேலால் பறந்து இலக்கற்றுச் சுட்டுக் கொண்டு திரிந்த இந்திய வல்லூறு ஒன்று, அன்றும் வந்து சுட்டுக் கொண்டுபோனது. இலக்கு வைத்துச் சுட்டதோ, இலக்கின்றித்தான் சுட்டுவிட்டுப் போனதோ தெரியவில்லை. ஆனால், அதன் ரவைச் சன்னங்கள், நரேசின் நாரியையும் உடைத்து, இடது காலையும் துளைத்துச் சென்றுவிட்டன. அருகிலேதான் வீடு. யாரோ ஓடிச் சென்று சொல்லிவிட பெற்றெடுத்த தாய் மனது ஓலமிட்டது. ஓடோடி வந்த அன்னை, ஊறிப்போகாமல் நிலத்தில் தேங்கி நின்ற குருதியில் விழுந்து விம்மி வெடித்துக் கதறிக் கொண்டிருக்க, வைத்தியசாலைக் கட்டிலில் -தனது காயத்துக்குக் கட்டுப் போடுவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தான் மைந்தன்.

காயம்மாறி வந்தவன் கண்ணிவெடிக்கு இலக்குத் தேடினான். வைக்கக்கூடிய இடத்தையும் தேடினான். வசதியான இடம் அவனது சொந்த வீட்டிற்கு அருகில்தான் இருந்தது.

வேவு பார்த்து, நேரம் குறித்து, படை வண்டித் தொடரில் இத்தனையாவதுக்கு என இலக்கு வைத்து, கண்ணி வெடி புதைத்து, வயரிழுத்து, பற்றைக்குள் பதுங்கி அமத்த அவன் காத்திருந்தபோது -காட்டிக் கொடுப்பவன் காரியம் பார்த்துவிட்டான். அந்த ‘நல்ல வேலையை’ செய்தவன் நரேசின் வீட்டையும், குடும்பத்தையும் சேர்த்துக் காட்டிக்கொடுத்தான்.



லெப்.கேணல் நரேஸ் - நாயகன்

இந்தியர்கள் வளைத்துப் பாய்ந்தார்கள். அந்த விடுதலைப் புலி தப்பி விட்டான். அம்மாவும் பிள்ளைகளும் கூடத் தப்பி விட்டார்கள். ஆனால், அப்பா சிக்கிக் கொண்டுவிட்டார்.

அவரது கையாலேயே தீ மூட்ட வைத்து, அனல் வாய்கள் அவர்களது குடிசையைத் தின்று தீர்த்துச் சாம்பராக்கும் அக்கிரமத்தைக் கண்களாலும் காணவேண்டிய கொடுமைக்கு அப்பாவை உள்ளாக்கிய இந்தியர்கள், அவரை இழுத்துக் கொண்டு போனார்கள். அன்று கொண்டு போனவர்கள் தான் -அதன் பிறகு அப்பா வரவில்லை; இன்றுவரை ...... வரவேயில்லை.

அப்பா இனி வரவே மாட்டார் என்பது தெரிந்தபோது, அம்மா துவண்டு போனாள்.

அப்பாவைப் பறிகொடுத்த சோகம், பெரும் சுமையாய் அம்மாவை அழுத்திக் கொண்டது. அப்பா உயிரிழந்ததோடு, அம்மா உயிரிருந்தும் இல்லாதுபோலாகிவிட்டாள். கொஞ்ச காலத்துக்கு முன்னர்தான் ஆசைத் தங்கை கனிஸ்ராவை இயற்கையிடம் இழந்துபோயிருந்தது அந்தக் குடும்பம். இது அடுத்த இடி. இந்த வேதனையின் தொடர் இத்தோடு முடிந்ததா?... இல்லையே! அம்மாவின் ஆத்மாவைப் பிழிந்த கொடுந்துயர் நீளத்தானே செய்தது; இதன் பிறகு, அவள் பாசத்தைக் கொட்டி வளர்த்த குழந்தைகள் இருவரை அம்மா அடுத்தடுத்து இழந்த துன்பம் நிகழ்ந்தது! லூர்து நாயகத்தையும், மரிஸ்ரலாவையும் கொடிய நோய்கள் பிரித்துக் கொண்டு போனபோது அம்மாவை நடைப்பிணமாக்கிய அந்தச் சோகத்தை...... அம்மாவின் மனநிலைக்கு உருக்கொடுக்க வார்த்தைகள் கிடையா.

இந்தியப் படையின் இடைவிடாத நெருக்கடி; அம்மாவுக்கும், தம்பி தங்கைக்கும் ஆறுதல் சொல்லித் தேற்றிவிட்டு, நரேஸ் தலைமறைவாகிவிட்டான்.

இந்தியாவை எதிர்த்து புலிகள் நிகழ்த்திய அந்த ஆச்சரியமான வரலாற்றுப் போரில் -அதன் பிறகு அவனது பணி அடர்ந்த காடுகளுக்குள் தொடர்ந்தது. "சூரிய ஒளி உட்புகாத வனங்களில் புலிகளைத் தேடுகிறோம்" என இந்தியர்கள் வர்ணித்த இடங்களிலெல்லாம், அவன் இந்தியர்களைத் தேடினான். எதிரிகளுக்காகக் காத்துக் கிடந்தான். அவர்களது அசைவுகளையெல்லாம் வேவு பார்த்தான். கேட்டுக் கேள்வியின்றிப் புகுந்தவர்களுக்குப் புலிகள் புதைகுழி தோண்டிய சண்டைகளில், அவனது துப்பாக்கி இலக்குத் தவறாமல் இயங்கியது.

குமுழமுனையில் ஒரு சண்டை. இதே இடத்தில் வைத்து எங்கள் வீரர்கள் மீது இந்தியர்கள் பதுங்கியிருந்து தாக்கியதற்குப் பதிலடியாக அது நடத்தப்பட்டது. அன்று வீழ்ந்துபோன எங்கள் தோழன் ஒருவனின் தலையை இந்தியர்கள் அறுத்தெடுத்துப் போய்விட்டார்கள். ‘அவர்களுடைய பாணியிலேயே அவர்களுக்குப் பதிலளிப்பேன்’ என்று சொல்லிச் சென்ற நரேஸ், சொன்னதைச் செய்தான்.

போர் புரிவதன் நவீன வழிமுறைகளைப் பற்றி, பிரபாகரனின் படைகளிடம் பாடம் கற்றுக்கொண்டு, இந்திய வல்லாதிக்கத்தின் பட்டாளங்கள் வெளியேறிய பின் -மீண்டும் போரோசை அதிர, ‘இரண்டாவது ஈழ யுத்தம்’ ஆரம்பித்தபோது, வன்னியின் சண்டைமுனைகளில் ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நரேஸ் முழங்கத் துவங்கினான்.

இராணுவத்தினரைத் தாக்கி முகாம்களுக்குள் முடக்கிய புலிகள், படிப்படியாக முகாம்களைத் தாக்கி அழிக்கத் துவங்கியபோது -போர் புதிய பரிமாணத்தைப் பெற்றது.

கொக்காவில் படை முகாமை நிர்மூலமாக்கியபோது, ரவைகள், நரேசின் இடதுகாலில் துளையிட்டன. மாங்குளம் முகாமைத் தகர்த்தழித்த கடைசித் தாக்குதலின்போது காயம் இடது கையில் பட்டது. முல்லைத்தீவு முகாம் முற்றுகைக்குள், முடக்கப் பட்டவர்களுக்கு முண்டுகொடுக்க, கடல்வழியாகத் தரையிறங்கி வந்தவர்களை எதிர்கொண்ட சண்டையில், இயந்திரத் துப்பாக்கியின் சன்னங்கள் இடுப்பை உடைத்துச் சென்றன.

இப்படியிருக்கையில் - 1991 இன் முடிவுப் பகுதியில் -அது ஒரு துயர நாள். படையினரின் பதுங்கித் தாக்குதலொன்றில் எமது முல்லைத் தீவு மாவட்ட சிறப்புத் தளபதி மேஜர் காந்தனை நாம் இழந்துபோனோம். அதன் பிறகு, அவனின் இடத்திற்கு ஆற்றலும், ஆளுமையும் கொண்ட நரேஸ், தளபதி பால் ராஜின் பரிந்துரையின் பேரால் நியமிக்கப்பட்டான்.

மக்களின் குடிசைக்குள்ளேதான் அந்த விடுதலைப் புலி குடியிருந்தான். அவர்களின் மேல் அளவுகடந்த பாசத்தைப் பொழிந்து நின்று, அவர்களது இன்பங்களிலும், துன்பங்களிலும் பங்காளியானான். முகாமில் கூடியிருக்கும்போது, "அந்த ஊர்ச்சனங்கள் சரியாக் கஸ்ரப்படுதுகள்" என எங்களுக்குள் கதைத்துக் கொள்வது அவனது காதில் விழுந்த -அடுத்த நாள், கையிலுள்ளவற்றை எல்லாம் கொண்டுபோய் வைத்துக் கொண்டு, அந்தக் கிராமத்தில் நரேஸ் நிற்பான். மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய, தன்னால் இயலுமானவரைக்கும் வழி செய்து கொடுத்தான். மக்களை அணிதிரட்டி துணைப்படையை உருவாக்கி, போர் அரங்குகளில் மெச்சத்தக்க விதமாகச் சேவையாற்ற வைத்தான். எதிரி நகரக்கூடும் என அரவம் தெரிந்த இடங்களிலெல்லாம், அந்தத் தளபதி ஊன் உறக்கமின்றிக் கிடந்தான். ஒவ்வொரு துப்பாக்கிக்கும் ‘நிலை’ காட்டினான். அல்லும் பகலும் ஓய்வின்றி நின்று, அரண்களுக்கு அமைவிடம் சொன்னான்.

அந்த நாட்களில் - லெப். கேணல் நவநீதனின் உற்ற துணையோடு அவன் செய்து முடித்த பணிகள் ஏராளமானவை.

அன்றொருநாள். வற்றாப்பளை அம்மன் கோவிலில் கொடியேறி திருவிழா ஆரம்பித்திருந்தது. சிங்களப் படையிடம் அனுமதி வாங்கி, செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணை பெற்று, வன்னி நில மக்கள் கோலாகலமாகக் கொண்டாடிய அந்தப் பெருவிழா மீது, சிங்கள வெறியர்கள் பீரங்கிக் குண்டுமழை பொழிந்து நாசப்படுத்திய கொடூரம் நடந்தது. செய்தியறிந்தபோது நரேஸ் கொதித்தான். அந்தத் துயரம் அவனது இதயத்தில் அம்புகளாய்த் தைத்தது. "பதிலடி கொடுத்தே தீருவேன்". அந்த மணித்துளியிலேயே சொல்லி வைத்தான். காயமடைந்தவர்களுக்கு உதவவென அவன் அனுப்பி வைத்த வாகனங்கள், கோவிலை நோக்கி விரைந்துகொண்டிருக்க, முல்

தொடர்ச்சி 10ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Network

April 1994 Published by the International Federation of Tamils

"We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."

- Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

## Swiss Federation of Tamil Associations tells Swiss immigration authorities -

# "TAMILS WOULD GO HOME IF THEY COULD"

**The Swiss Federation of Tamil Associations has appealed to the Swiss authorities in Berne to reconsider their decision to forcibly repatriate Tamil asylum seekers to Sri Lanka. The appeal was presented on 14 April 1994 at the conclusion of a three day sathyagraha fast by Tamil asylum seekers.**

Earlier, on 9 April, the Swiss Federation of Tamil Associations participated in a mass anti racist rally organised by around 25 political and human rights organisations at Berne to protest against the recent regulations introduced against asylum seekers in Switzerland. Speaking at the Rally, Mr.Anton Ponraj from the Swiss Federation of Tamil Associations and the UN Section of the International Federation of Tamils said: ''In the name of all that is just, all that is compassionate, please express your disgust and revulsion at the efforts being made to send back Tamil asylum seekers to Colombo to face arrest, detention, torture and possible death at the hands of the Sri Lanka authorities. At the same time, please help to remove the underlying causes which have led to the influx of Tamil asylum seekers in Europe - that surely is the effective way, the humane way of stopping and reversing the flow of Tamil asylum seekers.''

He added: **''Countries in Europe have had to bear the cost of genocidal actions of the racist Sri Lanka government. But, it is this very same racist Sri Lanka government which is often propped up by some European governments with aid and arms. This foreign aid to racist Sri Lanka not only spills Tamil blood in Sri Lanka but also brings Tamil refugees in Europe.''**

Mr.Ponraj concluded: ''Instead of sending back Tamil asylum seekers to face detention, torture and death in Sri Lanka, there is a need for Western governments to stop foreign aid and arms to Sri Lanka.''

**''Instead of sending back Tamil asylum seekers to face detention, torture and death in Sri Lanka, there is a need for Western governments to openly recognise the right of the Tamil people to live in their own land, free from the oppressive rule of a racist Sri Lanka government.''**


''These are the steps that will help to persuade the racist Sri Lanka government that the world will not watch silently and condone its genocidal attack on the Tamil people. These are the steps that will impress upon the Sri Lanka government the need to seek a political solution to the conflict and create the climate for the return of Tamil asylum seekers to their homeland.''

**In the twenty page appeal presented by the Swiss Federation of Tamil Associations to the Swiss government authorities on 14 April, the Federation said:**

''We understand that the governments of Switzerland and Sri Lanka signed an agreement on 12 January 1994 in Colombo to forcibly repatriate Tamil asylum seekers in Switzerland and that in the first instance, upto 3000 asylum seekers who arrived after 1992 and whose asylum claims had been rejected were to be targeted. It is also reported by the British Refugee Council publication, the Sri Lanka Monitor, that another 16,000 Tamil refugee cases, still undetermined, have been reopened and most are likely to be refused.

May we respectfully point out that the proposed forcible repatriation of Tamil asylum seekers offends the fundamental provisions of the UN Convention on Refugees and that Tamils sent back in this way to Sri Lanka will

*continued on page 3*




Courtesy: Amnesty International Journal

## Tamil asylum seeker in Sweden sets himself on fire rather than face forced return to Sri Lanka

**On 2 March 1994, a 36 year old Tamil asylum seeker, Vickramaraja Tissaiveerasingham, living in Ensobing in Sweden set himself on fire and suffered serious burn injuries.**

**Tissaiveerasingham** who had come from Mullativu in the North-East of the island of Sri Lanka had been told by the Swedish Immigration Ministry that his permission to stay in Sweden would end on 14 March and that he would thereafter be kept in custody pending deportation back to Sri Lanka.

He had thereupon set himself on fire and attempted to commit suicide at about 10.40 a.m. He was seen in flames in the street in Ensobing and was rescued by a Swede and admitted to the teaching Hospital at Uppasala. 63% of his body was burnt and he remained unconscious on the following two days.

**The International Federation of Tamils in a Press Release dated 9 March said:"The action of this Tamil asylum seeker in Sweden in preferring death, even by fire, to a forced deportation to Sri Lanka shows in stark terms the oppressive ground reality in Colombo and other areas controlled by the Sri Lanka government.**

The Sri Lanka government seeks to pretend in international fora that conditions in the island resembles that presented in its tourist brochures. The harsh truth is that indiscriminate aerial bombardment of the North has continued with increasing intensity even as the UN Commission on Human Rights sits in Geneva and deliberates on whether the Sri Lanka government has honoured the commitments it gave in March 1993 to observe the norms of humanitarian law and uphold human rights standards.

Hundreds of Tamils continue to be arbitrarily arrested in the East in those areas within the control of the Sri Lanka armed forces. Many of those arrested have subsequently 'disappeared'. In Colombo, during the past year, more than 15 thousand Tamils have been arrested at random and many have been tortured.

**Amnesty reported in February 1994: "During this period (since the beginning of 1993) thousands of Tamil people.. were arbitrarily arrested and detained, solely on account of their ethnicity, especially in Colombo.. Torture and ill treatment in custody continued .. The indiscriminate round ups of people solely because of their ethnic origin, and reports of their treatment in custody, is making many members of the Tamil community fearful that they are not safe to walk the streets of Colombo..."**

**The International Federation of Tamils expresses its dismay at the decision taken by some governments in the West to repatriate Tamil asylum seekers to Sri Lanka.. we urge those governments who have decided to repatriate, even small numbers of Tamil asylum seekers, to reconsider their decision and honour their obligations under the UN Convention on Refugees, both in letter and in spirit."**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Candidly Speaking

**Nadesan Satyendra**

**What went wrong for the UNP in the South? The SLFP led People's Alliance victory with 54% of the votes and, in Parliamentary electoral terms, 20 out of 21 seats, reportedly sent the Colombo stock market into a tail spin. But why did the UNP which had so easily 'won' in the East lose so badly in the South? After all in the East, just three weeks previously, on 1 March, ballot boxes had been stuffed with impunity. Why was the UNP unable to stuff the ballot boxes in the South?**

For one thing, it is always easier to stuff ballot boxes where the registered voters have been either driven by the army into 'refugee camps' or have fled from their homes to the North for safety. For another, in the East, where the Sri Lanka army is waging war against the Tamil people, the Sinhala army and Sinhala goon squads had little compunction in using their armed force, quite openly, on what was after all an alien Tamil people. John Stuart Mill put it rather well many years ago in 1872:

"Free institutions are next to impossible in a country made up of different nationalities... the grand and only effectual security in the last resort against the despotism of the government is in that case wanting: the sympathy of the army with the people. Soldiers to whose feelings...the subjects of the same government are foreigners, will have no more scruple in mowing them down, and no more reason to ask the reason why, than they would have in doing the same thing against declared enemies"

## "In the end it is Sinhalese, not Tamils who must answer the question: Is Tamil Eelam worth dying for?"

**In the South, however, there were limits to which a Sinhala security force could be used against its own Sinhala people. It was the same limitation which prevented President Premadasa from resorting to aerial bombardment of the Sinhala South, even at the height of the JVP insurgency. Here, the comment by the unsuccesful UNP Chief Minister candidate M.S.Amarasiri tells its own tale. He said that one of the reasons for the UNP defeat was "the way 'some' police officers were behaving in the South during the elections!"**

Again, a week before the elections, the SLFP General Secretary, D.M.Jayaratne, in a 6 page letter to the Election Commissioner (copied to Buddhist religious leaders, and newspaper editors) had threatened a mass uprising if the elections were tampered with. He said:

"In the Eastern elections on March 1, we are aware that fully armed highly placed UNPers with the help of certain Police officers have gone to police stations, intimidated the polling staff, placed a cross against the Elephant (the UNP symbol) and forcibly put them into ballot boxes... We earnestly appeal to prevent attempts being made unfairly to win the Southern Provincial Council elections by the violations of laws... which otherwise would provoke the masses to act against the abuse of power by the government"

So it was that the UNP which 'won' in the East was routed in the South. After the results, UNP General Secretary, Sirisena Cooray said: 'What surprises me is that in a predominantly Sinhala South the UNP lost.'

But if a government has presided over the liquidation of 60,000 of its own Sinhala people (many of them from the South) over a period of two years, it should not be too surprised if the relations and friends of the dead harbour a deep seated grievance against the ruling party and all that it stands for.

In the Provincial Council elections in early 1993, the opposition vote was split between the Peoples Alliance and the DUNF. This time round, the Peoples Alliance polled the DUNF vote as well, leading UNP General Secretary, Sirisena Cooray to comment: "The return of Gamini Dissanayake to the UNP did not help'. But, then, neither did the discovery of the mass graves in Suriyakanda, in early January, further the UNP cause.

However, the state controlled Sri Lanka Sunday Observer was not altogether wrong when it said, a week before the elections: "The deep south may be radical in complexion, but it is also Sinhala territory where Sinhala Buddhist sentiment forms the bed rock of the political discourse."

After all, the deep South was JVP territory and Rohana Wijeweera was not always backward in pitching his appeal to Sinhala chauvinism. But, in the event, President Wijetunga's brand of Sinhala chauvinism was not enough to erase the memory of 60,000 killings and bridge the increasing alienation of the Sinhala rural voter, from the ruling Sinhala elite 'living it up' in urban Colombo.

**Furthermore, SLFP's Chandrika Kumaranatunga was careful not to offend basic Sinhala chauvinist sentiment. She stated repeatedly: 'We are against Eelam. We are for devolution without Provincial Councils'.**

The sophisticated Sinhala voter in the South had enough political savvy to know that devolution (with or without provincial councils) was, ofcourse, the 'run around' that Sinhala political parties had given the Tamil people for more than 40 years. Again the voters were well aware that the SLFP had a respectable Sinhala Buddhist chauvinist pedigree dating back to S.W.R.D. Bandaranaike's Sinhala Only and Eksath Bhikku Peramuna days.

**Also, the unsuccesful UNP Chief Minister candidate, M.S.–Amarasiri's assessment that the UNP defeat was due to 'residual JVP elements being involved in the Peoples Alliance campaign' was significant.**

In the 1970 General Election, for instance, the JVP backed Mrs.Bandaranaike's SLFP as the 'softer' option and within an year of the SLFP win, the first JVP insurrection broke out. The SLFP victory in the Southern Province may well be a sign that the JVP is regrouping with intent to settle old scores.

**It is not that the JVP loves the Peoples Alliance (led by Vijaya Kumranatunga's wife and which includes its old enemies the CP and the LSSP) but that it loves the UNP far less. JVP strategists may well have felt that 17 years in office had consolidated the UNP stranglehold on the levers of patronage and power and that the immediate need was to defeat the UNP and loosen that grip.**

Be that all as it may, the election results also showed that as the unwinnable war against Tamil Eelam has progressed, the internal contradictions in the Sinhala body politic have begun to fester and surface. It was not only a matter of the colossal annual defence budget of Rs.25 billion rupees and the soaring cost of living that the Sinhala rural poor have had to face. As Pooneryn showed, it was the Sinhala rural poor who have had to offer their children as cannon fodder in an unjust war against the Tamil people - and it has become increasingly difficult to hide this truth from the Sinhala people

**What then of the immediate future? Asiaweek commented in September 1991 : 'In the end it is Sinhalese, not Tamils who must answer the question: Is Tamil Eelam worth dying for?" Presumably, the 15,000 Sinhala youth who deserted the Sri Lanka Army last year also asked the same question and gave their answer with their feet.**

**But, those in the ruling Sinhala establishment whose children are not in the line of fire in the Wanni, may look at events differently from the kith and kin of the Sinhala foot soldiers, from rural homes and who are putting their lives at risk at the front.**

Again, the UNP may find it difficult to eat its own jingoism without further loss of political credibility and it may prefer to fool itself into believing that a military adventure in the NorthEast is the answer to its poor showing in the Southern Province. And, ofcourse, political parties facing predictable defeat at the polls usually change pillows to cure the prospective headache and President Wijetunga cannot be sleeping too soundly these days.

Here, the words of the Central Committee of the Liberation Tigers in an open letter to the Sinhala people, more than two years ago, on 22 September 1991, continue to retain their relevance and force today - perhaps, even more so today than two years ago:

**"Our liberation struggle is the armed struggle of an oppressed people against the tyranny of a Sri Lankan regime which has sought to subjugate them...We have no hatred towards the Sinhala people...We are opposed to all forms of domination - internal or external. We are committed to national liberation and to democracy... The prolongation of this war of aggression and the spread of anti LTTE and anti Tamil sentiments are the 'trump cards' used by the Sri Lanka government to maintain and consolidate its oppressive rule over the Sinhala masses. The government seeks to 'blind fold' the Sinhala masses with a pervasive form of racism so that it may continue to rule and exploit them. We view the oppressed Sinhala people as our allies... We appeal to all the progressive forces in the Tamil and Sinhala nations to... pave the way for true democracy, liberation and a free and fruitful association between two free nations."**

## Network

**The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.**

**On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.**

**To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is, therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.**

**The new balances that are being struck in the emerging multi-polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.**

**If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.**

**Network exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.**

**Correspondence Address:**

**The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL**

## D.B. to D.B.W.!

**In early 1990 when the late Ranasinghe Premadasa was elected President, the joke that was retailed in political circles in Colombo was that in selecting his Prime Minister, Premadasa had picked one who would neither see nor hear. Those close to Lalith Athulathmudali and Gamini Dissanayake, the Prime Ministerial contenders who had been overlooked, unkindly pointed to the newly appointed Prime Minister Wijetunga's initials - D(eaf) and B(lind)! But after President Premadasa's death in May 1993, it appears that then Prime Minister and now President D.B. Wijetunga has donned the K(andyan) G(oigama) B(uddhist) robes in the style reminiscent of ex President J.R.Jayawardene. His public utterances have become so similar to Junius Richard (Dicky) Jayawardene, that the current joke doing the rounds in Colombo political circles is that D.B.W. stands for D(icky's) B(rain) W(orking)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Southern Province Elections - Chit Chat

### Devolution run around - Yet again?

**SLFP leader, Chandrika Bandaranaike whose party won the Southern Province, Provincial Council elections on 21 March: "We think the solution to the North and East problem is that government in power has to offer a very serious package of political solutions to the demands of the Tamil people. And that package I stress will not include Eelam because we are against Eelam...So there has to be fairly extensive devolution of power - it should not necessarily be provincial councils. But some other system. For Provincial Councils have a lot of shortcomings."**

### Ronnie is afraid

**Ex Finance Minister, ex SLFP, ex UNP, and now UNP again Ronnie De Mel told the Sinhala owned Sri Lanka Sunday Times on 27 March, he did not want to comment in detail about UNPs defeat as he feared that the Sunday Times would then ensure his expulsion.**

### Gamini knew all along

**Ex Mahaveli Minister, ex UNP, ex DUNF and now UNP again, Gamini Dissanayke told the Sinhala owned Sri Lanka Sunday Times that 'he knew beforehand that the SLFP led Peoples Alliance would gain a majority."**

### Gamini's return no help says Cooray

**Ex President Premadasa stalwart, Senior Minister and UNP General Secretary, Sirisena Cooray said: "The return of Gamini Dissanayke to the UNP did not help" He added "What surprises me is that in a predominantly Sinhala South the UNP lost."**

### Thonda's last word?

**"I meant to vote for a friend. If the friend does not want me, I have to search for an enemy and vote because I do not want to waste the vote" said Mr.Thondaman**

## Sinhala chauvinism's two finger salute to Geneva Convention

# Killali Killings & Rain of Terror

**The Geneva Convention relating to non international armed conflicts provides that medical units and transports shall be respected and shall not be object of attack; that the civilian population as such, as well as individual civilians, shall not be the object of attack; that acts or threats of violence the primary purpose of which is to spread terror among the civilian population are prohibited; that starvation of civilians as a method of combat is prohibited; that it is prohibited to attack, or destroy objects indispensable to the survival of the civilian population, such as food stuffs, crops, and livestock; and that it is prohibited to commit any acts of hostility against places of worship. However Sri Lanka continued to breach these provisions of international humanitarian law with impunity in January and February this year:**

The British Refugee Council Publication, Sri Lanka Monitor reported in its January 1994 issue.

"At least 41 Tamil civilians were killed in Jaffna in January 1994 by Sri Lankan air attacks and indiscriminate shelling from military bases in Palaly and the islands west of the peninsula said Jaffna's senior civil servant Government Agent K.Manickavasagar in a vehement protest to President Wijetunga. Hundreds more were injured.Two youths, Arasaratnam 18 and Sivaranjan 19 were seriously injured when a helicopter gunship strafed their bicycles loaded with firewood at Thenmaratchy on 6 January. From midnight most nights, Jaffna town is shelled from Mandativu... At Killinochi, damage to the hospital after November's air attack exceeds $200,000."

Meanwhile, Hot Springs, the Tamil Eelam Weekly reported that on Saturday, 15 January at about 6.15 a.m., two Sri Lanka Navy Dvro speed boats that came from the direction of Kankesanturai fired shells along the coast of Valvettiturai-Polikandy-Thikkam. The historic Kanthavanam Kanthasamy Temple was damaged. A private medical institution nearby was also damaged. Thirunavukarasu Sinnapillai (female,65) who was sleeping in her house was injured and warded at the Point Pedro Hospital. A fisherman named P.Kurukulasingham received injuries on both hands and was warded at the Valvettiturai Hospital. His raft and nets were damaged.

Again at midnight on 15 January two shells launched by the Sri Lanka Army exploded in the bus stand adjoining the Jaffna Hospital within the Safety zone under ICRC control. Four shops on Hospital Street were damaged. Four persons were seriously injured and were admitted to the Jaffna Hospital. The injured were P.Jeyaraj (28), Rajalingam (32), Ramiah (55) and Thiyagalingam (57)

The Sri Lanka Army encamped at Palaly carried out a shell attack for over two hours on Wednesday, 19 January. The attack was directed towards the residential areas of Kattuvan, Erlalai and Chunnakam in the Jaffna Peninsula. At Mylani in Chunnakam an entire family of six suffered injuries and their house was damaged. The injured are S.Poomagal (female 46), S.Jayanthi (female 20), K.Rasanthan (male 6), T.Rasathie (female 35), E.Rajathevi (female 30) and S.Thayalini (female). At Erlalai, a boy aged 10 named T.Gavaskar was injured.

After the latest attack on Tamil civilians at Killali on Saturday, 27 February the BBC (British Broadcasting Corporation) reported:

**"The new head of Sri Lanka's airforce, Oliver Ranasinghe, said this month that his planes would only attack 'correct' targets. Despite his statement, this (latest) incident is unlikely to embarrass the security forces. Over the past two years, they have yet to acknowledge or accept any responsibility for the numerous attacks on the lagoon, which have claimed the lives of some two hundred (Tamil) civilians."**

Amnesty International in its Report in February 1994 concluded: **"In the north scores of civilians were reportedly killed during the year by the security forces, some apparently victims of extra judicial executions, as they attempted to cross the Kilalli lagoon from the Jaffna peninsula to the mainland... In some cases, navy personnel reportedly boarded boats and deliberately killed civilian passengers who offered no resistance. Civilians were also reportedly targeted in reprisal bombing raids on Jaffna."**

**These systematic violations of humanitarian law by Sri Lanka's armed forces have been coupled with the continued economic blockade of the north and pronouncements by the Sri Lanka President there is no ethnic conflict. He has declared: "When a war is continuing there is no law. What exists is the race to kill."**

### Another Tamil Eelam Police Station

**A new Tamil Eelam Police Station was opened at Mankulam on Sunday, 9 January. Mr.Ravi, the LTTE's Special Commander for Vanni ceremonially opened the new station. Mr.P.Nadesan, Head of the Tamil Eelam Police Unit and Mr.Para, the Head of the Administration of Justice Unit also participated in the ceremony which was presided over by Mr.Pon Thiyagam, the Head of the Heroes's Office.**

## Swiss Federation of Tamil Associations intervenes...

*continued from front page*

face detention, ill treament,repeated arrests, torture and even death at the hands of the Sri Lanka authorities.

You are, no doubt, aware that several non governmental organisations reaffirmed their opposition to returning rejected asylum seekers to Sri Lanka at a special UNHCR meeting in Geneva on 29 September 1993. Again on 6 October 1993, an European Parliamentary delegation which visited Sri Lanka told the Colombo Press that "the current situation in Sri Lanka was not conducive for Western governments to return asylum seekers"

**These views give the lie direct to the claims sometimes made on behalf of the Sri Lanka government that " the widespread human rights abuses of the last few years have sharply declined and that the Sri Lanka Government have taken measures to protect the human rights of all its citizens as a result of pressure from bodies such as Amnesty International and donor governments," and further that "some 300,000 Tamils are resident in the Colombo area and they together with other Tamils who live outside the conflict zone of the north and east, are generally able to live peacefully without harassment from the majority Sinhalese population."**

The fact is that the human rights performance of the Sri Lanka authorities, far from improving, has deteriorated during the past several months. May we bring to your attention that Amnesty International itself, in a Report published in February this year (AI Index: ASA 37/10/94) had this to say about the current situation in the island:

**"Thousands of Tamils are being arrested every month in Colombo,most without any valid reason..The indiscriminate round ups of people solely because of their ethnic origin and reports of their treatment in custody is making members of the Tamil community fearful that they are not safe to walk the streets of Colombo."**

Again...Amnesty International has commented: "Little progress was made in the prosecution of security forces personnel

**"It is legitimisation and negotiation that will provide the pathways to a just peace in the island of Sri Lanka - and it is a just peace that will create the climate for the return of Tamil asylum seekers to their homeland"**

allegedly responsible for committing human rights violations during previous years... A former senior police officer who had left Sri Lanka in 1992 returned in June 1993. He had been wanted for questioning in connection with the death from torture of a (Sinhala) lawyer, Wijedasa Liyanaratchi in 1988 and had been summoned to appear in court in April 1992. After his return, however, he was not required to attend the court; instead he was given a senior position in government service.."..

**The continued failure of the Sri Lanka government to take action against security forces in respect of human right abuses has led to the well founded fear amongst Tamil asylum seekers that the security forces can do whatever they want and there is nobody to question them..**

It has also been sometimes put about recently that "the Sri Lankan government has cooperated with UN bodies dealing with human rights and has committed itself to a comprehensive programme of human rights work at the March 1993 Session of the UN Commission on Human Rights" and that this has created a climate for the return of Tamil asylum seekers. But, again, may we say, respectfully, that the facts are otherwise. In its February 1994 Report (ASA 37/09/94), Amnesty has pointed out:" Many of the specific undertakings made (by Sri Lanka) to the international community for the protection of human rights have yet to be implemented..." ....

**May we respectfully say that instead of sending back Tamil asylum seekers to face detention, torture and death in Sri Lanka, the Swiss authorities should use their not inconsiderable influence and power, to persuade the Sri Lanka government to address the underlying causes of the conflict and recognise the right of the Tamil people to live in their own home land, free from the oppressive rule of a Sinhala dominated Sri Lanka government.It is legitimisation and negotiation that will provide the pathways to a just peace in the island of Sri Lanka - and it is a just peace that will create the climate for the return of Tamil asylum seekers to their homeland. Because unsurprisingly, Tamils, (like any other people) would go home if they could."**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Democracy continues in Sri Lankan Style at Kathankkudy - stuff the ballot boxes!

**A Muslim correspondent, A.H. Macan Markar writing in the Sinhala owned Sri Lanka Sunday Times on 13 March 1994 about the local government elections held on 1 March in the East - elections which were described by Rev.Father Miller as a 'joke'- exposed the grim farce:**

"Around 2 o'clock, while voters were still waiting to cast their ballot, a police jeep drove upto the booth. (in Kathankudy)The constables who got out were in uniform and were armed. They proceeded to fire a round of shots in the air, the result of which led many men and women waiting to vote to disperse. Thereafter the policeman got the presiding, the junior presiding officer and the rest of the people working at the booth to line up in a corner. They were asked to stand with their hands up and faces to the wall. And there was no resistance offered as the police guns were pointed at them.

**In the next 20 minutes the policemen went about marking ballot papers and stuffing them into the ballot boxes.** This same police routine was carried out in two more polling stations nearby.

And in one of them, there was a presiding officer who felt it was his duty to protest. His question to a policeman as to who had sent them resulted in an answer so commonly heard these days: **'Orders from the top.'**

When even after that the Presiding Officer stood his ground and objected to the impersonation of the votes, he was told by one of the police officers that his family would be harmed if he stood in the way. The officer gave in. The policeman marked more votes...

**Ofcourse a problem surfaces at this point, if one was to ask the government to inquire into the deeds of these policemen. And why this is so is because of the latest contribution by the United National party in what it means by good government: the recent pardon by President D.B.–Wijetunga of two men found guilty of attempting to kill a person; and the Attorney General's Department dropping a case against a politician now that he has joined the ruling party... So it is difficult to expect democracy to be saved by those in power."**

# Carnival of clowns or simply a Circus?

The Sinhala owned Sri Lanka Sunday Times pseudonymous correspondent 'Shadow Minister' writing on 13 March had this to say about President Wijetunga's recent pronouncements:

**"President Wijetunga keeps on repeating that there is no ethnic problem. The Prime Minister however states that the Government is ready for talks and asks the LTTE to send its proposals to a Select Committee of Parliament. He does not however explain the need to have talks if the problem is indeed one of pure terrorism as the President claims. It is high time that the Government makes up its mind and speaks in one voice on all issues. Otherwise although Anura Bandaranaike calls the SLFP a carnival of clowns, the UNP will soon earn the name of a circus."**

# A VIEW FROM THE ENEMY'S CAMP

## Realpolitik or the Limits of the 'New World Order'?

**"The LTTE's world view today is one which has been shaped by its experience firstly with India and secondly with the West. Both experiences have taught the Tigers that all direct and indirect intervention in the Sri Lankan ethnic conflict would be designed to ultimately serve or strengthen the unity and territorial integrity of the Sri Lankan state..**

It seems to have become quite clear to them the West was very keen to see the UNP government stabilise itself through the successful prosecution of the war supplemented ofcourse by regular political initiatives... the LTTE's present world view .. was succinctly expressed by Pirabakaran in a speech he made to the Black Tigers.

**He said: '... We stand alone. We stand firm on our own feet. Powerful enemies encircle us. They stand with great determination to destroy us... we must use all means and all powers available to us to wage a war of defence. We cannot afford to ignore this need and necessity...' ... The ramifications of the LTTE's stand are quite clear. The most important of which is going to be the inevitable tendency as the conflicts drags on unresolved, to turn more and more towards the region and to explore the possibility of exploiting its entrenched contradictions on the one hand and cultivating cross border Tamil nationalism on the other.** It may well turn out to be another case where the writ of 'the new world order' may be utterly irrelevant in determining the course of events." ***(Taraki, ex PLOTE ideologue, now turned regular columnist for the Sinhala owned Sri Lanka Sunday Island, 13 March 1994)***

## Tigers intensify operations in Northern Theatre

**"Tigers last week intensified operations against the security forces with a wave of attacks in the northern theatre of operations.** At least ten soldiers and policemen were killed and over two dozen personnel wounded, some of them seriously, in separate attacks late last week. Defence analyst firmly believe the raids on Mannar island and the Kayts island were carried out by sea borne Tiger special forces. **At Tharapuram in the Mannar island, Tigers stormed an isolated police post and shot dead four personnel and wounded another dozen on Wednesday, 9 March...** The next day Tigers blew up an army vehicle close to Kayts island jetty, killing four soldiers and wounding 13 others including four junior officers. Defence analysts believe that a small Tiger unit had infiltrated the Kayts island to set up the claymore mine which ripped apart the army vehicle Thursday morning... Analyst speculate that the Tiger high command may order a series of sea borne raids on Karaitivu, Eluvativu, Analativu, Nainativu, Mandativu, Kayts and Mannar island to harass the security forces. While Tigers fought with the police on Mannar island, separate groups of rebels struck Palaly and Gemenupura killing two more soldiers. A few others were wounded. Military officials said that Tigers commenced serious attacks against the army last month. The killing of six soldiers and the blowing up of a South African built Buffel armoured personnel carrier (APC) in the strategic Weli Oya region late February was the beginning they added. Last week another three soldiers were killed in a skirmish in Pooneryn... **Lack of sea patrols in the disputed Jaffna lagoon has allowed the Tiger high command to induct and deinduct men and material from and to the Jaffna peninsula. The destruction of the Nagaventhurai navy base last November had put an end to sea patrols."** *(Sinhala journalist, Shamindra Fernando writing in the Sinhala owned Sri Lanka Sunday Island, 13 March 1994)*

## Sri Lanka

### Army is growing large in size but not in efficiency

**"The recent attack on the Brigade Headquarters of Weli Oya (Mullaitivi) symbolised two important aspects of the ongoing ... war. The inability and the unwillingness on the part of the security forces to move out of their camps and conduct anti-LTTE operations and Velupillai Pirabakaran's presence in the Weli Oya area.** Weli Oya isthe Sinhala term given to the Mullaitivu area. Last week the Sri Lankan security forces suffered casualties in the districts of Mannar, jaffna, Vavuniya and Weli Oya.. **it is clear that the army is growing large in size but not in efficiency.** Today what is needed is for the officers and their men to break out of the camps in the north and conduct operations or remain in the camps and suffer casulaties. **The history of the northern theatre has been tragic where the northern theatre commander has waited watching his camps from Mankulam to Janakapura and Pooneryn and forward defence lines from Katupota to Idaikadu being overrun by the enemy. If the military leadership is unable to commence the war against the LTTE particularly in an election year, the public are bound to find fault with the political leadership of the country."** *(A Special Correspondent writing in the Sinhala owned Sri Lanka Sunday Island, 13 March 1994)*

# Food for Political Thought

The Economist News paper Ltd. publication 'Foreign Report' said on 27 January 1994:

**"Sri Lanka has called in the American Secret Service, which is charged with the security of the (US) President, to advise on protection for President Dingiri Wijetunga. Britain's Scotland Yard, which the Sri Lankan's called to investigate the assassination of a former security minister last April and was thought by many in Colombo to have botched the job, was not asked."**

Meanwhile, J.N.Dixit, ex Indian High Commissioner in Colombo, ex Indian Foreign Secretary and regarded by some as ex Indian Viceroy of the Indo Sri Lanka Accord, has now turned writer in retirement. His comments inthe Brahmin owned Madras Hindu as retailed by the Sinhala owned Sri Lanka Sunday Times on 13 March 1994, provide some more food for political thought:

## Dixit on Pirabakaran

"The overarching reality is that... the LTTE has consolidated its political position and hold over Tamil politics in the North and East. Whatever one's critical reactions to the LTTE leader, Pirabakaran.. **he has transformed himself from being a leader of a guerrilla separatist force, to a folk hero..** The military competence and effectiveness of the LTTE have been sustained."

## Dixit on Wijetunga

"President Wijetunga seems to be resuming the stance which the Sri Lanka Government had between 1983 and 1986, giving lip service to the need for a political solution while in substantive policy assuming an assertive military and political stance against the Tamils. There is a repetition of the cliche of a 'two track policy' which most governments often articulate in such a situation and try vainly to implement. One track is to take decisive military action against the Tamil opposition, the second track being that as the first option succeeds the pressure will make the Opposition willing for a compromise. **This approach is not likely to succeed."**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு பாடல் அரங்கேறுகிறது

## சிறு கதை

**- கிருஸ்ணகுமாரன் -**

கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேலிருக்கும் நான் அவனைப் பார்த்து -அவன் எங்கே போயிருப்பான்? அவனுக்கு என்ன நடந்தது. . . பெரியகடை வீதிக்கு சாமான்கள் வாங்கச் செல்லும் போதெல்லாம் என் விழிகள் அந்தச் சிறுவனைத் தேடும்.

அவன் யார்? அவனுக்கும் எனக்கும் என்ன உறவு அவனை ஏன் நான் தேட வேண்டும். அவன் எங்கு போயிருந்தால் எனக்கென்ன? இவை என்னை நானே எனக்குள் கேட்டுக் கொள்ளும் கேள்விகள். ஆனால், அவனது நினைவுகள் என் மனதின் ஓர் மூலையில் உறுத்திக் கொண்டிருந்தது.

வீட்டில் என் மனைவியிடம்கூட இப்போது அடிக்கடி அவனைப் பற்றிக் கதைக்கிறேன். அப்பொழுதெல்லாம் அவள் என்னை விசித்திரமாகப் பார்ப்பாள்.

யாழ்ப்பாண நவீன சந்தைக்கருகாமையில் இருக்கும் அந்த 'கூல் பார்' முன்பாகத்தான் அவன் வழக்கமாக நிற்பான். சுமார் பதின்மூன்று வயதிருக்கும். அரைக் காற்சட்டை முதுகுப் புறத்தில் சற்றுக் கிழிந்த அழுக்கான 'ரீசேட்' கருமை நிறத் தோற்றம். சுருண்டு குலைந்திருக்கும் தலைமயிர். அவன் கண்கள் மட்டும் சற்று வித்தியாசமானது. சற்றுப் பெரிய, ஒளிபொருந்திய கவர்ச்சியான கண்கள். அவன் கண்களைப் பார்க்கையில் இதை எங்கோ அடிக்கடி பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படும். வீட்டில் சுவாமி அறையில் உள்ள குழலூதிக் கொண்டிருக்கும் கண்ணனின் கண்களைப் போன்றது அந்தக் கண்கள்.

**கடலதை நாங்கள் வெல்லுவோம்**
**கடற்புலி நாங்கள் ஆளுவோம். . .**

இந்தப் பாடலைத்தான் அவன் அடிக்கடி பாடுவான். கணீரென்று ஒலிக்கும் உரல் இரசனை கலந்த முகபாவத்தோடு, பார்வை எங்கோ குத்திட்டு நிற்க, பாடலோடு ஒன்றிப் போய் அவன் பாடுவான். பாடலில் வரும் இடையிசையினையும் டிங் டிங். . . டிங்டிங் என வாயாலேயே செய்வான்.

இந்தக் குரல்வளத்திற்கு அவனது எதிர்காலம் எப்படியோ அமைய வேண்டியது. இவனோ இன்று பாடிப் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கின்றான். எண்ணிப் பார்க்கையின் என் மனதில் ஒரு சோகம் படரும்.

கூல்பாருக்கு வந்துபோகிறவர்கள் அவன் பாடலைக் கேட்டுவிட்டு கையில் கிடைக்கும் சில்லறையைக் கொடுப்பார்கள். சில 'இளவட்டங்கள்' அவனைச் சீண்டிப் பார்க்க முற்படுவதும் உண்டு. அந்நேரங்களில் அவன் வேறு எங்கும் போய் விடுவான். கடைசியாக அவனை நான் கண்டபோது பாவாடைபோல தொளதொளவென 'ஜீன்ஸ்' அணிந்து கூல்பாருக்கு முன்னால் நின்ற இளைஞர் சிலர் அவனைச் சீண்டிக் கொண்டிருந்தனர்.

"டேய் ஜேசுதாஸ் உந்தப் பாட்டை விட்டுப்போட்டு நெஞ்சுக்குள்ளே இன்னாரென்று சொன்னால் புரியுமா" பாட்டைப் பாடு என்று கூறிக்கொண்டிருக்க, அவன் அந்தப் பாடல் தெரியாது விழித்துக் கொண்டிருந்தான்.

**"டேய் ஐஸ்கிறீம் வாங்கித் தாரன் பாடு"**
**"பாடாட்டா அடிப்பம்"**

"டேய் இஞ்சை வாடா பாடமாட்டியே" இவ்வாறு அந்த இளைஞர்கள் அவனை மிரட்ட அவன் கண்கள் கலங்கியிருந்தன. எனக்கு ஆத்திரம் வந்ததால் அந்த 'பாவாடை ஜீன்ஸ்' இளைஞர்களை திட்டினேன். வாக்குவாதங்கள் ஏற்பட்டு பின் தணிந்தது.

அந்த நிகழ்வுக்குப் பிறகு அவனை நான் காணவே இல்லை. அவனுடன் சில சமயங்களில் கதைத்திருக்கிறேன். அவனுடைய பெயரை நான் கேட்க மறந்து போனேன். அவனுக்கு இளைஞர்கள் சிலர் வைத்த பெயர்தான் ஜேசுதாஸ் என்பது.

ஒருநாள் அவனிடம் பேச்சுக் கொடுத்த போது, அவன் திருகோணமலையிலிருந்து அகதியாக வந்தவனெனவும், தாய் இறந்துபோன பின்பு தந்தை வேறு திருமணம் செய்து கொண்டதால், இவன் அனாதையாய்ப் போனான் என்பதையும் அறிந்து கொண்டேன்.

"தம்பி என்ர வீட்டை வாறியே சாப்பாடு சம்பளம் எல்லாந்தாறன். இங்க பாட்டுப்பாடி சேர்க்கிற காசைவிட கூடுதலாத் தாறன்" இப்படி ஒருநாள் நான் கேட்டபோது அவன் மெல்லியதாகச் சிரித்தானே தவிர பதில் ஒன்றும் சொல்லவில்லை.

புதுவருடத்திற்கு நான்கு நாள் முன்பு ஒரு காற்சட்டையும் சேட்டும் வாங்கினேன் அவனுக்குக் கொடுப்பதற்கு, மனைவி கொஞ்சம் முகம் சுழித்தாள்.

"என்னப்பா இது? ஊரிலை திரியிற பிள்ளையளுக்கெல்லாம் உடுப்பு வாங்கிக் கொடுக்கப் போறியளே" என்றாள். அவனுக்காக நான் வாங்கிய அந்த உடைகளைக் கொடுக்க முடியாமலே போய்விட்டது. அந்தக் கடைக்காரர் சிலரிடம் விசாரித்துப் பார்த்தேன். அவர்களும் அவனைக் காணவில்லை என்றே கூறினார்கள்.

அன்றும் பெரிய கடைக்குச் சென்ற போது சாமான்கள் வாங்கியபடியே வீதியில் அவன் நிற்கிறானா என அடிக்கடி பார்த்தேன். வரும் வழியில் ஆஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள கழிவு வாய்க்காலில் சடலம் ஒன்று கிடக்க, மக்கள் அதனைக் கூட்டமாக வேடிக்கை பார்த்த வண்ணமிருந்தனர். என் மனதுக்குள் என்னமோ செய்தது.

வீட்டுக்கு வந்தபோது, தேங்காய் எண்ணெய்ப் போத்தல் வெறுமையாக இருப்பதையும், சீனி வாங்கிக் கொண்டு வராததையும் உணர்ந்து மனைவி காரணம் கேட்டாள்.

"என்ன செய்யிறது. சீனி, தேங்காய் எண்ணெய் ஒரு கடையிலேயும் இல்லை. கூடிய விலைக்கு ஒழிச் சுவைச்சு விற்கிறாங்களாம் அதுவும் எனக்குக் கிடைக்கேல்லை. கப்பல் வராததாலதான் இப்படியாம். எல்லாத்தையும் பதுக்கிட்டாங்கள். கப்பல் வராவிட்டால் எல்லாச் சாமான்களும் விலைகூடும் போலகிடக்கு. . ." நான் சொல்லிக் கொண்டுபோக இடிந்த முகத்துடன் அவள் குசினிக்குத் திரும்பினாள்.

"இஞ்ச ஆஸ்பத்திரிக்கு முன்னால வாய்க்காலுக்க சடலம் ஒன்று கிடக்கெண்டு சனம் பார்த்துக் கொண்டு நிண்டது. சிலநேரம் அந்தப் பெடியனோ தெரியேலை".

நான் சொன்னது மனைவிக்கு கேட்டதோ தெரியவில்லை. ஏனெனில் பதில் ஒன்றும் வரவில்லை. இரவு முழுவதும் அந்தச் சிறுவனைப் பற்றியும் அந்த வாய்க்காலில் கிடந்த சடலம் பற்றியும் நினைவுகள் மாறி மாறிச் சுழன்ற வண்ணமிருந்தது.

காலையில் எழுந்ததும் அன்றைய செய்திப் பத்திரிகையைப் பார்த்தேன்.

"வடக்கில் தாக்குதலுக்குத் தயார்" புதிய தளபதி அறிவிப்பு, என்றிருந்தது. அதனை ஒரு புதினமாக வாசிக்காமல் கீழேயுள்ள செய்திகளைக் கண்ணோட்டமிட்டேன். இடது மூலையில் பிரசுரமாகியிருந்த புகைப்படமொன்று என் கவனத்தை ஈர்த்தது. பல சிறுவர் அடங்கிய படம் அது. நடுவே அந்தச் சிறுவன். ஆம்! அந்த 'யேசுதாஸ்'.

'தமிழன்னையின் புதல்வர்கள் என தலைப்பிடப்பட்ட அந்தப் புகைப்படத்திற்குக் கீழே 'நேற்று தலைவர் அவர்கள் தமிழீழ சிறுவர் இல்ல நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. சிறுவன் ஒருவன் பாடுவதையும் தலைவர் கைதட்டி இரசிப்பதையும் படத்தில் காணலாம், எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

துள்ளியெழுந்து பேப்பருடன் ஓடினேன் மனைவிக்குக் காட்ட. "என்ன ஓடிவாறியள் என்னவாம் பேப்பறிலை? கப்பல் வந்திட்டுதாமே" என்றாள் ஆவலுடன்.

"அதில்லையப்பா இஞ்சைபார்



படத்தை. அந்தப் பெடியன் நிற்கிறான்" என்று காட்ட, அவள் கப்பல் வந்த செய்தி வராத சோகத்தில் "உங்களுக்கென்ன விசரே" என்று என்னைக் கடிந்து கொண்டாள். என் மனதில் உறுத்தலாய் இருந்த இடத்தில் மென்மையான மகிழ்ச்சியொன்று குடியேறிக் கொண்டது. ■

---

## இன்னமும் இங்கே வாழ்பவன் தமிழன்!

எப்படி முடிந்தது இவர்களால்!
சிரித்துக் கதைத்து, திருவிழாவில் வடம் பிடித்து
கச்சேரி செய்து, கல்யாணவீடுகள் நடாத்தி...
எப்படி முடியும்?

எரிபொருளுக்கு இங்கே
தடையென்றல்லவா சொன்னார்கள்!!
உரம் கொடுப்பதற்குக் கூட
அரசு விரும்புவதில்லையாமே!
பின்னர்
எப்படி இங்கே மனிதர்கள் வாழ்ந்தார்கள்?

வியப்பாக இருக்கிறதா அந்நியனே!
நாங்கள் தமிழர்
பசித்தபோதும் பல்லுக்காட்டாத பரம்பரை
மானமுள்ளவரை மனந்தளராத பழங்குடி

எங்கள் வயல்களிலொன்றும்
கள்ளி முளைக்கவில்லை
ஆறுகள் ஓடாவிட்டாலும்
ஆழக்கிணற்றில் நீர் எடுக்க எங்களுக்குத் தெரியும்
குண்டுச் சத்தங்களுக்கிடையில் நடப்பது
குழந்தைகளின் விளையாட்டுப் போட்டி
ஊரடங்குகளில் கூட எங்கள்
ஊர் அடங்குவதில்லை.

எங்கள் மண்ணில் குடியேறுபவர்களுக்கு
பூநகரியும் இதயபூமியும்
அண்ணன் சொன்ன அறிவுரைமொழிகள்!
கரும்புலிகள் உள்ளமட்டும்
காற்றும் கேட்டுவிட்டே வீசவேண்டும்
புரிந்து கொள்
இன்னமும் இங்கே வாழ்பவர் தமிழர்.

– சந்திரலிங்கம் கெங்காதரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலட்சிய வாழ்வில் ஒரு துளி

## உரிமைப்போரில் உணர்வுப்புலன் இழந்தும் உள்ளம் தளராத புலிவீரர்கள்

தன்னருகில் வந்து தானியங்கள் கொத்தியுண்ணும் பல்வகைப் புறாக்களின் அழகை ரசித்த வண்ணம் இருக்கிறான். அவை "தெத்தித் தெத்தி நடப்பதும், காலைச் சூரிய ஒளி அவற்றின் கழுத்தின் மேற்பகுதியில் பட்டுத் தெறிப்பதால் மேலும் மிளிர்வைக் கொடுப்பதும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்க வேண்டும். ஆயினும் அவனின் ஒளி நிறைந்த விழிகளில் ஏக்கம் ஒன்று தெரிகிறது. தான் அன்புடன் வளர்க்கும் அப்பறவைகளுக்கு தானியம் அள்ளி வீச முயல்கிறான். ஆனால் அவனது வலது கரமோ மனவேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது நடுங்குகிறது. தனது கையை நோக்கியவன் பெருமூச்சொன்று விடுகிறான். அதனால் அவன் உணர்வுகளின் ஆழத்தை அளக்க முடிகிறது. பெருவிரலுடன் சேர்த்து முதல் மூன்று விரல்களும் சுமாராகத்தான் அசைகின்றன; மற்ற இரண்டும் அதற்கு மறுக்கின்றன. "எண்டாலும் இரண்டு வருசத்திற்கு முந்தினதிலும் பார்க்க இப்ப நல்ல முன்னேற்றம்" -தனக்குள் சமாதானம் கூறிக்கொள்கிறான்: இவன் பின்னால் திரும்பித் தலையசைக்க, அருகில் நிற்கும் சக போராளியின் உதவியால் இவன் இருக்கும் சக்கர நாற்காலி நகரத் தொடங்கிற்று. அப்புறாக்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பறக்கின்றன. அவன் மனமும் கடந்த காலத்தை நோக்கிச் சிறகடிக்கின்றது.

அப்பொழுது அவனுக்குப் பதினாறாவது வயது நடக்கிறது. க. பொ. த. (சா/த) பரீட்சை எடுப்பதற்கான காலம். எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக உயர்தரத்தைப் பற்றிச் சிந்திக்கும் காலம். ஆனால், காலம் அவனைக் களத்திற்கு அழைக்கிறது. வன்னிக் காட்டுக்குள் அவன் வரிப்புலி ஆகின்றான். பல களங்களில் தொடராய்க் கால் பதித்ததால் வீரத்தழும்புகளால் உடலை நிறைக்கிறான். நேரடிக் கள அனுபவங்கள் சண்டைக்கான திட்டங்கள் தீட்டும் திறனால் தன் போர் அறிவைப் பெருக்குகிறான். இப்பொழுது இவனின் குடலில் கணிசமான பகுதி இவனிடம் இல்லை; கீழ்க் காலில் ஏற்பட்ட பலமான காயம் இன்னும் ஆறவில்லை. ஆயினும் அவன் பணி தொடர்கிறது.

சுமாராக மூன்று மாதம் தான் நேரடியாக வேவு பார்த்து, திட்டம் தயாரித்து, ஒரு குழுவுக்குக் தலைமை தாங்கி மற்றக்குழுக்களுடன் சேர்ந்து இலக்கு நோக்கி நகர்த்துகிறான். அவன் நினைக்கும் வேகத்திற்கு ஏற்றாற் போல் காலடிகளை எடுத்து வைக்க அவனால் முடியவில்லை. முட்புதர்களையும், மரவேர்களையும், செடிகொடிகளையும் விலத்தி விரைவதற்கு அவன் கால் ஒன்று உதவி செய்ய மறுக்கிறது. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போது உயிர் போகும் வலியின் பிரதிபலிப்பு, நெற்றியில் உருவாகும் நெருக்கக் கோடுகளில் தெரிகிறது. இவனின் துப்பாக்கியைத் தாங்கியிருக்கும் வலக் கரத்தில் ரவை ஒன்று எப்பவோ ஊடுருவிச் சென்றதற்கான அடையாளம், எதையோ விபரிக்க முற்படுகிறது.

வரும் தமது இலக்குகளை வெற்றிகொள்வதில் குறியாக இருக்கிறார்கள். அப்பொழுது ஆர். - பி. ஜி. கணையொன்று தீ கக்கியவண்ணம் விரைந்து சென்று காவலரண் ஒன்றைத் தகர்க்கிறது. அக்கணத்துடன் துப்பாக்கிகளினதும் ஏனைய கனரக ஆயுதங்களினதும் கோரப்பசிக்குத் தீனி கொடுப்பதில் போராளிகள் தீவிரமாகிறார்கள். எதிரியிடமிருந்து கிடையாகப் பொழியும் ரவைமழையிடையே வெற்றித் தேவதையை நோக்கிப் புலிவீரர்கள் விரைந்தனர்.

அப்பொழுது எங்கிருந்தோ வந்த ரவை ஒன்று, இவன் கழுத்தை ஊடுருவிச் செல்கின்றது. கட்டளைகளைப் பிறப்பித்த வண்ணம் வேகமாய் முன்னேறிக் கொண்டிருந்தவன் பின்னோக்கித் தள்ளப்படுகிறான்.

சில நாட்களின் பின் கண்விழித்தவன் தன்னிலை உணர்ந்து கொள்ளமுடியாமல் தவிக்கிறான்.

நான் எழும்பித் திரிய எவ்வளவு நாள் எடுக்கும்? -இக்கேள்வியை அவன் வெளிப்படையாகக் கேட்பதில்லை; தன்னைத் தானே கேட்பது வழக்கம். இப்பொழுது இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. இன்னும்.... ஓ.... எவ்வளவு பெரிய தாக்கம்.... அதனால் ஏற்படும் தவிப்பு சொற்களால் சிறையிட முடியாதவை. சகல விடயங்களுக்கும் இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டிய நிலை. ஆயினும் தாயாக மாறும் போராளிகளால் அவன் வாழ விரும்புகிறான்.

தமிழீழம்... தமிழீழம் .... இதற்காய் இவன் எவ்வளவு வேதனைகளையும் சோதனைகளையும் எத்தனை காலம் வேண்டுமானாலும் தாங்கத் தயார். இந்நாட்டு மக்கள் சுதந்திர மண்ணில் மகிழ்ச்சியாக வாழ்வதைக் காண, தன் கண்ணிரண்டும் இருந்தால் போதும் என நினைப்பவன். "தட்டித் தவறி நான் செத்திட்டா என்ர கண்ணை யாராவது ஒரு தமிழ் மகனிற்கு தானம் செய்யுங்கோ; அதனால் தமிழீழத்தைப் பார்ப்பேன்." - இவனது வாயில் இருந்து வரும் இவ்வார்த்தைகள், உள்ளக் கிடக்கையை வெளிக்காட்டும் வீடியோப் படங்களாகவே தெரிகின்றன.

> குழாயிலிருந்து நீர் பாயும் ஓசையையும் தாண்டி, அவர்களின் சிரிப்பொலியும் கும்மாளமடிக்கும் சத்தம் வருகிறது. எப்படி இவர்களால் இந்த நிலையிலும்........!

நடுநிசி, எல்லோரும் நிலையெடுத்து இருக்கிறார்கள். நீண்டநாட்களாக பல சிரமங்களின் மத்தியில் தீட்டிய தாக்குதல் திட்டத்தின் அறுவடை ஆரம்பமாகப் போகிறது. கணங்கள் எல்லாம் யுகங்களாகக் கழிந்தவண்ணம் உள்ளது. சிறு அரவம் கூட எதிரியை உசாராக்கிவிடும். அந்த மினிமுகாம் தாக்குதலில் இவனுக்கு, சில காவலரண்களை கைப்பற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கால்கள் தரையைத் தழுவும்போது நெரிபடும் சருகுகளின் சத்தம்கூட அவர்களின் காதுகளுக்கு எட்டாவண்ணம்தான், அம்முகாமுக்கு அண்மையில் நகர்ந்து வந்தார்கள். ஆயினும் ஏனோ களைப்பை உணர்கிறார்கள். மனதை ஒருமுகப்படுத்தல் என்பது கடினமான செயல்தான் போலும்! ஆபத்தினூடே ஒர்மத்துடன் முன்னேறுவதற்கும், அமைதியாக நிதானமாக முன்னேறுவதற்கும் இடையே நீண்ட இடைவெளி காணப்படுவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஒவ்வொரு

தான் இப்பூமியில் இல்லாத மாதிரி உணர்கிறான். தனது உடலில் தலை தவிர்ந்த ஏனைய பகுதிகள் இருப்பதையே அவனால் உணர முடியவில்லை. அவனுக்கு தன்னிலை மெல்ல மெல்ல .... தெரியவருகிறது. கண்வழியோடும் கண்ணீர் கன்னம் வழியே பாய்ந்து படுக்கையை நனைக்கிறது.

ஆம்! உறுமித்திரிந்த புலிவீரன் - சுதந்திர மண்ணில் பறக்க விரும்பியவன் -பங்குபற்றிய ஒட்டப் பந்தயங்களில் எல்லாம் முதலாம் ஆளாக வந்தவன் -முதன் முறையாகத் தன் இயலாமையை உணர்கிறான். எத்தனையோ எதிரிகளுக்கு எமலோகத்திற்கு வழிகாட்டுவதற்காகத் துப்பாக்கி விசைக்கு விசை வழங்கிய அவன் விரலும் தற்பொழுது உணர்வில்லாத பகுதியாகி விட்டது. உடலின் பெரும்பகுதி உணர்விழந்தாலும் செயலிழந்தாலும், மனம் உரம் இழக்காமல் இருப்பதற்காக அதற்குப் படிப்படியாக பயிற்சி கொடுக்க ஆரம்பிக்கிறான்.

தலை வேர்க்கிறது. உணர்வு தெரியும் பகுதியெல்லாம் உயிர் போகும் வேதனையால் துடிக்கிறது. அவனுக்குத் தெரிகிறது சிறுநீர் வெளியேறப் போகிறது என்று. அவனது சிறுநீர் வழியூடாக சிறுநீர்ப்பை வரை பொருத்தப்பட்டிருக்கும் இரப்பர் குழாயூடே சிறுநீரும் இரத்தமும் கலந்து வெளிவருகிறது. அதனை அவதானித்த அவன் கண்களில் எதுவித சலனமும் இல்லை. ஏனெனில் சில காலமாக இது பழகிய ஒன்றுதான். ஆயினும் ஒருநாளில் எத்தனை தடவை இவ்வேதனையை அவன் தாங்குவது? ஆயினும் இது தவிர்க்க முடியாததாகவே காணப்படுகிறது. இந்நாட்டில் நரம்பியல் நிபுணர்களின் பற்றாக்குறையும், இத்துறைசார் நிபுணத்துவப் பற்றாக்குறையும், இயற்கையாகவே நரம்புக்கலங்களின் பிரிந்து பெருகும் ஆற்றலற்ற நிலையும் அவனின் பாதிக்கப்பட்ட நரம்பு மண்டலம் சீராகும் காலத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் செய்கின்றன.

குழாயில் இருந்து நீர் பாயும் ஓசையையும் தாண்டி அவர்களின் சிரிப்பொலியும் கும்மாளம் அடிக்கும் சத்தமும் வருகிறது. இப்பொழுது அவன் "ஸ்ரெச்சரில்" இருந்தபடியே குளித்துக் கொண்டிருக்கிறான் அருகில் நிற்கும் சக போராளிகளுடன் அவன் 'பம்பலாய்' சிரித்துக் கதைத்தவண்ணம் குளிக்கிறான். "டேய் எனக்கு இப்ப கை ஏலும்" எனக் கூறிய வண்ணம் தனது இயலாத கையால் தண்ணீர் அள்ளி மற்றவனின் தலையில் வார்க்கிறான். இப்படியே இவர்கள் மாறி மாறித் தண்ணீர் ஊற்றுவதும் பலத்துச் சிரிப்பதும், பார்ப்பதற்கு இதமாக இருக்கிறது. ஆயினும் எப்படி இவனால் இந்நிலையிலும் மனம் விட்டுச் சிரிக்க முடிகிறது என்ற கேள்வி மனதில் எழத்தான் செய்கிறது? இதற்கான பதில் உலகமே அறிந்த ஒன்றுதான் -உறுதியும் பரிவும் மிக்க எங்கள் தலைவரினால் அவர்கள் வளர்க்கப்படுபவர்கள்!

குளித்து உடைகள் மாற்றிய பின்பு, அவன் முச்சக்கர நாற்காலியில் இருந்த வண்ணம் சக போராளியின் உதவியால் புறாக் கூட்டடிக்கு அழைத்துச் செல்லப் படுகிறான். தனது வலது கரத்தால் மிகவும் கஸ்ரப்பட்டு அப்புறாக் கூட்டின் தாளை நீக்கி கதவுகளைத் திறக்கிறான். உள்ளிருந்த புறாக்கள் சட சடவென தங்கள் இறக்கைகளை அடித்த வண்ணம் வெளிவந்து முச்சக்கர நாற்காலிக்கு அருகாமையில் தரையில் அமர்கின்றன. தனது மடியில் மற்றப் போராளி வைத்த பாத்திரத்தில் இருந்து தானியங்களை மெல்ல மெல்ல அள்ளி, அப்புறாக்களுக்காகச் சிந்துகின்றான்; அவை அதனைக் கொத்தி உண்ணும் அழகையும் 'தெத்திப் பாயும்' ரம்மியத்தையும் ரசித்த வண்ணம் கண்களைக் கசக்கியபடி சிரிக்கிறான். ■

■ தூயவன்

---

## தென்றலாக வீசிய..

லைத்தீவு முகாமின் கரையோரக் காவல் வியூகத்தை வேவு பார்க்க ஆட்களை ஒழுங்கு செய்துகொண்டிருந்தான் அந்தத் தளபதி.

இருள் விலகாத ஒரு அதிகாலையில் அந்தப் பதிலடித் தாக்குதல் நடந்தது. முன்னணி வீரர்களுள் ஒருவனாக நரேஸ் களத்திலிறங்கினான். பகைவனுக்கு அடி பிடரியில் விழுந்த, அதிசயமான தாக்குதல் அது. எப்படி அது சாத்தியமானது என்பதை, இன்றுவரை எதிரியால் ஊகிக்க முடியவில்லை. 25 சிங்களப்படையாட்களைக் கொன்று, 'பிப்ரிகலிப'ரோடு ஆயுதங்களையும் எடுத்து வந்த அந்தத் தாக்குதலில் இழப்பேதுமில்லைப் புலிகளுக்கு. 'புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சிங்களப் படை அகலக்கால் வைத்தால், அது மிக ஆபத்தாகவே முடியும் என்பதையே இத்தாக்குதல் உணர்த்துகிறது ' என்று சொன்னது பி. பி. சி.

முல்லைத்தீவு பழைய இராணுவ முகாமுக்கு அருகிலிருந்த மினி முகாமைத் தாக்கி, 9 படையினரின் உடல்களையும், ஆயுதங்களையும் எடுத்து வந்த சண்டை, கடற்கரையோர ரோந்து அணியொன்றைத் தாக்கி 6 படையினரைக் கொன்று ஆயுதங்களைக் கைப்பற்றிய சண்டை, முல்லைத் தீவிலிருந்து அலம்பில் நோக்கி நகர்ந்த படையினரை எதிர்கொண்டு, ஒய்வு உறக்கமின்றி 11 நாட்கள் மோதிய தொடர்ச் சண்டை என, அந்த வீரனின் சாதனை வரிசை நீளமானது.

இப்போது, கிளிநொச்சிக் கோட்ட சிறப்புத் தளபதியாகப் பணி. எவருக்குத் தெரியும் இதுதான் நாங்கள் அவனோடு வாழப்போகும் கடைசி வருடம் என்று? அந்த மக்களின் உயர்வுக்காக, அந்தப் பிரதேசத்தின் மேம்பாட்டிற்காக அவனது நாட்கள் உரமாகின. ஏற்கனவே பட்ட வெடிகளினால் இயற்கை அமைப்பு மாறிப்போன இடது காலுடன், ஆனையிறவுப் படைத் தளத்தின் தென்பகுதி அரண்களைச் சுற்றிச் சுற்றி நடந்து தாக்குதலுக்கு வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்த பொழுதுகளிலும் - சமூக மேம்பாட்டுப் பணிகளில் நேரமொதுக்கி ஈடுபட்டான். துவக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு தடங்கல்கள் வந்தபோது, நீக்கி நிவர்த்தி செய்தான். உதவி கேட்டு வந்தவர்கள் கைநீட்டி நின்றபோது, கைகொடுத்தான். "செய்து தருவேன்" எனக் கொடுத்த வாக்குறுதிகளை, தலைமேல் வைத்துச் செய்து முடித்தான். ஒவ்வொரு கிராமத்துக்குள்ளும், அந்தத் தளபதி, மக்களின் குறை துடைக்க நடந்தான். பாடசாலைக்குச் செல்லாத பள்ளிச் சிறுவர்களுக்கு, படிப்பின் முக்கியத்துவத்தைப் பரிவோடு எடுத்துரைத்தான். குப்பையாகத் திரிந்த பையன்களைக் கூப்பிட்டு அணைத்து, துப்பரவைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தான். நகம் வெட்டி, தலைக்கு எண்ணெய் தேய்த்து, சுத்தமாய் இருக்கச் சொல்லி அனுப்பி வைத்தான்.

காஞ்சிபுரம் கிராமத்தில், இராணுவத்தின் மிதிவெடியில் காலை இழந்த ஒரு ஏழைச் சிறுவன், பள்ளிக்கூடம் செல்லாமல் முடங்கிக் கிடக்கும் நிலை அறிந்தபோது, நரேஸ் துடித்துப் போனான். செயற்கைக்கால் செய்து அனுப்பி வைத்துவிட்டு, பொருத்திக் கொண்டு பையன் படிக்கப் போவதை, மகிழ்வோடு பார்த்துச் சிரித்து நின்றது அந்த உள்ளம்.

நாயகன்!

கறுத்த மேனி. கவர்ந்திழுக்கும் வசீகரம். வட்ட முகத்தில் பளிச்சிடும் சிரிப்பு. உருளும் விழிகளால் கதைபேசி, எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட அந்த நாயகனை, இனி நாங்கள் பார்க்கவே முடியாதா?

தமிழல்லாத பெயர்களை மாற்றச் சொன்னபோது, வன்னி மாநிலத்தின் அந்த நாயகனுக்கு, ஆசையோடு நாங்கள் இட்ட பெயர் அதுதான். எவ்வளவு அற்புதமாக அந்தப் பெயர் அவனுக்குப் பொருந்தியிருந்தது.

தாய்பிள்ளை ஆகி இருந்து எங்களை நல்வழிப்படுத்தினானே, தவறிழைக்கும் போதெல்லாம் சின்னக் குழந்தைக்குப் போல பாசத்தைக் கொட்டியல்லவா சொல்லித் திருத்தினான்..... எங்கே போய்விட்டான்?

காலையிலிருந்து இருளும்வரை, உணவு உடையிலிருந்து உறங்கும்வரை எங்கள் ஒவ்வொரு அசைவுகளிலும் கண்ணுக்கு இமையாக இருந்தானே... ஏன் இப்படித் திடீரென இல்லாமல் போனான்?

தலைவனின் சிந்தனைகளுக்கெல்லாம் செயல் வடிவம் கொடுத்து வென்று, தளபதி தீபனின் தோளுக்குத் தோள் கொடுத்து நின்று, வன்னி மண்ணுக்குப் பெயரையும் புகழையும், பெருமையையும் சேர்த்துத் தந்தானே.... இனி வரவேமாட்டானா?

அந்த நாள் - 28-08-1993

நம்ப முடியாமலல்லவா இருந்தது!.....

இடியென மோதி, எங்கள் நெஞ்சங்களைப் பிளந்து சென்ற அந்தச் செய்திபொய்யாகிப் போகாதா என்று நாங்கள் ஏங்கினோமே.......

கிளாலிக்கு எதிரி படையெடுக்கப் போகிறானாம் என்றபோது, விழி சிவந்தல்லவா நின்றான்! "எங்கள் மக்கள் பாதை வழியே எதிரி வந்து தடுத்து நிற்பதா?" என்று பொங்கினானே. போருக்குப் புறப்படும்போதுகூட, "வென்று வருவேன்" என்று தானே சொல்லிவிட்டுச் சென்றான்!... வெற்றியைத் தந்துவிட்டு வராமலேயே போய்விட்டானே....

யாழ் குடாநாட்டின் உயிரிற்கு உயிர் கொடுத்த, யாழ்ப்பாண

தொடர்ச்சி 15ம் பக்கம் ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டி.பி.தூர எறிந்த தூண்டிலை சுதந்திரக்கட்சி தூக்கிவிட்டது

## புதிய உத்திகளுடன் தமிழ் வாக்குகளுக்கு சந்திரிகா வைக்கும் கண்ணி




இந்த வருடத்தின் பிற்பகுதியில் நடைபெற இருக்கும் சிறீலங்காவுக்கான ஜனாதிபதித் தேர்தலில், தனது வெற்றிக்குத் தமிழர்களின் வாக்குகள் தேவையில்லை என்ற நிலைப்பாட்டுடன், தற்போதைய ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்கா உள்ளார்.

சிங்களவர் - தமிழர் என்ற இரண்டு தோணிகளில் கால்வைத்து ஒன்றுமில்லாமல் சறுக்கி விழுவதைவிட, 'பலமான தோணியுள்ளே (சிங்களவர்) ஆழக் கால் பதித்தால் போதும்' என்ற சித்தாந்தத்துடனேயே 'டி. பி.' உள்ளார்.

இந்தப் பேரினவாதக் கண்ணோட்டம் தேசிய அளவில் டி.-பி.க்கு எவ்வளவு தூரம் வெற்றியைத் தேடிக்கொடுக்கும் என்பதை தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை மட்டும் வைத்து தீர்ப்புக் கூறிவிட முடியாது.

தற்போது சிறீலங்காவில் நடைமுறையில் இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் முறையின்படி, தமிழ் -முஸ்லீம் வாக்குகள் அதிலும் குறிப்பாக தமிழ் வாக்குகள்தான் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கும் நிர்ணய சக்தியாக இருக்கின்றன என்பது ஒரு உண்மை. இப்பேருண்மையை முன்னாள் ஜனாதிபதி திரு. பிரேமதாசா நன்குணர்ந்ததால்தான், இனப்பிரச்சினையில் அவர் இரட்டை வேடம் பூண்டு, சிங்கள வாக்குகளையும் கவர்ந்து தமிழ் வாக்குகளையும் தன்பக்கம் வரச்செய்வதில், கணிசமான வெற்றியும் கண்டார்.

எனவே, நேரடியாக இனவாதம் பேசி, தான் சிங்கள மக்களின் பிரதிநிதி மட்டும்தான் என்பதை வெளிப்படையாகச் சொல்லிவருகிறார்.

இதேவேளை டி. பி. விஜேதுங்காவை ஒத்த பேரினவாத நிலைப்பாட்டுடன் இதுவரை காலமும் செயற்பட்டுவந்த சுதந்திரக் கட்சி இப்போது, தனது அரசியல் கூடத்தில் சில காட்சி மாற்றங்களைச் செய்துள்ளது; அதுதான் தமிழ் வாக்குகளைக் கவரமுயலும் தந்திரோபாயம் ஆகும்.

இந்தத் தந்திரோபாய வாக்கு வேட்டையை, சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் என்று, கருதப்படும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கிறார்.

போரை நிறுத்திப் பிரச்சினையைத் தீர்க்க தன்னிடம் மட்டுமே தீர்வுத் திட்டம் உள்ளது என்று கூறும் அவர், கொழும்பு மற்றும் மலையகத் தமிழர்களைக் கவரும் சில முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

கொழும்பில் தமிழர்களுக்கெதிரான நடவடிக்கைகளைச் சாடைமாடையாகக் கண்டிக்கும் அவர், தான் முதலமைச்சராக உள்ள மேல் மாகாணத்தில் இருக்கும் சில தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சென்று, மாணவர்களுடனும் ஆசியர்களுடனும் அந்நியோன்யமாகக் கதைத்து -சில குறைபாடுகளை நீக்குவதாக உறுதியளித்து -தமிழரின் வாக்குகளுக்குக் 'கண்ணி' வைக்கின்றார்.

**டி.பி. நிராகரித்த தமிழரின் வாக்குகள் அவரது கட்சியின் அரசியல் எதிரிகளான சுதந்திரக் கட்சியினருக்கு இலாபத்தைக் கொடுத்துவிடாது பார்ப்பதில், ஐ.தே.கட்சியின் சில மூளைகள் துரிதமாகச் சிந்தித்தபடியும் உள்ளன.**

ஆனால், இந்தக் 'குழப்பமான அரசியலை' செய்ய டி. பி. யின் 'நேர்மையான பேரினவாத மூளை' அனுமதிக்கவில்லை.

டி. பி. நிராகரித்த தமிழரின் வாக்குகள் அவரது கட்சியின் அரசியல் எதிரிகளான சுதந்திரக் கட்சியினர்க்கு இலாபத்தைக் கொடுத்துவிடாது பார்ப்பதில், ஐ. தே. கட்சியின் சில மூளைகள் துரிதமாகச் சிந்தித்தபடியும் உள்ளன.

அந்தச் சிந்தனையில் ஒன்றுதான், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி முறையை இல்லாதொழித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் முறைமை பற்றி, டி. பி. பேசிய ஒரு பொதுக்கூட்டப் பேச்சு ஆகும். டி. பி. யின் சொல்லைப் போல ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் முறையும் இருக்குமானால், அது டி. பிக்குச் சாதகமானதாகவே இருக்கும் என்பது பரவலான எதிர்பார்ப்பு.

ஏனெனில், நாடளாவிய ரீதியில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் -முஸ்லீம் மக்களது வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும் நிர்ணய சக்திகளாக இருப்பதைப் போல,

**சிங்களவர் - தமிழர் என்ற இரண்டு தோணிகளில் கால்வைத்து ஒன்றுமில்லாமல் சறுக்கி விழுவதைவிட, பலமான தோணியினுள்ளே (சிங்கள) ஆழக் கால்பதித்தால் போதும் என்ற சித்தாந்தத்துடனேயே 'டி.பி.' உள்ளார்.**

நாடாளுமன்றத் தேர்தல்களின் போது தமிழ் -முஸ்லீம் வாக்குகள் ஒரு பெரிய நிர்ணய சக்தியாக இருக்கமாட்டா. தமிழ் - முஸ்லீம் வாக்குகள் தொகுதிரீதியாகச் சிதறுண்டு கிடப்பது தான் அதற்குக் காரணம்.

ஆனால், ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய புதிய முறை பற்றிய டி. பியின் கருத்து, இந்த வருட இறுதியில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலின்போது நடைமுறைக்கு வருமா என்பது, கேள்விக்குரியதே.

எது எப்படியிருந்தபோதிலும், இதுவரை நாளும் ஐ. தே. கட்சிக்கே பெருமளவில் சென்ற சிறீலங்கா வாழ் தமிழர்களது வாக்குகளுக்கு, திருமதி சந்திரிகா தலைமையில் இயங்கப் போகும் சுதந்திரக் கட்சி தூண்டில் போட்டுக் கொண்டிருக்கின்றது என்பது ஒரு உண்மை.

இந்த, வாக்குத் தூண்டிலைத் தூர எறிந்தவர் வெல்வாரா அல்லது அதைத் தூக்கி எடுத்துப் பயன்படுத்த முயல்பவர் வெல்வாரா என்பதை, பொறுத்திருந்து பார்ப்போம். ■

**நன்றி:'விடுதலைப் புலிகள்'**

# தமிழரின் பலம்

இலங்கைத் தமிழ் மக்களின் விடாமுயற்சியும், கடின உழைப்பும் பிரசித்தமானவை. இது இலங்கைக்குள் மட்டுமல்ல உலகில் பல தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்டவை. வரண்ட பிராந்தியம் ஒன்றை தமது தாயமாகக் கொண்டுள்ள இம் மக்களின் விடா முயற்சியும், கடின உழைப்புமே அவர்களைப் பொருளாதார ரீதியிலும், ஏனைய துறைகளிலும் கௌரவத்துடன் வாழ வைத்தது. இந்த வகையில் விடா முயற்சி, கடன உழைப்பு என்பவற்றுடன் இன்று தமிழ் மக்களின் மனோவலிமையும் பலரையும் ஆச்சரியத்தினுள் ஆழ்த்தும் ஒன்றாகவே உள்ளது. தமிழ் மக்களின் மிக உயர்ந்த மனோபலமே இன்று அவர்களை இவ்வளவு இன்னல்களையும், துன்பங்களையும் கண்டு சோர்வடையாது எதிர்த்துப் போராட வைத்துள்ளது. இதனை இன்று தமிழர் தாயகத்திற்கு வருகை தருபவர்கள் கண்டு திகைத்துப் போயுள்ளனர்.

இதனை வெளிப்படுத்துவதாகவே "இன்னல்களையும் துன்பங்களையும் சுமந்து ஆனால் மனோ தைரியத்துடன் வாழ்க்கை நடத்தும் மக்களே, அவர்கள் இத்தனை இடர்கள் மத்தியிலும் சிரிப்புடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கும் இவர்கள் மறுகணம் துன்பங்களையும், துயர்களையும் சந்திக்கத் தயாரான நிலையிலேயே இருக்கின்றனர்" என்ற பெந்தஸ்கோ மதக் குழுவினரின் கூற்று உள்ளது.

இதனைப் பிரதிபலிப்பது போன்றே அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய இலண்டன் லூசியம் நகர மேயர் சின்னத்தம்பி சுப்பிரமணியமும் தமிழ் மக்களின் உறுதிபற்றிக் குறிப்பிட்டிருந்தார். "இங்குள்ள தமிழ் மக்கள் இன்னல்கள், துயரங்கள் வந்தபோதிலும் இவர்களின் கலை கலாச்சார வாழ்வைக் காண்கின்றபோது, பசி பட்டினி என்பவற்றோடு அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதைக் கண்டு என் மனம் பெருமிதமடைகின்றது" என்றார்.

ஆனால் இவர்களின் இப்புகழாரம் மட்டும் தமிழ் மக்களின் கடின உழைப்பிற்கும் மனோ வலிமைக்கும் போதுமா என்றால், இல்லை என்றே கூறமுடியும். ஏனெனில் ஓரிரு நாட்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கியிருப்பவர்களால் தமிழ் மக்களின் விடா முயற்சியையும், மனோ வலிமையையும் முழுமையாகக் கண்டு கொள்ள முடியாது.

ஒரு நாளில் சுமார் ஐம்பது மைல்களுக்கு மேற்பட்ட தூரத்தை துவிச்சக்கர வண்டியில் ஓடிக்கடந்து விறகு வியாபாரம் செய்யும் ஒருவரின் கடின உழைப்பிலும், எப்பொழுதும் தாக்குதல் நடக்கலாம், மரணம் அடைய நேரிடலாம் என்றபோதிலும் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் தொழிலாளியின் மனோதிடத்தையும், பாடசாலையின் மீது எவ்வேளையும் குண்டு விழலாம் என்றபோதும் படிக்கச் செல்லும் மாணவரின் மனஉறுதியையும், பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்களின் துணிவையும் ஓரிரு நாட்களில் எவரும் கண்டு கொள்ளவோ கணிப்பீடு செய்யவோ முடியாது.

இவையாவற்றிற்கும் மேலாக தமிழீழ தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தனித்து நின்று தமிழ் மக்கள் முன்னெடுத்துச் செல்வதில் அவர்கள் காட்டும் மனஉறுதி, வெளியார் எவரினதும் கற்பனைக்குக் கூட எட்டாதவை. சிறீலங்கா அரசின் பல்வேறுவித ஒடுக்குமுறை மற்றும் முற்றுகை என்பவற்றின் மத்தியிலும் போராட்டத்தை முன்னெடுப்பதில் அவர்கள் காட்டும் அக்கறையானது மனித குலத்தின் உயர்ந்தளவிலான மனோபலத்தின் வெளிப்பாடாகும்.

இவ்வுறுதியின், மனோபலத்தின் வெளிப்பாடாகவே விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளது. இவர்கள் தம் மக்களின் விடுதலைக்காக தம் உயிரைத் தற்கொடை செய்யவும் தயாராக உள்ளனர். இவர்களின் இம்மனோபலத்தை யாராலும் அளவீடு செய்ய முடியுமா?

இவர்களின் இம்மனோபலமே தமது விடுதலைக்காக இரண்டு நாட்டு இராணுவத்துடன் மோதவைத்தது; ஒரு சிறிய இனத்தின் மகத்தான சாதனைக்கு வழிவகுத்தது. ஆனால், விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்திய இராணுவமும் பத்து வருடங்களுக்கு மேலாக போரிட்டு வரும் சிறீலங்கா அரசாங்கமும், இராணுவமும் இதனை இன்னும் புரிந்துகொள்ளவில்லை. புரிந்து கொண்டிருப்பின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வில் வெற்றி பெறலாம் என்ற அவர்களின் கனவு கலைந்து போயிருக்க வேண்டும். ■

**நன்றி: ஈழநாதம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# கிரைமியா: சுதந்திர நாடாகப் பிரிந்து செல்லுமா?

வைரக்கல் போன்ற தோற்றத்தையும், கருங்கடலில் நீண்டு மிதந்து கொண்டிருப்பது போன்ற அமைப்பையும் கொண்ட கிரைமியக் குடாநாடானது, முன்னாள் சோவியத் யூனியனின் மிகப் பெறுமதி மிக்க நிலப்பரப்புக்களில் ஒன்றாகக் கணிக்கப்பட்டிருந்தது.

உருசியர்கள் இதனைக் "கிரீடத்தில் பதிக்கப்பட்ட இரத்தினக் கல்" என வர்ணித்தார்கள். உக்கிரேனியர்களோ "தேசத்தின் மார்பில் குத்தப்பட்ட உத்தியோக அடையாளச்சின்னம் (Badge)" எனக் கூறிப் பெருமைப்பட்டார்கள்.

மத்திய தரைக் கால நிலையுடன் கூடிய, வெண்நுரை பொங்கும் கருங்கடலின் கடற்கரைகளையொட்டி "சார்" மன்னர்களின் புகட்டான மாளிகைகள் கிரைமியா வெங்கும் பரவிக் கிடந்தன. இவை பிற்பாடு சோவியத் ஆட்சி பீடத்தில் இருந்த உயரதிகாரிகளின் உல்லாச வாசஸ்தலங்களாக பல தசாப்தங்களாகப் பாவிக்கப்பட்டு வந்திருந்தன.

சோவியத் சாம்ராச்சியம் பிளவுபடுவதற்குக் காலாக இருந்தவரான மிக்காயில் கோர்பச்சேவ் இவ் வாசஸ்தலங்களில் ஒன்றில் தங்கி இருக்கும் போதே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பதும், அவரது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு 1991 ஆகஸ்டில் பலத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பதும் பலருக்கு ஞாபகமிருக்கலாம். இன்று இதே கிரைமியா, உக்கிரேனில் இருந்தும் தனி நாடாகப் பிரிந்து செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.




கிரைமியாவின் பிரிவினை எனும் போது, அது இறுதியில் முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த இரு பெரும் நாடுகளான உருசியாவுக்கும் (148 மில்லியன் மக்கள்) உக்கிரேனுக்கும் (52 மில்லியன் மக்கள்) இடையிலான பலப் பரீட்சையின் வெற்றி, தோல்விகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது எனலாம். இதேவேளை கிரைமியாவின் இனக்கட்டமைப்பை உற்று நோக்கில் இப் பிரதேசம் இன்னுமோர் யூக்கோசுலாவியாவாக உருமாறுமா எனும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

சுதந்திர உக்கிரேனில் தமது வாழ்வு வளம் பெறும் எனக் கருதிய உக்கிரேனிய வாக்காளர் சோவியத் கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதற்கு ஆதரவாக (1991ல்) வாக்களித்தனர்.

எனினும் சுதந்திர சந்தைப் பொருளாதாரத்திற்கு திடீரென மாற விரும்பாத உக்கிரேன் அதிகார பீடம், படிப்படியான மாற்றங்களைக் கொண்டு வரவே முயன்றது. இதன் விளைவு உக்கிரேனின் பணவீக்கம் மாதத்துக்கு 90 வீதம் எனும் ரீதியில் அதிகரித்தது. ஒரு காலத்தில் அபரிதமாக இருந்த எரிபொருள் எளிதில் கிடைக்க முடியாததாகவும் விலை கூடியதாகவும் மாறியது.

சோவியத் யூனியனின் 'உணவுக் களஞ்சியம்' என அழைக்கப்பட்ட உக்கிரேன் சோவியத்தின் மொத்த தேசிய வருமானத்தில் 16 வீதத்தை அளித்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உக்கிரேன் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிய கிரைமியர் தமக்கு சுயாட்சி வேண்டும் எனக் கோசம் எழுப்பினர். இதற்குக் கிரைமியாவின் இனக் கட்டமைப்பும் உந்துதல் அளிப்பதாக அமைந்திருந்தது. உக்கிரேனில் மொத்தமாகப் பார்க்கும் போது 73 வீதமானோர் உக்கிரேனியராகவும், 22 வீதமானோர் மட்டுமே உருசிய இனத்தவராக இருந்தாலும் கிரைமியக் குடாநாட்டை எடுத்து நோக்கும் போது அங்குள்ள 2.5 மில்லியன் மக்களில் 67 வீதமானோர் உருசியர்களாகவும் 26 வீதமானோர் மட்டுமே உக்கிரனியர்களாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அது மாத்திரமல்ல, கிரைமியாவானது நான்கு தசாப்தங்களுக்கு முன்பாகத்தான் உக்கிரேனுடன் இணைக்கப்பட்டிருந்தது. தமது 300 வருட கால உருசிய -உக்கிரேன் ஐக்கியத்தை நினைவு கூறும் வண்ணம் அன்றைய சனாதிபதி குருச்சேவ் 1954ல் கிரைமியாவை உக்கிரேனுக்கு "அன்பளிப்புச்" செய்திருந்தார். எனினும் அச்சமயம் உருசியாவும், உக்கிரேனும் சோவியத் கூட்டமைப்பின் கீழ் இருந்ததால் இவ் அன்பளிப்பு பெரிதும் அடையாளக் குறியீடாகவே கருதப்பட்டது. உண்மையில் சோவியத் யூனியன் பிளவுபடும் வரை கிரைமியாவானது மொஸ்கோவின் ஆதிக்கத்தின் கீழேயே இருந்து வந்திருந்தது. எனவே கிரைமியாவின் பெரும்பாலான உருசியர்கள் உக்கிரேனில் இருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொள்ள விரும்பியது இயற்கையே.

1992 மே மாதத்திலே கிரைமியப் பாராளுமன்றம், உக்கிரேனில் இருந்து பிரிவதாக சுதந்திரப் பிரகடனம் செய்ததுடன் ஆகஸ்ட் மாதத்தில் இது சம்பந்தமாக சர்வ சன வாக்கெடுப்பு நடாத்தப்படும் என்றும் அறிவித்தது. இதனைக் கண்டு கொதித்தெழுந்த உக்கிரேன் பாராளுமன்றம் இவ்விரு தீர்மானங்களும் அரசியல் சட்டத்துக்கு முரணானவை என அறிவித்ததுடன் சனாதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்தப் போவதாகவும் பயமுறுத்தியது.

இத்தகைய அழுத்தத்தின் கீழ் பின்வாங்கிய கிரைமியத் தலைவர்கள், தமது சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்தனர்.

எனினும் இந்நிகழ்ச்சி ஏற்கனவே கனன்று கொண்டிருந்த உருசிய-உக்கிரேன் உறவில் நெய் வார்த்தது போல அமைந்தது.

"கிரைமியாவில் சர்வசன வாக்குரிமை நடாத்தப்படுவதை எவரும் பயமுறுத்தல் மூலமாகவோ, பலாத்காரமாகவோ தடுத்து நிறுத்த முடியாது" என உருசிய உப சனாதிபதி கூறியது மட்டுமல்ல, உருசியப் பாராளுமன்றம் ஒருபடி மேலே சென்று 1954 இல் உக்கிரேனுடன் கிரைமியா இணைக்கப்பட்டதானது 'சட்ட விரோதமான செயல்' எனத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் கிரைமியக் குடாநாட்டின் எதிர்காலம் பற்றி உருசியாவும், உக்கிரேனும் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் எனவும் பரிந்துரைத்தது.

"கிரைமியப் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாதலால் வெளிநாடுகள் இதில் தலையிடத் தேவையில்லை" என உக்கிரேன் கூறினாலும் உருசியாவுக்கும், உக்கிரேனுக்குமிடையிலான பிரச்சினை புரையோடிப் போன தொன்றாகவே காட்சியளிக்கிறது.

"உக்கிரேனை ஒரு சுதந்திர நாடாக உருசியா ஏற்க மறுப்பதே இம் முரண்பாடுகளுக்கான மூலவேராக உள்ளது" என உக்கிரேன் சனாதிபதி கருத்துத் தெரிவித்துள்ளார். எண்ணெய், எரிபொருள் பங்கீட்டில் இருந்து, வெளிநாட்டுக் கடன், மற்றும் முன்னாள் சோவியத்தின் இராணுவத்தைப் பங்கிட்டுக் கொள்வது வரை பல விடயங்களில் இணக்கம் ஏற்படாமையினால் இவ்விரு நாடுகளுக்கிடையே ஒருவிதமான 'பனிப்போர்' நடந்து கொண்டிருக்கின்றது.

உக்கிரேன் சுதந்திர நாடாகப் பிரிந்த போது 1800 அணு (NUCLEAR) ஆயுதங்களைக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுத நாடாக மாறியது. தன்னுடைய அயலவர் இவ்வாறு சக்திவாய்ந்த ஒரு நாடாக விளங்குவதை உருசியாவினால் பொறுத்துக்கொள்ள முடியாதுள்ளது.

கிரைமியாவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பதில் உருசியா குறிப்பாக உள்ளதற்கு இன்னுமோர் காரணம், முன்னாள் சோவியத்தின் 'கருங்கடல் கடற்படை' அங்கு நிலை கொண்டிருப்பதாகும். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிரைமியக் குடாநாட்டின் துறைமுகமான 'செவஸ்டபோலைத்' தனது ஆளுமையின் கீழ் கொண்டுவருவதன் மூலம் மத்தியதரைக் கடலில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த உருசியா விரும்புகின்றது.

சுமார் 300 கடற்படைக் கலங்கள் 70,000 துருப்பினர், மற்றும் கிரைமியாவின் பரந்தளவிலான கரையோர துறைமுக வசதிகளுக்கு யார் உரிமை கோருவது என்பதில் உருசியாவும் உக்கிரேனும் முரண்பட்ட வண்ணமுள்ளன. இற்றைவரை அரை டசின் மாநாடுகள் கூட்டப்பட்டிருந்தாலும் ஒரு இணக்கமும் காணப்படாமையினால் இக் கலங்கள் துருப்பிடித்த வண்ணமுள்ளன.

இதேவேளை கிரைமிய சனத்தொகையில் 10 வீதமான 'டாட்டார்' எனும் சிறுபான்மை இனத்தவர் தமக்கு உப தன்னாட்சிப் பகுதி தேவையென்று கோரி வருகின்றமை பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. 1940 இல், கிரைமியாவில் இருந்த மொத்த 4 இலட்சம் 'டாட்டார்' சனத்தொகையினரும் அவர்கள் நாசிகளுடன் ஒத்துழைத்தனர் எனக் கூறப்பட்டு ஸ்டாலினால் மத்திய ஆசியாவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர். உக்கிரேன் சுதந்திரம் பெற்ற பிறகு சுமார் 2,50,000 பேர் மீளக் குடியமர்ந்துள்ளனர். உக்கிரேனும் உருசியர்களுக்கெதிரான ஒரு தடைக் கல்லாக இவர்களைப் பாவிக்கலாம் எனும் எண்ணத்தில் அவர்கள் குடியேறுவதற்கு சற்று அனுசரணையாக இருந்து வருகிறது.

உண்மையில் கிரைமியாவின் சுதேசிகள் இந்த 'டாட்டர்' இன மக்களே. துருக்கிய வம்சாவளியினரும், முஸ்லிம் மதத்தவருமான இவர்களை 'மகா கத்தரின்' 1783 இல் வெற்றி கொண்டதன் பின்பே கிரைமியப் பகுதி உருசியாவின் ஒரு பகுதியானது. 'கறையான் புற்றுக்குப் பாம்பும், உடும்பும் உரிமை கோருவது போன்றே 'டாட்டார்' இனத்தவரின் தாயகமான கிரைமியாவுக்கு இன்று உருசியரும், உக்கிரேனியரும் உரிமை கோரி நிற்கின்றனர்.

இந்தப் பின்னணியிலேயே கடந்த சனவரி மாதம் 30 திகதி கிரைமியாவின் முதலாவது சனாதிபதிக்கான தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலின் போது உருசியாவுக்கான ஆதரவு வெளிப்படையாகத் தெரிந்ததை அங்கு நிறுத்தப்பட்ட வேட்பாளர் பட்டியலில் இருந்து அறியக் கூடியதாயிருந்தது. அதாவது சனாதிபதிப் பதவிக்கு போட்டியிட்ட ஆறுவேட்பாளரில் ஐந்து பேர் உருசியாவுடன் இணைவதற்குச் சார்பாகவே பிரச்சாரம் செய்திருந்தனர்.

கிரைமியாவை சுதந்திரப் பாதையில் வழி நடத்திச் செல்வதாகவும் இவ்விடயத்தில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தவுள்ளதாகவும் உறுதியளித்த திரு. மெஸ்கோ என்பவர் 73 வீதமான பெரும்பான்மை வாக்குகளுடன் சனாதிபதியாகத் தெரியப்பட்டுள்ளார். உறுதியளிக்கப்பட்ட சர்வசன வாக்கெடுப்புக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரமாகவே, இச் சனாதிபதித் தேர்தல் அமைந்துள்ளதாக கணிக்கப்படுகிறது. உக்கிரேனுடன் கூட்டுச் சேருவதற்குச் சார்பாகப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்கள் 23 வீதமான வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தனர்.

மெஸ்கோவின் வெற்றி குறித்து கிரைமியாவின் சிறுபான்மை இனத்தவர் அதிர்ச்சியும் அச்சமுமடைந்துள்ளனர். குறிப்பாக 'டாட்டார்' இனத்தவரின் பாராளுமன்றக் கோட்டாக்களை இவர் குறைத்துவிடுவார் என நம்பப்படுகிறது. இதேசமயம் கிரைமியா உருசியாவுடன் எந்தளவுக்கு உறவுகொள்ளப் போகின்றது என உக்கிரேன் அரசு அவதானித்து வருகிறது.

கிரைமிய எதிர்காலம் பற்றி மெஸ்கோ மீண்டும் பொதுசன வாக்கெடுப்பை நிகழ்த்தினால் தேர்தல் முடிவுகளை "சட்டவிரோதமாக்குவேன்" என உக்கிரேன் சனாதிபதி எச்சரித்துள்ளார். இது உருசியாவுடனான மோதலை மேலும் இறுக்கமடையச் செய்வதாக அமையும் என்பதுடன், யூக்கோஸ்லாவியாவில் நடப்பது போல இங்கும் சிறுபான்மையினரான உக்கிரேனியரும், 'டாட்டார்களும், கிரைமியாவில் இருந்து பிரிவதற்கும் முனைவார்கள் என்றும் இதனால் இரத்தக்களரி ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உக்கிரேனுக்கும், கிரைமியாவுக்குமான பாராளுமன்றத் தேர்தல்கள் அண்மையில் நடந்து முடிந்துள்ளன. இதில் கிரைமிய பாராளுமன்றத்தில் உள்ள 94 இடங்களில் உருசிய ஆதரவுக் கட்சிகள் 69 இடங்களில் வெற்றியீட்டியுள்ளன. எனவே புதிய சனாதிபதி அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதிலேயே கிரைமியாவின் எதிர்காலம் தங்கியுள்ளது. ■

(நன்றி: 'உலகத்தமிழர்')

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் சமாதான சமிக்கைகளுக்கு சிங்கள அரசின் பதில் சமிக்கை என்ன?

## முப்படைகளையும் தயார்ப்படுத்தி போருக்குச் செய்யப்படும் ஏற்பாடுகள்

ஒன்றன்பின் ஒன்றாகவும் இடைவிடாதும் சமாதானத்திற்கான தமது விருப்பைப் புலிகள் இயக்கம் வெளிப்படுத்தி வருகின்றது. சிங்கள அரசைச் சமாதானத்தின்பால் அக்கறை கொள்ள வைக்கும் நோக்குடன் போர்க்கைதிகளை விடுதலை செய்வதும், அனைத்து நல்லெண்ணக் குழுக்களை வாஞ்சையுடன் வரவேற்பதுமாக, புலிகளின் தலைமை சமாதானத்திற்காக பெருமுயற்சி செய்கிறது. சமாதான சூழலை ஏற்படுத்த முயலும் வெளிநாட்டு அரசுகளின் விருப்பங்களுக்குப் பெருமதிப்புக் கொடுத்து, அவர்களைத் தமிழீழம் வரும்படி புலிகளின் தலைமை அழைப்புக்கள் விடுத்துள்ளது. அத்துடன் சமாதான முயற்சிகளுக்குப் பங்கமேற்படாதவகையில் புலிகள் இயக்கம் அவதானமாகவும் நடந்து கொள்கிறது.

"சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது" என, 'அனைத்துலக மகளிர் நாளை' முன்னிட்டு விடுத்த செய்தியில் (08-03-1994) தலைவர் பிரபாகரன் அவர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். தலைவரின் நன்முயற்சியை சிங்கள அரசு கருத்திலெடுக்காது விட்டாலும், அவர் தன் நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றார்.

புலிகளின் இந்த அரசியல் நிலைப்பாட்டுக்கு சிறீலங்கா அரசாங்கம் எப்படிப் பதிலளிக்கின்றது?


யாழ்ப்பாணம் வந்து திரும்பும் நல்லெண்ணக் குழுக்களின் முயற்சிகளுக்கு அரசு எவ்வித ஊக்கமும் கொடுக்காது விடுகின்றது. அதேவேளை சமாதான நல்லெண்ண முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு -குறிப்பாக கிறிஸ்தவ குழுக்களுக்கு -சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து கண்டனங்களும், மிரட்டல்களுமே பதிலாகப் போய்ச் சேருகின்றன.

அத்துடன், கனடா மற்றும் சுவீடனில் இருந்துவரும் சமாதான முன் முயற்சிகளை 'தலையீடு' என்று முத்திரை குத்தி, சிங்கள அரசு தட்டிக் கழிக்கின்றது.

அண்மைக்காலமாக சமாதானத்துக்கான முன் முயற்சிகளில் புலிகள் இயக்கம் ஆக்க பூர்வமாக ஈடுபட்டுள்ளதை, சர்வதேச சமூகம் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளது. சமாதானத்திற்கான புலிகளின் முன் முயற்சிகளுக்கு அரசு தகுந்த முறையில் பதிலளிக்காது விடுவதாக, பல வெளிநாட்டு அரசியலாளர்கள் பகிரங்கமாகவே கூறியுள்ளனர். சிங்கள அரசுக்கும் இக் குற்றச்சாட்டைப் பற்றி நன்கு தெரியும்.

இதன் காரணமாக, தானும் சில நல்லெண்ணச் சைகைகள் விடுப்பதாகக் காட்டி உலகை ஏமாற்றச் சிறீலங்கா அரசு முயல்கின்றது.

போர்க்கைதிகளை விடுவிக்கும் புலிகளின் நல்லெண்ணச் சைகைகளுக்குப் பதிலாகத் தனது சிறையிலுள்ள 'புலிகளை' விடுதலை செய்துள்ளதாக, சிங்கள அரசு பிரச்சாரம் செய்கிறது.



### சமரசத்தை நோக்கி...

"நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பாதைகளை மூடிவிடவில்லை. சமாதான வழிமூலம் எமது மக்களிற்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்குவரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை, நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறோம். எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்கைகளை காட்டவும் நாம் தவறவில்லை.

எமது நோக்கத்தையும், நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகம் இன்று நன்கறியும். சமாதானத்தின் பாதைக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும். உலகத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவிப்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும்.

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும், சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது, உரிமை கேட்டு, நீதி கேட்டு, சமாதான வழியில் தீர்வு கேட்டு நிற்கும் எமது மக்களிற்குச் சார்பாகக் குரலெழுப்ப வேண்டும். இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக் கடப்பாடாகும்."

*- தலைவர்*
*08-03-1994*

இது ஒரு பொய்ப் பிரச்சாரம் ஆகும்.

தமிழர்கள் என்ற 'குற்றத்தை தவிர' வேறு எந்தவித காரணமுமில்லாமல் கைது செய்யப்படும் அப்பாவித் தமிழர்களை விடுவித்துவிட்டு, புலிகளின் உறுப்பினர்களை விடுதலை செய்துள்ளதாக அறிவித்து உலகை ஏமாற்ற அரசு முனைகிறது.

இதேபோன்றுதான் மீன்பிடிக்கெதிரான கடலடங்கு சட்டத்தை நீக்கிவிட்டதாகக் கொழும்பில் அறிவித்துவிட்டு, குடாநாட்டின் கரையோரங்களில் மீன் பிடிக்கும் மீனவர்கள் மீது சிங்களக் கடற்படை பீரங்கி மற்றும் உலங்கு வானூர்தி தாக்குதல்களை நடாத்தித் தமிழ் மீனவர்களைக் கொன்று வருகின்றது.

கடலடங்கு சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக அரசு அறிவித்த பின்னர் சிங்களக் கடற்படை நடாத்திய ஐந்து வெவ்வேறான தாக்குதல்களில் பத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேயளவானோர் காயமடைந்துள்ளனர்.

கடலடங்கு சட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்களுக்குக் கொடுத்துவந்த நிவாரணப் பொருட்களை நிறுத்துவதற்காக அரசு செய்த சூழ்ச்சிதான் "தடைச்சட்டம் நீக்கப்பட்டதான" அறிவிப்பு. இந்தச் சூழ்ச்சிகரத் திட்டத்தை உணராத அப்பாவி மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று, சிங்களக் கடலரக்கனின் வலையில் சிக்குகின்றனர்.

இதேபோல் கண்மூடித்தனமாக எறிகணை வீசி -வான் தாக்குதல்களைச் செய்து -அப்பாவித் தமிழர்களை கொன்றுவருகின்றனர்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய அடிப்படைகளில் மிக முக்கிய இடத்தை வகிக்கும் 'தமிழர் தாயகக் கோட்பாட்டை' ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அதைப் பிரித்துச் சிதைப்பதிலேயே சிறீலங்கா அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. சர்வசன வாக்கெடுப்பு என்று கூறிக்கொண்டு கிழக்கு மாகாணத்தைப் பிரித்தெடுத்துச் சிங்கள மயமாக்குவதிலேயே, அரசு குறியாக இருக்கிறது.

**இது, இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளை நிரந்தரமாகவே நிறுத்திவிடும் நோக்குடன் சிங்கள அரசு செய்யும், ஒரு அபாயகரமான நடவடிக்கை என்றே சொல்ல வேண்டும்.**

"இனப்பிரச்சினை இல்லை" என்று ஜனாதிபதி திரும்பத் திரும்ப வலியுறுத்துவதும், தமிழரின் தாயக நிலத்தை பிரிக்க முயல்வதும், சமாதான நல்லெண்ணக் குழுக்களை அசட்டை செய்வதும், வெளிநாடுகளில் இருந்து வரும் சமாதான முயற்சிகளை தடுத்து நிறுத்துவதுமாக, சிறீலங்கா அரசு சமாதான முயற்சிகளுக்கு வெளிப்படையாகவே முழு எதிர்ப்பைக் காட்டுகின்றது.

மறுபுறத்தில், தமிழரின் இனப்பிரச்சினையை இராணுவ பலம் கொண்டு தீர்த்துவிடுவதில் அரசு உறுதியாக இருக்கின்றது. அதற்கு வசதியாக போர்த் தேவைகளுக்கென வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை வீதத்தையும் ஒதுக்கத் தான் தயாராக இருப்பதாக, திரு. டி. பி. விஜேதுங்க போர் வெறியுடன் அண்மையில் கூறியுள்ளார்.

"போர் சிங்கள இளைஞர்களது உயிர்களைக் காவு கொள்கிறது" என்ற அவலக்குரல்கள், சிங்கள தேசத்தின் ஒரு மூலையிலிருந்து எழுந்து கொண்டிருந்தாலும், அதை அமுக்கிவிடுவதுபோலப் பலத்த சத்தத்துடன் சிங்களப் பேரினவாதிகளும் -ஆளும் வர்க்கமும் போர்க்குரலை ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

புலிகள் இயக்கத்தின் சமாதான விருப்பையும், அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளையும், அத்துடன் சிங்கள அரசின் போர் வெறியையும் அதற்கான தயாரிப்பு வேலைகளையும், உலகம் அவதானித்தபடிதான் உள்ளது.

இந்த நிலையில், சமாதானத்திற்காகக் குரல் கொடுக்கும் மேற்குலகம், சமாதானத்திற்கு வரமறுத்து இன அழிப்புப் போரில் ஈடுபட விரும்பும் சிங்கள அரசிற்கு ஆயுதங்களையும் மற்றும் உதவிகளையும் கொடுப்பது அல்லது கொடுப்பதை அனுமதிப்பது எந்த வகையிலும் நீதியாகாது!

எனவே, சமாதானத்தை விரும்பும் சர்வதேச சமூகமானது, சிங்கள அரசைச் சமாதான வழிமுறைக்கு கொண்டு வரவேண்டும்; அது முடியாவிட்டால், வெறிபிடித்த சிங்களப் படைகளிடம் இருந்து தமிழினத்தைப் பாதுகாப்பதற்காக, புலிகள் இயக்கத்திற்கு உதவ வேண்டும்! ■

**நன்றி:'விடுதலைப் புலிகள்'**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜேர்மனியில் விடுதலை உணர்வை வெளிப்படுத்திய அன்னை பூபதி நினைவுநாள்

தமிழர் கலை, பண்பாட்டுக் கழக யேர்மன் கிளையினரால், அன்னைபூபதியின் நினைவு நாளை முன்னிட்டு 'அன்னை பூபதி நினைவுப்பரிசுப் போட்டி' நடாத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

23-04-94 ல் டோட்முண்டி நகரில், Horld Str 13 இல் உள்ள மண்டபத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் விடுதலை உணர்வுமிக்க கவிதைகளையும் கட்டுரைகளையும் பேச்சுக்களையும் கொடுத்த மாணவ, மாணவியர் தமிழறிவும் தமிழார்வமும் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். அன்னை பூபதியின் உண்ணாநோன்பின் இறுதிநாட்களை சொல்ல முற்பட்ட சிறுமி ஒருவர் துயரமிகுதியால் உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர்விட்டுக் கதறி அழுது பேச்சை இடையில் நிறுத்திக் கொண்டார். பார்வையாளர்களில் பலரும் கண்ணீர் விட்டனர். பல மைல்கள் கடந்து வாழ்ந்தும் ஈழத்தமிழரின் அடுத்த பரம்பரை ஈழவிடுதலையில் கொண்டுள்ள ஈடுபாட்டை போட்டியாளர்கள் காட்டி நின்றனர்.

பிற்பகல் நான்கு மணிக்கு 'போகும்' நகரில் நடந்த அன்னை பூபதி நினைவுநாள் நிகழ்வின்போது போட்டியில் வெற்றியீட்டிய திமைசாலிகளுக்கு அன்னை பூபதி நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன.

'அன்னையின் நினைவில்' என்ற கர்நாடக இசை நிகழ்ச்சியும், 'நெருப்பாய் இருப்பாய்' என்ற இசை நாட்டியமும் கலை, பண்பாட்டுக் கழக யேர்மன் கிளைக் கலைஞர்களால் நடாத்தப்பட்டன.

போட்டியில் பங்குபற்றிய கலைஞர்களை வாழ்த்திப் பேசிய யேர்மன் கிளை கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் "மண்ணை அகழ்ந்து சுரங்கம் வெட்டி மாணிக்கக் கற்களை தேடி கண்டுபிடிப்பதற்கு ஒப்பானது இந்தப் போட்டி" எனத் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் நம்மவரிடம் உள்ள சில திறமையான மாணிக்கங்களை இந்தப் போட்டியின் மூலம் கண்டுபிடிக்க முடிந்தது. தமிழன்னையின் ஆபரணமான கலை, பண்பாட்டுக் கழகம் இந்த மாணிக்கங்களை மெருகேற்றித் தன்னில் பதித்துக் கொள்ளும் அதே வேளை விடுதலை உணர்வற்ற எந்த ஒரு கலைஞரும் அவர் மாணிக்கமாக இருந்தாலும் கூட எம்மைப் பொறுத்தவரையில் பெறுமதி அற்ற கூழாங்கற்களே எனக் குறிப்பிட்டார்.

விடுதலை உணர்வை வெளிப்படுத்தி அன்னை பூபதியின் தியாகத்தை போற்றி ஒரு நிறைவான நிகழ்ச்சியாக அன்னை பூபதி நினைவுநாள் நிறைவுற்றது. ■

## குடாநாட்டைச் சுற்றி...

யினர் நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் இருபொதுமக்கள் பலியாகியுள்ளதுடன், எட்டுப் பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக தெரியவருகிறது. அதே வேளை மன்னாரில் சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த புளட் குழுவினர் அவரது மைத்துனியைக் கொலை செய்து கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

### அரசு நடத்தும் தகுதியில்லை

சிறிலங்கா அரசாங்கம், தான் தேர்தல் நடாத்திவிட்டதாக தம்பட்டம் அடிக்கும் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஜனநாயகம் திரும்பி விட்டதாகக் கூறிவந்தது. ஆனால் அங்கு அப்பாவி பொதுமக்கள் உயிர் வதைக்கும், உடல் அழிவுக்கும், அகதிநிலைக்கும் தள்ளப்பட்டு வருவது சிறிலங்கா அரசாங்கத்திற்கு தமிழீழப் பகுதிகளில் அரசு நடத்தும் தகுதியில்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. அவ்வாறே மன்னார் பிரதேசத்தில் சிறிலங்கா ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ள சம்பவங்களும் அங்கு அராஜகம் தலைவிரித்தாடுவதைக் காட்டியுள்ளது.

### குடாநாடு நோக்கிய படைநகர்வு

இதற்கிடையே மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து பெருந்தொகையான இராணுவத்தினரை யாழ் குடாநாடு நோக்கி நகர்த்தும் பணியில் சிறிலங்கா இராணுவத்தின் தலைமைப் பீடம் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. யாழ் குடாநாட்டைக் குறிப்பாக, பலாலி இராணுவ முகாம் நோக்கிய விமானப் பறப்புக்கள் அதிக அளவில் இடம் பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவ ஆளணிகளையும், வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களையும் இறக்கும் பணியில் சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதற்கான அறிகுறியே இது என நம்பப்படுகிறது.

### இருவழி நெருக்குதல்

ஒரு புறத்தில் மக்கள் மீதான தாக்குதல்கள் மூலம் மக்களை அச்சப்படுத்துவதும் மறுபுறத்தில் தனது இராணுவ நிலைகொள்ளலை உறுதிப்படுத்துவதற்கான படைக்குவிப்பு, ஆயுதபரிமாற்றம் என்பவற்றிலும் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசாங்கம் இருவழி நெருக்குதல் மூலம் மக்களின் மனஉறுதிப்பாட்டைக் குலைக்க முயற்சித்து வருகிறது.

### மீனவர்கள் பலி

சுழிபுரம் கடற்கரையில் மீன்பிடித் தொழிலை முடித்துக்கொண்டு கரை நோக்கி வந்துகொண்டிருந்த மீனவர் ஒருவர் கலிபர் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமானார். காரைநகர் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியபோது அங்கிருந்து இடம் பெயர்ந்து சித்தங்கேணியில் அகதியாக வாழ்ந்து வந்தவர் இவர் என அடையாளம் காட்டப்பட்டுள்ளது. அதேபோல் பருத்தித்துறைக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூன்று மீனவர்களை நோக்கி சிறிலங்காக் கடற்படையினர் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றைய இருவரும் கடலில் குதித்து காயங்களுடன் நீந்திக் கரைசேர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

### அச்சுறுத்தலுக்கு அஞ்சாத வாழ்வு

இவ்விதமாக பலவிதமான அச்சுறுத்தல்களை சிறிலங்கா அரசாங்கம், தமிழீழ மக்கள் மேல் விடுத்துள்ள போதிலும் மக்கள் மனவுறுதியுடன் வழமையான வாழ்வில் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுள்ளன. பளைப் பிரிவு உட்பட குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பன்னிரண்டு பாடசாலைகள் கலந்துகொண்டதாகத் தெரிகிறது.

யாழ் குடாநாடெங்கும் எப்பொழுதும் யுத்தம் தொடங்கும் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் தங்கள் கடமைகளில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருப்பதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, விடுதலைப் புலிகள் எத்தகைய இராணுவ ஒடுக்கு முறைகளையும் எதிர்கொள்ளக்கூடிய வகையில் தயார் நிலையில் இருப்பதனை, மக்கள் நம்பிக்கையுடன் தம்மிடம் தெரிவித்ததாக யாழ் சென்று வந்த பயணிகள் தெரிவிக்கின்றனர்.

### மக்கள் உயிர்காப்புக்கு முக்கியத்துவம்

இதற்கிடையே சிறிலங்கா இராணுவம் பாரிய தாக்குதல்களை ஆரம்பித்தால் மக்கள் உயிர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளிலும், பயிற்சிகளிலும் விடுதலைப் புலிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். உணவுகள், மருந்துகள் ஆகியன சேமிக்கப்படுவதுடன் இடம்பெயர்வுகள் ஏற்பட்டால் அதனைச் சமாளிப்பதற்கான திட்டங்களிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. முதலுதவிப் பயிற்சிகள், உயிர்காப்புப் பயிற்சிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டுவருகின்றன. ■

## சிறிலங்காவில்...

பலத்த சேதமடைந்து பெரும் குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றன. சமீபத்தில் ஆனைக்கோட்டையில் இரண்டு சைக்கிள்கள் மோதிக்கொண்ட விபத்தின்போது, சைக்கிளை ஓட்டி வந்தவர் குண்டுவீச்சுக் குழிக்குள் சைக்கிளுடன் வீழ்ந்ததினால் உயிரிழந்துள்ளார்.

### குழந்தைகள், நோயாளிகள் மரணம் அதிகரிப்பு

கடந்த மாதத்தில் மட்டும் யாழ் போதனா வைத்தியசாலையில் இருபது குழந்தைகள், 'செப்தி சேமியா' நோயினால் இறந்துள்ளனர். அத்துடன் சிறிலங்கா அரசாங்கம் அடிப்படையான சுகாதார வசதிகளைக் கூட அனுமதிக்காத காரணத்தால் நுளம்பு பெருகி மலேரியா போன்ற தோற்று நோய்களினால் பெருந்தொகையானோர் பாதிப்படைந்துள்ளனர். மேலும் நீரிழிவு நோய்க்கான மருந்துகளைக் கூட சிறிலங்கா அனுமதிக்காததினால் பலர் கண் பார்வை இழப்புக்கு உள்ளாகி வருகின்றனர். மீன்பிடித்தல் தடைசெய்யப்பட்ட நிலையில் குழந்தைகள் மிகக் கடுமையான புரதமின்மையாலும் பாதிப்படைந்துள்ளனர்.

### அவசர வேண்டுகோள்

தமிழ்ப் பிரதேசங்களுக்கு மருந்துவகைகளை சிறிலங்கா அரசாங்கம் அனுப்புவதை நிறுத்தியுள்ளதால், வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் குறிப்பாக டாக்டர்கள், இப்பிரதேசத்திற்கு மருந்துகளை அனுப்பி உதவ வேண்டும் என குடாநாட்டில் சுகாதார மருத்துவ சேவைகளில் ஈடுபட்டுள்ளோர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### மரணங்களைத் தடுக்க வழி

தேவையற்ற பொருளாதாரத் தடைகளாலும், வீணான யுத்தத்தினாலும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் ஏற்படும் அநியாய மரணங்களையும் பேரிழப்புக்களையும் தவிர்ப்பதற்கு ஒரே வழி தமிழர் தாயகத்தில் தமிழருடைய ஆட்சி நடைபெற வழி செய்வது ஒன்றேயாகும். ■

## சிறப்பு வைத்...

சிறப்பு வைத்தியர் பிள்ளையை யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடையிடையே வந்து சேவையாற்றும்படி கேட்கப்பட்டபோதிலும், அவர் இங்கு வருவதற்கு மறுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சிறப்பு வைத்தியர் யாழ்ப்பாணம் வந்து சேவையாற்ற விரும்பின் அனுமதி வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ■

## தமிழ்மக்களின்...

யில் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது:-

"1993 இல் பலர் சிறீலங்கா அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டனர். எனினும் அந்த எண்ணிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாவதும் மோசமாகப் பராமரிக்கப்படுவதும் சிறீலங்கா அரசாங்கத்தால் வழமையாகக் கையாளப்படுகிறது.

### தலையைச் சீவிய 'ரெலோ'

சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தமிழீழ விடுதலை இயக்கம் எனப்படும் 'ரெலோ' அமைப்பு 1993 ஜனவரியில் ஆயுதம் தரிக்காத இருவரை கொலை செய்து தலையை வெட்டியதாகத் தெரியவந்துள்ளது. கிழக்கு மாகாணத்தின் களுவாஞ்சிக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர்களே இந்த இருவர்களும் ஆவர்.

### படுகொலைகள்

அதேமாதத்தில் காஞ்சிரங்குடா பகுதியில் 9 பொதுமக்கள் இராணுவ நடவடிக்கைகளால் படுகொலை செய்யப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் பிரசைகள் குழுத்தலைவர் யூலை மாதத்தில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் தமிழ்இளைஞர் ஒருவரது சடலம் கொழும்புக்கு வடக்கில் 20 மைல் தூரத்திலுள்ள கடற்கரை நகரமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் கொழும்புச் சுற்றிவளைப்பு தேடுதலின்போது கைது செய்யப்பட்டவர்.

### விசாரணை இடமாற்றம்

மைலந்தனை கிராமத்தில் 1992 இல் 35 தமிழ் பொதுமக்களைப் படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 23 இராணுவச் சிப்பாய்கள் தொடர்பான விசாரணை, சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பொலநறுவைக்கு மாற்றப்பட்டுள்ளது. சாட்சிகள் அனைவரும் தமிழர்களாக உள்ளதால் அவர்களை விசாரணைக்கு உட்படுத்த முடியாமல் செய்யவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

### காணாமல் போனோர்

பெப்ரவரி 17ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 பேர் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டனர் எனக்கூறப்பட்டது. அதன் பின்னர் இவர்கள் எவருமே எங்குமே காணப்படவில்லை. கடந்த வருடம் யூலை மாதம் 14ம் திகதி மன்னார் மாவட்டத்தில் 3 தமிழர்கள் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் கைதாக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டதற்கு சாட்சிகள் உண்டு. ஆனால் அதன் பின்னர் அவர்களைக் காணவில்லை.

### 'புளட்' காரணம்

சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் புளட் குழு வடபகுதியின் வவுனியா மாவட்டத்தில், பலர் காணாமல் போனமைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

### நடவடிக்கைகள் தடுப்பு

தடைமுகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களைப் பார்வையிட 1989 இல் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் அனுமதியளித்தது. பாதுகாப்புப் படைகளின் கைகளில் சிக்கி காணாமல் போனவர்களின் தொகையைக் குறைப்பதில் கணிசமான பங்களிப்பைச் செய்ய இது உதவியுள்ளது. அதேபோல சிறிலங்கா அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் பணிக்குழுவும் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப்படுபவர்களின் நலன்களைக் கவனிக்க உதவி

தொடர்ச்சி 15ம் பக்கம் ...

## கொழும்பு குண்டு...

ழியைச் சுமத்துகிறது. இதனை உலக நாடுகள் இனங்கண்டு கொள்ளுமென நம்புகிறேன்" என, வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதுஒருபுறம் இருக்க, சிறிலங்கா அரசாங்கம் புலிகள் மேல் இப்பழியைப் போட எடுத்த முயற்சிக்கு, எதிர்பார்த்த ஆதரவு சர்வதேச நாடுகளிடையே கிடைக்கவில்லை என கொழும்பு பத்திரிகை ஒன்று அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. இதனை அடுத்து வெளிவிவகார அமைச்சர் கமீட் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி, தமது அரசாங்கம் முதலீட்டாளர்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் என உத்தரவாதம் கொடுத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

## தமிழர் தாயகத்தை...

இருக்கும் ஒருவர், அப்பதவி அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து, மக்களின் உயிருக்கும் உடமைக்கும் குந்தகமளிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடியவகையில் சர்வசன வாக்கெடுப்புக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். இதனை ஒரு மறைமுக யுத்தப்பிரகடனம் என இலண்டன் அரசியல் அவதானி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். அத்துடன் அரசியல் வங்குரோத்து நிலையில் உள்ள சிறிலங்கா ஜனாதிபதி, தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை விரிவுபெற வைத்து, கலங்கிய குட்டையில் மீன்பிடிக்க முயலுகிறார். அதுவுமன்றி இராணுவ நடவடிக்கைக்கும் திராணியற்று, அரசியல் நடவடிக்கைகளையும் புறக்கணிக்கும் சிறிலங்கா ஜனாதிபதி, இனங்களுக்கிடையான பகைமைகளை வளர்த்து தன்பதவியைத் தக்க வைக்க பகீரதப்பிரயத்தனம் செய்துவருகிறார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 500 கோடி ரூபா சூழல் பாதுகாப்புத் திட்டம்: வடபகுதி நிதிக்கு நேர்ந்த கதி என்ன?

## ▪ பதில் சொல்லுகிறார் தேவநேசன் நேசையா

உலகவங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சூழல் பாதுகாப்புத் திட்டத்தில், வடபகுதி திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வடபகுதியில் அமுல்படுத்தப்படாமைக்கு அரசியல் ரீதியான காரணங்களே தடையாக உள்ளதாக சூழல்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

சுற்றுப்புறச் சூழலில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்கும், சுற்றுப்புறச் சூழலில் பௌதீக, இரசாயன உயிரியல் சமநிலையை ஏற்படுத்துவதற்கும், இச்சமநிலையைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கும் இதன் மூலம் சூழலைப் பாதுகாப்பதற்கும் ஒரு நீண்டகாலத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. உலக வங்கியின் உதவியின் கீழ் பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

சமார் 500 கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம், இரண்டு ஆண்டுகளில் குறித்த இலக்கை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் சுமார் ஐம்பது வீதமான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன.

மேற்படி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பெரியளவிலான சூழல் பாதுகாப்புத் திட்டங்களில் இதுவும் ஒன்று. இத்திட்டம் இலங்கை முழுவதற்கும் அமுல்படுத்தப்படுவதற்காகவே ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டது. அதற்கான நிதியும் பெறப்பட்டது. ஆனால், இது நடைமுறைப்படுத்தப்படுவதற்கான உத்தரவு கிடைத்ததும், வடபகுதிக்கான நடவடிக்கைகள் அனைத்தும் அத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டுவிட்டது. தற்போது மேற்படி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியுதவி முழுவதும் ஏனைய பகுதிகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைக்காகச் செலவிடப்பட்டு வருகின்றது.
இந்த நிதியின் கணிசமான பகுதி "வில்பத்து", "யால" ஆகிய பகுதிகளில் வனப்பாதுகாப்பு, மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு ஆகிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் ஏனைய பகுதிகளிலும் இதேபோன்ற நடவடிக்கைகள் மிகவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆங்காங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

உலகவங்கியின் மேற்படி உதவித் திட்டத்தின் கீழ், வடபகுதியிலும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமைக்கு அரசியல் ரீதியான காரணிகளே பெரிதும் தடையாக உள்ளதாக பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. தேவநேசன் நேசையா கூறுகிறார்.

எரிபொருள் மற்றும் மின்சார வசதியின்மையால் வடபகுதியின் விறகுத் தேவைக்காகப் பெருமளவு மரங்கள் அன்றாடம் வெட்டி அழிக்கப்பட்டு வருகிறது என்றும், இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது வடபகுதியில் மரங்கள் விறகுக்காக வெட்டப்படுவது அதிகமாக உள்ளது என்றும், இந்த நிலையில் சாத்தியமான சூழல் பாதுகாப்பு என்பது புதிதாக மரங்களை நாட்டுவது என்பதை விட, மரங்கள் வெட்டி அழிக்கப்படுவதை முடிந்தவரை தடுத்து நிறுத்துவதாகத்தான் இருக்கும் என்றும் இதை வடபகுதியில் மேற்கொள்ள மேற்படி திட்டத்தில் வகை செய்திருக்கலாமே என்று திரு. தேவநேசன் நேசையாவிடம் கேட்டபோது; விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்ப்பதாக இருந்தால் விறகுக்குப் பதிலாக மாற்று எரிபொருள் வழங்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான எரிபொருட்களை வடபகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் அல்லது மின்விநியோகத்தை மீண்டும் வடபகுதிக்கு ஏற்படுத்த வேண்டும். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இவை போன்ற நடவடிக்கைகளை மேற்படி உலக வங்கியின் திட்டத்தின் கீழ் மேற்கொள்வது என்பது சாத்தியமில்லை என்றும் இதற்கு தற்போதைய அரசியல், இராணுவ காரணிகள் முழுமையான முட்டுக் கட்டையாக உள்ளன என்றும் பதிலளித்தார்.

இந்தவகையில் நோக்கினால், உலக வங்கியின் சூழல் பாதுகாப்புத் திட்டம் வடபகுதிக்கு உசிதமற்றதாகத் தோற்றமளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் வடபகுதிக்குச் சாத்தியமானதும் இராணுவ அரசியல் ரீதியான அனைத்து முட்டுக்கட்டைகளையும் ஊடறுத்துச் சென்று நடைமுறைப்படுத்தக் கூடிய உசிதமான திட்டம் ஒன்று வடபகுதியில் இருந்துதான் தமது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

காலங்கடந்த பின்பு வெளிவரும் இந்த அறிவிப்புக்கு ஏற்ப, வடபகுதியில் இருந்து சாத்தியமான சூழல் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டால், அது மேற்படி அமைச்சுக்குச் சென்றடைந்து நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி கிடைக்கும் போது, சூழல் பாதுகாப்புக்கான உலக வங்கித் திட்டத்தின் கால எல்லை கடந்துவிட்டதாகக் கூறும், உலக வங்கி அதிகாரி ஒருவரின் ஒப்பமிடப்பட்ட கடிதம் ஒன்று சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அலுவலக மேசைக்கு வந்துசேரும் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். ■

# வல்வை வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் அவ் வைத்திசாலைக்கு வரும் நோயாளிகள் பெரிதும் கஸ்ட நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலையையடுத்து இப்பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல், மலேரியா போன்ற ஆபத்தான நோய்கள் பரவிவருகின்றன. இந்நோய்க்கு இலக்காகிய பலர் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்நோயாளிகளின் நோயைக் குணப்படுத்தக்கூடிய வகையில் மருந்து வகைகள் இல்லாததினால் வைத்திய அதிகாரிகளும், நோயாளிகளும் பெரும் கஸ்ட நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.
வைத்தியசாலையில் பல நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதோடு வெளிநோயாளர் நாளொன்றுக்கு நூறு பேருக்கு மேல் சிகிச்சை பெற வருகின்றனர். கடந்த வருடத்திற்கான நாலாம் கந்தாயத்துக்குரிய மருந்துகள் கூட இன்னமும் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

## டாக்டர்கள் ஓய்வு வயது 62 ஆக உயர்த்த முயற்சி

நிபுணத்துவம் பெற்ற டாக்டர்களின் இளைப்பாறும் வயதெல்லையை 60 இல் இருந்து 62 ஆக உயர்த்த சிறீலங்கா சுகாதார அமைச்சு, அரசின் அங்கீகாரத்தைக் கோரியுள்ளது. "விரைவில் நிபுணத்துவ டாக்டர்கள் பலர் 60 வயதாவதையடுத்து ஓய்வு பெற இருக்கின்றனர். இவ்விதம் அவர்கள் ஓய்வுபெற்றால் நாம் பலரின் சேவையை இழக்க நேரிடும். தற்போது 60 வயதினை அடையும் டாக்டர்கள், அவர்கள் விரும்பின் 65 வயது வரை ஒப்பந்த அடிப்படையிலும் கடமை புரியலாம்" என சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ■

# இலங்கை வங்கி தீவுக்கிளை மீனவர்களுக்குக் கடன் ?

தீவுப்பகுதியில் தற்போது இயங்கும் இலங்கை வங்கிக்கிளை மீனவர்களுக்கான கடன் திட்டத்தின்படி, இருப்பத்தைந்து மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
மீனவர் கடன்திட்டத்திற்கு அமைவாக உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதி இவ்வாறு பகிரப்பட்டுள்ளது. எனினும் இக் கடன்களைப் பெற்றவர்களில் அநேகமானோர் மீனவர்கள் அல்ல என்றும், பாதுகாப்புப் படையைச் சேர்ந்தோரும், அரசுக்கு சார்பான ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தோரும் மேற்படி கடன்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர் எனவும் தெரியவருகிறது. மேலும் மீனவர்களுக்காக வழங்கப்பட்ட சில படகுகளும் பாதுகாப்பு படையினரின் போக்குவரத்திற்கே பயன்படுவதாகவும் கூறப்படுகின்றது.
எனினும் கணக்காளர் அறிக்கையில், யாழ்ப்பாண மீனவர்களுக்கான மீன்பிடி கடன்திட்டத்தின் கீழேயே இக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ■

## தென்றலாக வீசிய..

மக்களின் வாழ்வுக்கு வாழ்வளித்த புலோப்பளைச் சமரில், வன்னி நிலத்தின் அந்தப் போர்த்தளபதி, எங்கள் நரேஸ், வீழ்ந்து போனான்!

எதிரி ஏவிவிட்ட பீரங்கிக் குண்டொன்று எங்களிடமிருந்து அவனைப் பிரித்துக் கொள்ளும் அந்தக் கணப்பொழுதை 'ஒளி வீச்சு' எங்களுக்குக் காட்டியது.

நெஞ்சு தவிக்க நாங்கள் பார்த்தோம். தென்றலாக வீசிய அந்தப் புயல் ஓய்ந்து போனது!■

## தமிழ்மக்களின்...

வருகிறது. ஆனால் மனித உரிமைகள் பணிக்குழுவின் கள உத்தியோகத்தர்கள் வளங்கள் பற்றாக்குறையாக உள்ளமையாலும், பாதுகாப்புப் படைகளினுடனான தொடர்புகளைக் கையாள்வதில் நிலவும் சிரமங்கள் காரணமாகவும் தமது நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

### எம்பிலிப்பிட்டிய படுகொலைகள்

எம்பிலிப்பிட்டியாவில் 32 மாணவர்கள் காணாமற்போனமை தொடர்பாக, பத்து இராணுவத்தினரை 'மனித உரிமைகள் பணிக்குழு' அடையாளம் காட்டியுள்ளது. ஆனால் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### மட்டக்களப்பில் காணாமல் போன அகதிகள்

மட்டக்களப்பு பல்கலைக்கழக அகதிகள் முகாமில் இருந்து 58 தமிழ் அகதிகள் காணாமல் போனது தொடர்பாக, நான்கு இராணுவத்தினரை மனித உரிமைகள் பணிக்குழு அடையாளம் காட்டியது. ஆனால் இவர்களுக்கு எதிராக வழமைபோல அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### ஜனாதிபதி ஆணைக்குழு போதுமானதல்ல

1991 ஜனவரிக்குப் பின்னர் காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு பரிசீலனைக்கு எடுத்த 873 விடயங்களில் 38 விவகாரங்களை மட்டுமே பூர்த்தி செய்தது. இவற்றில் இரண்டு மட்டுமே சட்டமா அதிபரிடம் மேல் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டது. ஆயினும் இதுதொடர்பாக எதுவித விசாரணையும் நடைபெறவில்லை. எனவே இவ் ஜனாதிபதி ஆணைக்குழு அதன் பணிக்கு போதுமானதாக இல்லை.

### கற்பழிப்புகள்

நம்பிக்கையான தகவல்களின்படி, தடுப்புக் காவலில் உள்ளவர்கள் பலர் கற்பழிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது தெரியவருகிறது. இது தொடர்பான பல புலனாய்வுகள் நடைபெற்றுள்ளன. ஆயினும் ஒரு வழக்கில் மட்டுமே ஒரு பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டார்.

### சட்டவிலக்கு

1979 இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமும், மாதாந்தம் நீடிக்கப்படும் அவசரகாலச் சட்டமும் வழமையான தடுப்புக்காவல் சட்டங்களில் இருந்து விதிவிலக்கு அளிக்கிறது. இவை இரண்டும் தடுக்க முடியாத தனிமையில், தடுத்து வைத்திருப்பதற்கான அதிகாரத்தைக் கொடுத்துள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான ஒருவர் 18 மாதங்கள் வரை தடுத்து வைக்கப்படலாம். ஆனால் பல வழக்குகளில் இதற்கும் மேற்பட்ட கால அளவுக்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தமை வெளியாகியுள்ளது. பெரும்பாலான கைதிகள் இப்போது அவசர காலச்சட்டத்தின் கீழேயே அதிகளவில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் ஒப்பம் இடும்பட்சத்தில் ஒருவர் காலவரையின்றி தடுத்து வைக்கப்படலாம்.

### ஈ. பி. டி. பி. யின் 'வதைக்கூடம்'

அரசாங்கத்தால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட சட்டவிரோத தமிழ் அமைப்புக்கள் தமக்கென சொந்தமான தடுப்புக்காவல் வசதிகளை வைத்துள்ளனர். இவ்வாறான ஒரு அமைப்பான ஈ. பி. டி. பி. யின் தலைவருக்கு எதிராக, சட்டவிரோதமாக கடத்திச் சென்றமை மற்றும் சித்திரவதை செய்தமை சம்பந்தமாக அடிப்படை மனித உரிமைமீறல் மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுமுறை

1993 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளும் தமிழ்தீவிரவாத அமைப்புக்களும் கொழும்பில் சமாந்தரமான ரகசிய தடுப்புக் காவல் முறை ஒன்றை நடைமுறைப்படுத்தியதாக பலமனித உரிமை கண்காணிப்பாளர்களும் குற்றம் சாட்டினர். ஆகஸ்ட் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் ஆனுதாபிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட பலர், இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் இனம்தெரியாத இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டனர். பலர் உத்தியோகபூர்வமான தடுப்பு முகாம்களுக்கு மாற்றப்படுமுன் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

### தனிப்பட்டோர் உரிமை பறிப்பு

இன்னும் தனிப்பட்டவர்களின் ரகசியத்தைப் பாதுகாப்பதையும் குடும்பம் மற்றும் வீட்டின் புனிதத் தன்மையை பேணுவதையும் அரசாங்கம் பொதுவாக மதிக்க வேண்டும். அவசரகாலச் சட்டம் அளிக்கும் விசேட உரிமையால் நீதிமன்ற உத்தரவு இன்றி எந்த இடமும் எந்த வாகனமும் சோதனைக்குள்ளாக்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் தொலைபேசி உரையாடல்களும் ஏனைய தொடர்புகளும் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களுக்கு அனுப்பப்படும் சாதாரண கடிதங்கள் கூட உடைக்கப்படுகின்றன. நாணய நோட்டுக்கள் அபகரிக்கப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையில் நியாயமற்ற தலையீடுகளாக உள்ளன". ■

# தமிழருக்கு வழங்கப்பட்ட உணவு தென்பகுதிக்கு

உலக உணவுத் திட்டப் பிரிவால் வடக்கு -கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் அகதிகளுக்கென வழங்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை, சிறீலங்கா அரசு தென்பகுதி அகதிகளுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி பிரிவால் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு வழங்கவென அனுப்பி வைக்கப்பட்ட 19 கோடியே 20 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும் கொழும்பு, குருநாகல், அநுராதபுரம், மாத்தளை, பொலநறுவை, புத்தளம் ஆகிய இடங்களின் முகாம்களிலுள்ள 54 ஆயிரம் சிங்கள மக்களுக்கே வழங்க சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மனிதம் உயிர்க்கட்டும்

கன்னத்தின் வழியே
கண்ணீர்க் கோடு
காய்ந்த வயிறு.
உண்ண இல்லைச் சோறு.
கைகள் வலியெடுக்க
களை பிடுங்கினாள்.
வெய்யிலில் நின்று
வேகி அவிந்தாள்.

எட்டு மணித்துளியா?
இல்லையே!
அதற்கு மேலும்
முதுகொடிய
சுமை சுமந்தாள்.
இவள்
பட்ட துயரங்கள்
பகன்றிடற்கு
ஆளில்லையோ?
கூலித் தொகையோ
எட்டாவுயரத்தில்!

உயிர் சோர,
உடல் தேய நின்று
உருகி வேலை செய்யினும்
உழைப்பவள் பெண் என்று
ஊதியம் குறைத்தார்.
இவளுக்கு மட்டும்
புரியாத கேள்வி.
ஊன்று கோலின்றி
உயிர் வாழமுடியாதவளா?

வியர்வையின்
வெற்றிதினம் 'மே ஒன்று'
வந்துபோய்,
நூறாண்டு ஆனாலும்
கூலியில் பாகுபாடு.
நேற்றைய நிலையது வேண்டாம்
கணப்பொழுதும் ஓய்வின்றி
தேய்ந்துபோனவளே
உயர்த்தூக்கு கரங்களை!

பேதமைக் கற்கள்
கொண்டு கட்டிய
மூடக்கட்டிடம்
இடிந்து விழட்டும்!
உன் விழி நெருப்பால்
வேதனை எரியட்டும்!
மனிதம் உயிர்க்கட்டும்!

- உதயலட்சுமி



U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்